கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



KALKI • 30.08.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



பாண்டிச்சேரி
ஸ்பெஷல்

புற்றுநோய்க்கு ஒரே இடத்தில் தீர்வு!

ONE STOP SOLUTION FOR CANCER

- PET CT SCAN
- All Endoscopies
- Linear Accelerator & Brachy Therapy
- Radiation
- IGRT
- Surgical Oncology
- Medical Oncology



- பெட் சீடி ஸ்கேன்
- அனைத்து என்டோ ஸ்கோபி
- கதிர்வீச்சு
- லீனியர் ஆக்ஸிலரேடர் & உட்கதிர்வீச்சு
- IGRT
- புற்றுநோய் அறுவை சிகிச்சை
- புற்றுநோய் மருத்துவம்

இலவச ஆலோசனைக்கு:

(044) 2246 9200
(044) 66 300 300

PET CT CENTRE AT CANCER INSTITUTE (WIA)
CANAL BANK ROAD, GANDHI NAGAR, ADYAR, CH-20

24 HRS PHARMACY & AMBULANCE SERVICES AVAILABLE

Dr. KAMAKSHI MEMORIAL HOSPITAL

1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Ph: 2246 9200, 66300300 Fax : 22463282 66300400
E-mail: info@drkamakshimemorialhospital.org.
Website: drkamakshimemorialhospital.org.

கல்கி தீபாவளி மலர் 2009

பண்டிகைக்கு அர்த்தம் சேர்க்கும் நிறைவான நவரஸ விருந்து!



உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்யுங்கள் அல்லது கூரியர் மூலம் பெற ரூ.30 சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்:
விற்பனை மேலாளர், கல்கி தீபாவளி மலர், கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, சென்னை-600 032. தொடர்புக்கு: 044-4343 8844

சினி சிப்ஸ்

● 'குரு சிஷ்யன்' படத்தில்...



நியூஸ்பாய்



'காந்தர்வன்' ப

பழைய லடாய்களை மறந்து ஷக்தி சிதம்பரம் இயக்கத்தில் 'குரு சிஷ்யன்' படத்துக்காக மீண்டும் கைகுலுக்க உள்ளது வடிவேலு - சுந்தர்.சி கூட்டணி. ஏற்கெனவே ஷக்தி சிதம்பரம் - வடிவேலு இணைந்தால் படத்தில் காமெடி சரவெடியாக வெடிக்கும் என்பதால் இந்தப் படம் ஏகத்துக்கும் எதிர்பார்ப்பைக் கிளறி விட்டிருக்கிறது. ''கூடவே 'லொள்ளு' சத்யராஜ் வேறு இருப்பதால், காமெடிக்கு இன்னும் கூடுதல் கியாரண்டி கிடைத்தது போல'' என்கிறார் ஷக்தி சிதம்பரம். லாரன்ஸ் ராகவேந்திரா நடித்த 'ராஜாதி ராஜா'வுக்குப் பிறகு சினிமா பாரடைஸ் நிறுவனம் இந்தப் படத்தை இயக்குகிறது.

(காமெடியில யாரு குரு... யாரு சிஷ்யன்... டைரக்டர் சொல்வாரா?)

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் - சலங்கை துரை என்ற அறிவிப்போடு தயாரிப்பில் இருக்கும் படம் காந்தர்வன். தயாரிப்பது சௌத் இன்டியன் மூவி மேக்கர்ஸ். கதாநாயகன், நாயகி இருவருமே புதுமுகம். கதாநாயகனின் உண்மையான பெயர் சாமி. படத்துக்காக கதிர். கதாநாயகி ஹனிரோஸி, இந்தப் படத்துக்காக சௌந்தர்யாவாகி உள்ளார். யார் இந்த சலங்கை துரை? கரண் நடித்து 100 நாள் ஓடிய 'காத்தவராயன்' படத்தின் இயக்குநர்.

(முதல் படம் காத்தவராயன், இரண்டாவது படம் காந்தர்வன் அதென்ன 'கா' ரகசியம்!)

படத்தின் பெயர் 'பௌர்ணமி ராகம்'. ஏன் படத்துக்கு விட்டலாச்சார்யார் காலத்துப் பெயர் என்று யார் கண்ணனிடம் கேட்டோம். முதலில் கண்ணன் யார்? படத்தின் இயக்குநர். இவர் முதலில் இயக்கிய படத்தின் பெயர்தான் 'யார்'. ''நான் திகிலின் தத்துப்பிள்ளை. வாழ்வின் ஒவ்வொரு கணமும்

எனக்கு ஏதாவது ஒரு திகிலை அனுப்பிக் கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் என்னால் இயங்க முடியும்'' என்கிறார் கண்ணன். ஏற்கெனவே, யார், யுரேகா என்ற இரு திகில் படங்களை இயக்கியிருக்கிறார்.

(எங்களுக்கும் கொஞ்சம் திகிலாதான் இருக்கு)

காத்தவராயன், மலையனுக்குப் பிறகு கரண் நடிக்கும் படம் 'கனகவேல் காக்க'. இயக்குநர் ஹரி, சரண் இருவரிடமும் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த கவின்பாலா இயக்கும் முதல் படம்.

படத்தில் என்ன விசேஷம் என்று கேட்டால்,

''பணியாரக் கொண்டைக்காரி/ பலாச்சுளை உதட்டுக்காரி'' என்று கவிஞர் சினேகன் எழுதிய பாடலைப் பாடிக் காட்டும் கவின்பாலா, ''தினந் தோறும் பிரச்னையோடு விழித்து பிரச்னையோடு படுத்துறங்கும் ஒரு மனிதனைப் பற்றிய கதை'' என்கிறார்.

(படத்தை நாங்க பார்க்கலாமில்லையா... அதனால ஒன்னும் பிரச்னை இல்லையே...)



'கனகவேல் காக்க' படத்தில்...

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

● அ.யாழினி பர்வதம், சென்னை

கிரேஸிக்குக் கிடைத்த பெருமைக்குரிய 'ட்ரீட்' எது...?

கல்கி கேள்வி பதில்கள்... இந்த வேடிக்கை clownனுக்குக் கிடைத்த வைரத்தால் ஜோடித்த Crown. சிரிப்பு முல்லா தலையில் சிறப்புக் குல்லா.

● எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

இக்கட்டான நேரத்தில் கைகொடுப்பது கல்வி அறிவா, அனுபவ அறிவா?

செங்காலிபுரம் தாமோதர தீக்ஷிதர் சொற்பொழிவில் இந்தக் கேள்விக்குப் பதில் கிடைத்தது. கல்வி அறிவு கற்கண்டு நிரப்பிய தலைகாணியில் தூங்குவது. அனுபவ அறிவு கற்கண்டைச் சாப்பிடுவது.

● பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

பக்திக்கு எதிர்ப்பதம் நாத்திகமா, பகுத்தறிவா?

பக்தி உள்ள பக்தனுக்கு எதிர் எப்போதும் இருக்கும் பதம், பகவானின் பதம்.

● மீனா முருகேசன், தஞ்சாவூர்

சரித்திர நாயகரே... ஆன்மிகத்தின் வெளிப்பாடு எப்படி இருக்க வேண்டும்?

உள்-பாடு ஒய்வதே உண்மையான ஆன்மிக உணர்வு. அதன் வெளிப்பாடான அமைதி, சிங்கம், புலியைக்கூட 'ஸார் ஐ லவ் யூ' சொல்ல வைக்கும்.

● வரத.சண்முகசுந்தரவடிவேலு, வாழப்பாடி





கிரேஸிக்கு பிடித்த பூதம்?

உங்களுக்கு ஏன் இன்னும் பத்ம 'சிரி' பட்டம் கொடுக்கவில்லை?

ஒரேயடியாக பத்ம 'விதூஷகன்' கொடுத்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ!

● **எஸ்.சங்கர், திருப்பரங்குன்றம்**

பன்றிக் காய்ச்சலுக்குப் பின், பன்றியைப் பற்றிய தங்கள் அபிப்ராயம் என்ன?

ஏனமாய், அதாவது வராகமாய், அதாவது பன்றியாய் வந்து அன்று உலகம் காத்த அந்த பகவானிடம், வெண்பா எழுதி வேண்டிக் கொண்டேன்.

''ஏன வடிவெடுத்து ஏந்தி உலகெடுத்து
நீனர்(கு) அருள்புரிந்த
தெய்வமே - வான
வராகாநீ வைரஸ் வருமுன் தடுத்து
வராதுகா வைகுந்தா வா.''



● **கே.வி.ராமன், சேலையூர்**

இருபது ஓவர்கள் கிரிக்கெட் ஐந்து நாள் கிரிக்கெட்டை அழித்து விடுமா?

குஞ்சு மிதிச்சு கோழி சாகுமா?

N.கோமதி, நெல்லை

காலையில் கையில் பிரஷ்ஷுடன் வாயைத் திறந்தால்... ஆ!, தங்கப் பற்கள்....கிரேசியின் ரியாக்ஷன்?

முதலில் முளைத்த தங்கப் பற்கள், 32 காரட்தானா என்று தெரிந்து கொள்ள, அவற்றை ஒன்றோடு ஒன்று உரசிப் பார்ப்பேன்....பிறகு தங்கப் பற்கள் தந்த தெய்வத்துக்குப் பல்லாண்டு பாடுவேன். கடைசியில் 'ஆண்டவா... தங்கப் பற்கள் தந்து விட்டு, ஈறுகளை மட்டும் அப்படியே Gumனு விட்டு விட்டாயே' என்று தங்கப் பல் வாயைத் துணியால் பொத்திக் கொண்டு Chain Chainனாக(மாலை மாலையாக) அழுவேன்.

● **கே.ஆர்.தேவேந்திரன், வேலூர்**

தாயை மதிக்காமல் ஆலயம் தேடுவோர் பற்றி?

குற்றாலத்தில் இருந்து கொண்டு குழாயடியில் குளிப்பவர்கள்.

● **க.பாலாஜிகணேஷ், சிதம்பரம்**

இரக்கம் காட்டக்கூடாத இடம் எது....?

Common பாத்ரூம் Qவில் பின்னால் வருபவர்களுக்கு இரக்கம் காட்டினால்,

கிரேஸி ட்ரீட்

வாழ்த்துகள்...

கிரேஸி ட்ரீட் வின்னர்ஸுக்கு கிரேஸியின் பதில்கள் இந்த இதழில். செப்டம்பர் 6-ஆம் தேதி சென்னையில் கிரேஸியோடு கொண்டாட்டம். விவரங்கள் அடுத்த இதழில்... **(-ஆர்.)**

நம் இறக்கம் நம்மைக் காட்டிக் கொடுத்து விடும். இதுதான் கழிவிரக்கமோ!

● **ஷா, இந்திரா நகர்**

கர்லாகட்டை சுற்றி, வெயிட் லிஃப்டிங் செய்து 'முண்டா' ஏற்றியது உண்டா ?

இளமையில் கர்லாகட்டை சுற்றியது உண்டு. இப்பெல்லாம் யாராவது கர்லா கட்டையைத் தூக்கிக் கொண்டு வந்து வைத்தால், அதை அடிப் பிரதக்ஷணமாகச் சுற்றி வருவேன். தினமும் 65 கிலோ உடம்பைத் தூக்கிக் கொண்டு நடப்பது தான் நான் செய்யும் வெயிட்லிஃப்டிங். சம்பாதிப்பதில் Penny-wise... வெயிட் தூக்குவதில் Pound-Foolish!

● **சி.ஆர்.நாகராஜன், பொள்ளாச்சி**

Male, Female இருவரில் யார் மேல்?

அய்யா இது 2009... இனிமேல் யார் மேல் என்று கேள்வி கேட்காமல் இருப்ப வனே Male... கேட்டால் உம்மேல் Femaleகளெல்லாம் fine போடும் Fee-male ஆகிவிடுவார்கள்....!

● **ஜெ.செல்வராணி, மதுரை**

சிரிக்க வைத்தல் இன்பமா... சிரித்தல் இன்பமா?

சிரிக்க வைத்தல் தொழில்....சிரித்தல் தெய்வம்!

● **ஓ.விஜயகுமார், பொள்ளாச்சி**

Super-Man, Man என்ன வித்தியாசம்?

ஆகாசத்தில் அனாயாசமாக 'ஆளாய்ப் பறப்பவன்' Super-Man... தரையில் அனாவசியமாக 'ஆலாய்ப் பறப்பவன்' Man!

● **லெமூரியன், திருவண்ணாமலை**

குட்டிச் சாத்தான் என்பது போல, குட்டிக் கடவுள் இல்லையே....?

தோப்புக்கரணம் போடும்போது நாம் தலையில் குட்டிக்கொள்ளும் விநாயகர், பிரணவத்துக்குப் பொருள் கேட்டு பிரம்மன் தலையில் குட்டிய முருகர், இருவருமே பெரிய கடவுள் பெற்ற குட்டிக் கடவுள்கள்.

● **த.சத்தியநாராயணன், அயன்புரம்**

பஞ்ச பூதங்களில் பிடித்த பூதம் எது? ஏன்?

பிடித்த பூதம் காற்று. இந்த பூதத்தைப் (மூச்சுக் காற்று) பத்திரமாகப் பிடித்து வைக்காவிட்டால், பூதம் போய் நாம் பேய் ஆகிவிடுவோம்.

● **கு.உஷா, கும்பகோணம்**

மனிதனின் உயிர் எப்படிப் பட்டது?

பிரியமான உயிர் விட்டுப் பிரியப் பட்டது!

● **V.C.வெங்கடேஷ் , திருச்சி**

பிரம்மச்சாரி, சம்சாரி ஒப்பிடுக?

பிரம்மச்சாரி ஓரமாக நடந்து செல்லும் பாதசாரி. சம்சாரி டிராஃபிக்-ஜாமை சகித்துக்கொண்டு காரில் செல்லும் பரப்பிரம்மச்சாரி!

● **என்.பாலகிருஷ்ணன், மதுரை**

வாழ்க்கை நாடகத்தில் உங்கள் பாத்திரம் என்ன?


நடிக்கும் ஆடியன்ஸில் நானும் ஒருவன்!








இந்தப் பக்கத்திலுள்ள புத்தகங்கள் எழுதப்பட்டதற்குப் பின்னணியில் கிரியாஊக்கியாக ஒரே ஒரு புத்தகம் இருந்திருக்கிறது என்பது ஆச்சர்யப்படுத்தும் உண்மை. எது அந்தப் புத்தகம்? ஆய்வாளர்கள் யார் யார்? வாங்க 93-ம் பக்கத்துக்கு.







அப்பாவைப் பற்றிய அறிதல் என்பது எல்லா மகன்களுக்கும் வாய்த்துவிடுவதில்லை. தந்தைக்கும் மகனுக்குமான இடைவெளியில் அப்பா பிம்பம் கானல் நீர் போல காட்சியளிக்கும் இச்சூழலில்... அப்பாவின் அகப்பரணில் ஏறி ஆராய்ந்து அக்காலக் காதலை நம்முன் விரித்துக் காட்டுகிற செல்லுலாய்டு கல்வெட்டு இப்படம்.

அப்பா சேரன் சேமித்து வைத்திருக்கும் கடிதப் பொக்கிஷத்தை, டைரியாய் மாறியிருக்கும் காதல் ஆவணங்களை, மகன் ஆரியன் ராஜேஷ் புரட்டும்போது, கோலிவுட் காதல் அபத்தத் தீர்மானங்களும் புரண்டு போய்விடுகின்றன. எழுபதுகளில் நிகழ்ந்த அப்பாவின் காதல் சாறு இரண்டு ஆண்டுகளில் பத்திரப்படுத்தப்பட்ட பத்து கடிதங்கள் மட்டுமே. அப்பாவைப் பற்றி அகஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் ராஜேஷுக்கோ ஒரு மணி நேரத்துக்குள் நூறைத் தாண்டும் காதலியின் ஃபோன் கால்கள்... என இருவேறு கால காதல் தொடர்பு சாதனங்களை, போகிற போக்கில் ஒப்பிட்டுக் காட்டுகிறது. படம் முழுக்க அக்காலக் காதல் Vs இக்காலக் காதல், கடிதம் Vs SMS - இ.மெயில், அப்பாவின் காதல் Vs மகனின் லவ்வர் என ஒரு பட்டி மன்றத்தை, தலைப்பில்லாமலே பார்வையாளர் மனத்தில் நடத்தி முடிக்கிறார் சேரன்.

கோலிவுட்டுக்கு ஒரு நல்ல நடிகர் (சேரன்தாங்க!) கிடைத்துவிட்டார். தொழுகையினூடே காதலன் எண்ணம் திடீர் ஊற்றெனச் சுரந்துவிட, அதைக் குற்றவுணர்ச்சியோடு தவிர்க்கத் தவிக்கும் பத்மப்ரியாவுக்கு திருஷ்டி சுத்திப் போடணும்.

கவிதையைக் காட்சியாக மொழிபெயர்த்த (ஒளிப்பதிவு) ராஜேஷ் யாதவ், கடந்த காலத்தை நிகழ்காலத்தில் நிகழ்த்திக் காட்டும் மேஜிக் மாமணி (கலை இயக்குநர்) வைரபாலன் ஆகியோரின் முயற்சியால் ஒரு புதிய காதல் கோபுரத்தைக் கட்டியுள்ளார் சேரன். அன்புள்ள படவா... என்று காதலனைக் கொஞ்சும் பாட்டு காதல்கீதமாக எல்லா ஃபோன்களிலும் வலம் வரக்கூடும். அங்கதத்தைக் கொஞ்சம் அள்ளித் தெளித்திருந்தால் அலுப்பு தட்டாமல் படம் நகர்ந்திருக்கும். சரி கதை என்ன...? ஒருமுறை போய்த்தான் பாருங்களேன்!

பொக்கிஷம்

- மணிமேகலை



ஸ்வானுபவா அடுத்த ஆண்டு அயலூர் போனாலும், அட்டெண்ட் செய்ய வேண்டும் என்ற ஆவலைத் தூண்டிவிட்டன, நிகழ்ச்சி வர்ணனையும் கல்கியின் துக்கடாவும்!

- எஸ்.ஜானகி, சென்னை-17

பன்றிக்காய்ச்சலுக்கு எளிய பயிற்சி முறை வைத்தியமாக பிராணாயாமத்தை ஆரோக்கியக் குறிப்பாக தலையங்கத்தில் கூறியது சூப்பர்!

- எஸ்.முரளி, ஸ்ரீரங்கம்

சேனல் சர்ச்சையில், ரியாலிட்டி ஷோவில் பல குடும்பங்கள் பிரிய நேரிட்டால் ஆச்சர்யமில்லை!

- பாக்கியம் வெங்கடரமணன், சென்னை-4

எடியூரப்ப வள்ளுவர், சர்வக்ஞ கலைஞர் கார்ட்டூன் நல்ல satire கற்பனை!

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

'ரீடர்ஸ் பேஜ்' படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அற்புதமான பக்கங்கள்!

- ஆர்.ஏ.அமுதன், சென்னை-10

விட்டலன் ஜனாபாயுடன் உணவு அருந்தி, அவளுடைய கந்தை ஆடை படுக்கையிலேயே உறங்கியது அவளுடைய எளிமையை அழகாகச் சித்திரித்தது.

- டி.வி.ராமமூர்த்தி, சென்னை - 119

ஷங்கர் ஹீரோவாக நடிக்கப் போகிறாரா? நியூஸ் பாயின் செய்தியைப் படித்து, எனக்குக் குளிர்காய்ச்சலே வந்துவிட்டது!

- எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

'கிராமத்து வெளி' ஃபோட்டோ கவிதை ஆறும் அறுசுவை விருந்து. புகைப்படம் எடுத்த நாஞ்சில் சினிலோக் நெஞ்சில் நிறைந்தார்.

- எஸ்.கலோச்சனா, சென்னை - 33

கல்கியைப் படிக்கும்போதெல்லாம் ஸ்வீட், காரம், காஃபி, பீடா சாப்பிட்ட மாதிரி உணர்வைத் தருகின்றது.

- ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி

வண்ணத்தூரிகையில் வாராவாரம் அமரர் கல்கியின் டச், இளைய தலைமுறையினருக்கு வரப்பிரசாதம்!

- என்.பங்கஜம், சென்னை - 88

கவிராயரின் பாக்யலக்ஷ்மியும் வெளவால்களும் சிறுகதை, பாக்கியலக்ஷ்மிகளை எண்ணி மனம் கனக்க வைத்துவிட்டது!

- சாந்தி சுந்தர், நெய்வேலி

வாசகர் கவிதைகள் எல்லாம் அருமை! இனி வாரம் இரண்டு பக்கம்

ஸ்வீட்... காரம்...



படம் : சினிலோக்

வட்டமேஜை

வாசகர் கவிதைகளுக்கு ஒதுக்கி உற்சாகப் படுத்துங்களேன்!

- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

நீதிமன்றத்தில் வழக்குகள் தேக்கம் குறித்த கேள்விக்கு கவிதைத்தனமாகவும், நன்கு உறைக்கும் விதமாகவும் பதில் தந்திருந்த தராசுக்கு பாராட்டுகள் பல!

-ப.கோபி, கிருஷ்ணகிரி

'ரியாலிட்டி ஷோ' என்ற பெயரில் பரபரப்பை ஏற்படுத்தி பணம் பண்ணும் சேனல்களை மக்கள் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்க வேண்டும்!

- எல்.மோகனசுந்தரி,
கிருஷ்ணகிரி

கல்கி..!

பாண்டிச்சேரி செய்திகள் :

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு,
ப்ரியன்

துப்பறிய வாங்க
போட்டி - 7 முடிவு

சரியான விடையை எழுதியவர்களுள் குலுக்கல் மூலம் தலா ரூ.200/- பரிசு பெறுபவர்கள்:

1. சி.ஆர்.நாகராஜன், பொள்ளாச்சி
2. என்.சீத்தாலட்சுமி, சென்னை
3. சு.இந்துமதி, நெய்வேலி
4. ஆர்.நாகராஜன், சென்னை
5. கல்யாணி பாலு, புதுக்கோட்டை

பூப்போல... பூப்போல... முகம்..!



காஸ்மெடிக்ஸ் உபயோகிக்காத பெண்ணும் உண்டோ? ஃபேஷியல், ஹேர் மஸாஜ், ப்ளீச்சிங், பாடிக்யூர், மானிக்யூர்... என ப்யூட்டி பார்லர் போய் ஏகமாகப் பணத்தைச் செலவழித்துவிட்டுப் பூரண திருப்தியுடன் வீடு திரும்புவ தில்லை பெண்கள். துவரம் பருப்பு கூட ஈஸியாக வாங்கிவிடலாம். காஸ்மெடிக்ஸ் வாங்குவது வெகு கஷ்டம்.

இச்சனில் அன்றாடம் நாம் உபயோகிக் கும் பொருட்களிலேயே அழகுசாதனப் பொருட்கள் இயற்கையாகவே கொட்டிக் கிடக்கின்றன. பால் மற்றும் தேன்... இந்த இரண்டு பொருட்களுமே எல்லோர் வீட்டி லும் இருக்கும்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பே தேன் மற்றும் பால், அழகு சாதனமாக இருந்து வந்திருக்கின்றன. கிளியோபாட்ரா பாலில் குளித்த பேரழகி என்பது ஊரறிந்த தகவல்! நீரோ மன்னனின் மனைவி பாப்பி என்றென்றும் இளமையாக இருக்க வேண் டும் என ஹனி மில்க் லோஷன் உப யோகித்தானாம்.

பால்:

★ சருமம் ஸாஃப்ட்டாக, ஸ்மூத்தாக இருக்க இரண்டு ஸ்பூன் காய்ச்சாத பாலை எடுத்து, பஞ்சில் தோய்த்து முகத்தில் தடவுங்கள். அரை மணி நேரம் கழித்து முகத்தை வெதுவெதுப்பான நீரில் கழுவ வும்.

★ இரண்டு டேபிள் ஸ்பூன் பாலில் ஒரு டீஸ்பூன் உப்பு கலக்கவும். இரவு படுக்கப் போகும் முன் முகத்தில் தடவ வும். காலையில் ஃபேஸ் வாஷ் பண்ணிய வுடன் கண்ணாடியில் 'பூப்போல பூப் போல சிரிக்கும்...' உங்கள் முகம்!

★ கலர் இம்ப்ரூவ் ஆகணுமா? டோண்ட் வொர்ரி... ட்ரை திஸ்... பாலில் ஆரஞ்சு ஜூஸ், காரட் ஜூஸ், தேன் கலந்து முகத்தில், கழுத்துப் பகுதி, கைகளில் தடவி பதினைந்து நிமிடங்கள் ஊறியபிறகு கழுவவும்.

★ சருமம் தளர்ந்து போகாமல் இருக் கணுமா? பால் ஏட்டில் ரோஸ் வாட்டர் + தேன் கலந்து, முகம் மற்றும் கழுத்தில் தடவி, பதினைந்து நிமிடங்கள் கழித்து முகம் கழுவவும்.

★ பச்சைப் பயறை ஆலிவ் ஆயிலில் சிவப்பாக வறுத்துக் கொள்ளவும். ஆறிய பிறகு பால் விட்டு மையாக அரைத்துக் கொள்ளவும். சிறிது எடுத்து முகம், கழுத்து, கைகளில் தினசரி தடவி வரவும். ரிஸல்ட் எக்ஸலண்ட்.

இனி தேன்: (முகத்தில் தடவும்போது புருவங்களின் மீது படாமல் தடவவும்.)

★ முடி பளபளக்க வேண்டுமா? நாலு கப் வெதுவெதுப்பான நீரில் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து வைக்கவும். ஷாம்பூ, சீயக் காய் போட்டு முடி அலசிய பிறகு கடைசி யாக தேன் கலவையைத் தலைமுடியில் கொட்டவும். இதைப் போட்ட பிறகு தண்ணீர் விட்டு அலசக் கூடாது... ஷைன் முடிதேன்... ஒரு பளபளப்புதேன்...

★ வெள்ளரிக்காயைத் துருவி மிக்ஸி யில் அரைத்து வடிகட்டி அதில் இரண்டு டீ ஸ்பூன் தேன் சேர்க்கவும். பஞ்சால் எடுத்து முகம், கழுத்தில் தடவவும். சில நிமிடங்கள் கழித்து வார்ம் வாட்டரில் முகம் கழுவவும். தினசரி செய்யவும்.

★ தேன் ஒரு சூப்பர் ஸ்கின் டோனர்.

ஆப்பிளை மிக்ஸியில் வெண்ணெயாக அரைத்து, அதில் தேன் கலந்து முகத்தில் தடவி, பதினைந்து நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகம் கழுவவும்.

★ முட்டையின் வெள்ளைக் கருவில் ஒரு டேபிள் ஸ்பூன் தேன் மற்றும் கடலை மாவு கலந்து திக் பேஸ்ட்டாக்கி வைக்கவும். முகம் + நெக்கில் தடவி பத்து நிமிடங்கள் கழித்து சூடான நீரில் கழுவவும்.

★ நன்றாகப் பாடணுமா? மியூஸிக் அகாடமி, நாரத கான சபாவில் கச்சேரி பண்ணணுமா? சிம்பிள். ஒரு டீஸ்பூன் தேன் எடுத்து அப்படியே சாப்பிடணும். வோக்கல் கார்டுக்கு அவ்வளவு நல்லது.

★ தேன், ஒரு எனர்ஜி பூஸ்டர். இதில் ஏராளமான வைட்டமின், மினரல்ஸ், க்ளுகோஸ் மற்றும் ஃப்ரக்டோஸ் கொட்டிக் கிடக்கின்றனவாம். தினசரி தேன் சாப்பிட்டு வந்தாலே சுறு சுறுப்பு சைத்தானாக வளைய வருவீர்கள். எனர்ஜி எல்லம்மா என்ற நிக் நேம் வேறு கிடைக்கும்.


★ தேனைச் சுட வைத்தோ கொதிக்க வைத்தோ சாப்பிடக்கூடாது. நல்ல அம்சங்கள் நாசமாகி விடும்.

- லதா சேகர்





கல்கி



2009 ஆகஸ்ட் 30
விரோதி ஆவணி 14
மலர் : 68
இதழ் : 5

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

பா.ஜ.க.வின் தடுமாற்றம்!

தேர்தல் தோல்வியால் விளைந்த பின்னடைவு போதாதென்று, பா.ஜ.க.வின் மூத்த தலைவர்கள் சிலரது நடவடிக்கைகள் அக்கட்சியின் மதிப்பை அதிவேகமாகக் குறைத்து வருகின்றன! மாநில, நாடாளு மன்றத் தேர்தல்களில் அடுத்தடுத்து ராஜஸ்தான் மாநிலத்தில் அடைந்த தோல்விக்கு, முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியாவைப் பொறுப்பாக்கி, பலிகடாவாக்க முயன்றது பா.ஜ.க. தலைமை! எதிர்க் கட்சித் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யவும் அவரை வற்புறுத்தியது! அவரது ஆதரவாளர்கள் எதிர்பாராத விதமாகத் திரண்டெழுந்து, தங்கள் ஆதரவைப் பிரகடனப்படுத்த முன்வரவும், பா.ஜ.க. தலைமை அடக்கி வாசித்தது! வசுந்தரா ராஜேவும் ராஜஸ்தான் பா.ஜ.க.வைப் பிளவுறச் செய்யாமல் சற்று அடங்கியிருக்கிறார்! அதற்குள் பா.ஜ.க. தலைமையானது சிந்தியா ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் இருவரை, கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்துவிட்டது! இந்த அமளியில் யார் பதுங்கிப் பாய்கிறார்கள், யார் மறைந்து தாக்குகிறார்கள் என்பது புதிராகவே நீடிக்க, பா.ஜ.க.வின் மூன்றுநாள் சிந்தனை அரங்கமும் நிகழ்ந்தேறியிருக்கிறது!

மாநில அரசியலானாலும் சரி, தேசிய அரசியலானாலும் சரி, உட்கட்சி ஜனநாயக மரபுகளுக்கு உட்பட்டு, கட்சி உறுப்பினர்களின் முடிவாக தலைமை மாற்றம் நிகழ்வதே முறையானது. அதையும் அத்வானி செல்வாக்குடன் விளங்கும் காலத்திலேயே செய்தால், கட்சியில் நல்ல மரபுகளை உருவாக்கியதாகும். அடுத்து வரும் தலைமுறையினருக்கு வழிகாட்டியதாகவும் இருக்கும்.





இப்போதோ, பல மாநிலங்களில் தொண்டர்கள் மட்டுமின்றி, கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும்கூட அதிருப்தியில் உள்ளார்கள்! யஷ்வந்த் சின்ஹாவுக்கு மனத்தாங்கல்! ஜஸ்வந்த் சிங், தமது பக்கம் கவனம் திரும்ப ஒரு புத்தகம் எழுதுகிறார். அதில் ஜின்னா, நேரு, படேல் போன்ற தலைவர்களைப் பற்றிய சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிடுகிறார். பா.ஜ.க. தலைமை அந்தப் புத்தகத்துக்கும் கட்சிக்கும் சம்பந்தமில்லை என்று கை கழுவுகிறது! அடுத்து ஜஸ்வந்த் சிங்கையே கட்சியிலிருந்து நீக்கி கைகழுவி விடுகிறது!


இதே ரீதியில் ஜின்னா பற்றிய கருத்துகளை ஒருமுறை அத்வானி வெளியிடப்போக, அவர் பதவி விலக வேண்டி வந்தது. பின்னர் ஒருவாறு சமாளித்து, மறுபடி கட்சியினரின் நன்மதிப்பைப் பெற்றார். இது தெரிந்தும் ஜஸ்வந்த் சிங் சர்ச்சையில் ஈடுபட முனைந்திருப்பது அவர் கட்சிக் கட்டுக்கோப்பைப் பற்றிக் கவலைப்படவில்லை என்பதையே உணர்த்துகிறது.

பா.ஜ.க. தலைவர்கள் பலர் இன்னமும் அந்த 600 பக்க புத்தகத்தைப் படிக்கவேயில்லை என்றபோதிலும் கட்சி கலகலத்துப் போயிருக்கிறது!

வரலாறு என்பது, அதைப் பார்ப்பவர் அணியும் கண்ணாடிக்கு ஏற்ப நிறம் மாறத்தான் செய்கிறது. ஆகவே, அரசியல்வாதிகள் வரலாற்று நூல்களோ வரலாறு பற்றியோ எழுத முற்படுகிறபோது, நம்பகத்தன்மையைக் காட்டிலும் சர்ச்சைகளே மிகுந்திருக்கும்.

சர்ச்சைகளைக் கிளப்பிவிட்டு, கட்சிக் கட்டுக்கோப்பைக் கலைப்பதற்குப் பதிலாக, ஆக்கபூர்வமான வகைகளில் செயல்பட்டு கட்சியைப் பலப்படுத்துவதே விரும்பத்தக்கது.

இதற்கு, நவக்கிரஹங்களாக முரண்பட்டுள்ள பா.ஜ.க. தலைவர்கள் ஒருங்கிணைய வேண்டும். ஹிந்துத்வா அஜெண்டாவைக் கைவிட்டுவிட்டு, இந்தியாவுக்கான வளர்ச்சி அஜெண்டாவை உருவாக்க வேண்டும். அதை முன் வைத்து வோட்டுக் கேட்க, சிறந்ததொரு செயல்வீரர் படையை அமைத்து, பயிற்சி தரவேண்டும். அவ்வாறின்றி சர்ச்சைகளே தொடருமானால், பா.ஜ.க.வின் எதிர்காலமே விரைவில் கேள்விக்குறியாகிவிடும். ●



வண்ணத் தூரிகை

அமரர் கல்கி

ஒரு சமயம் நான் பாபநாசத்துக்குச் சென்றிருந்தேன். எதற்காகப் போனேன் என்று கேட்டால் நீங்கள் ஒரு வேளை சிரிப்பீர்கள்; சிலர் அனுதாபப்படுவீர்கள். பி.ஏ. பரீட்சைக்கு மூன்று தடவை போய் மூன்று தடவையும் தவறிவிட்டேன். இதனால் வாழ்க்கை கசந்து போயிருந்தது. ஒரு மாதிரி பிராணத் தியாகம் செய்துவிடலாம் என்ற முடிவுக்கே வந்துவிட்டேன். திடீர் திடீர் என்று நமக்குத் தெரிந்தவர்கள் யார் யாரோ இறந்து போய்விட்டதாகக் கேள்விப்படுகிறோம். ஆனால் நாம் அவர்களைப் பின்பற்றலாம் என்றால், அதற்கு வழிவகை தெரிவதில்லை. யோசித்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன். பாபநாசத்தில் கல்யாணி தீர்த்தம் என்பதாக ஓர் இடம் இருக்கிறதென்றும், அதிலேதான் ஆசிரியர் வ.வே.சு. ஐயர் விழுந்து உயிரை இழந்தார் என்றும் கேள்விப்பட்டிருந்தேன். அந்தப் பெரியாரைப் பின்பற்றலாம் என்று எண்ணிக்கொண்டுதான் பாபநாசம் போனேன்.

இரண்டு காரணங்களினால் நான் உத்தேசித்த காரியத்தை நிறைவேற்ற முடியவில்லை. முதலாவது, அந்தக் கல்யாணி தீர்த்தம் இருக்கிறதே, அது பார்க்க மிகப் பயங்கரமாயிருந்தது. தென்னைமர உயரத்திலிருந்து மூன்று தண்ணீர்த் தாரைகள் 'சோ' என்ற சத்தத்துடன் கீழேயுள்ள அகண்ட பள்ளத்தில் விழுந்து கொண்டிருந்தன. அந்தப் பள்ளத்தில் தண்ணீர் நிறைந்து ததும்பி அலை மோதிக்கொண்டிருந்தது. சிறிய மரக்கிளை ஒன்று அத்தடாகத்தில் விழுந்து அங்குமிங்கும் சுழன்று அலைக்கப்படுவதைப் பார்த்தேன். இதிலே விழுந்தால் நம்முடைய தேகமும் இப்படித்தானே அலைக்கப்படும் என்று நினைத்தபோது என் தைரியம் குலைந்துவிட்டது. அன்னை பெற்றெடுத்த நாளிலிருந்து எத்தனை கஷ்டப்பட்டு வளர்த்த உடம்பு இது! இதற்கு எத்தனை எண்ணெய், எத்தனை சோப்பு! எத்தனை ஆடை அலங்காரம், எத்தனை வகை வகையான அன்னபானம்-அடடா! இதைப் புகைப்படம் பிடிப்பதற்காக மட்டும் எத்தனை செலவு! இவ்வாறெல்லாம் பேணி வளர்த்த உடம்பு அந்தப் பயங்கரமான தடாகத்தில் சுற்றிச் சுழன்று கொண்டிருப்

பது என்னும் எண்ணத்தை என்னால் கொஞ்சங்கூடச் சகிக்கவே முடியவில்லை.

அங்கிருந்து இறங்கி வந்து கீழே பாபநாசம் கோயிலுக்குப் பக்கத்தில் பளிங்கு போன்று தெளிந்த நீரோடும் நதியின் கரையில் உட்கார்ந்து யோசித்தபோது, எதற்காக உயிரை விடவேண்டும் என்றே தோன்றிவிட்டது. நதியின் வெள்ளத்தில் மந்தை மந்தையாகத் தங்கநிற மீன்கள் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன. அவை மேலே வரும்போதும் புரண்டு விழும்போதும் என்னமாக ஜொலித்தன! இந்த மீன்கள் இவ்வளவு குதூகலமாக விளையாடிக் கொண்டு திரிகின்றனவே, பி.ஏ. பரீட்சையில் தேறாததனாலே இவற்றுக்கு என்ன குறைவு வந்துவிட்டது! இதோ இந்த மரங்களில் எத்தனை விதமான பட்சிகள் எவ்வளவு ஆனந்தமாகப் பாடிக்கொண்டு வாழ்கின்றன! இவை பி.ஏ. பரீட்சையில் தேறவில்லையே! இதோ இந்தக் குரங்குகளைத்தான் பார்க்கலாமே! பி.ஏ. பட்டம் பெறவில்லையே என்று அவை கொஞ்சமாவது கவலைப்படுகின்றனவா? ஆணும் பெண்ணும் எவ்வளவு உல்லாசமாக மரங்களின் மீது ஏறியும் இறங்கியும் கிளைக்குக் கிளை பாய்ந்தும் வாழ்கின்றன! தாய்க் குரங்கு அந்தக் குட்டிக்குரங்கையும் சேர்த்து அணைத்துக் கொண்டு மரத்துக்கு மரம் தாவுகிற அழகை என்னவென்று சொல்வது!

அறிவில்லாத பிராணிகளும் பட்சிகளும் இவ்வளவு உல்லாசமாக வாழ்க்கை நடத்தும்போது, நாம் மட்டும் பி.ஏ. பரீட்சை தேறவில்லை என்பதற்காக ஏன் உயிரை விட முயல வேண்டும்?

- 'ஒற்றை ரோஜா' நெடுங்கதையிலிருந்து...

பாபநாசம் பயணம்!





5

டால்மியாபுரம் கணேசன்

"பெரியவா ஒரு வார்த்தை சொன்னா, அதுல ஆயிரம் அர்த்தம் இருக்கும். இப்ப புரியறது. ஆனா, அன்னிக்கு நம்ம புத்திக்கு எட்டலியே?

'ஏன் இப்படிச் சொன்னார்?'னு மட்டும் தான் கேள்வி வந்தது. 'குழந்தைக்குக் கல்யாணம் பண்றதுல தப்பு என்ன இருக்கு? தகப்பனோட கடமையைத் தானே செய்யறோம்?'ன்னு நமக்குச் சாத கமா மட்டுமே யோசிக்க வெச்சது.


'பையன் நல்ல உத்யோகத்துல இருக் கான். பொண்ணு போற இடத்துல கண் கலங்க மாட்டா.' இதைத்தானே ஒவ்வொரு தகப்பனும் நினைப்பான். நான் மட்டும் விதிவிலக்கா என்ன?

பெரியவா சொன்னதைச் சொல்லி, சாரதத்தைக் கவலைப்படுத்த வாண்டாம்னு அவகிட்ட சொல்லலை. பெரியவா சொன்ன மாதிரியே கல்யாணம் நல்ல படியா நடந்தது."

பேசிக்கொண்டே வந்த கிருஷ்ண மூர்த்தி துண்டால் முகத்தை ஒத்திக் கொண்டார். நீரை எடுத்துப் பருகி 'சர்வேஸ்வரா' என்று மெல்லிய குரலாய் முனகினார்.

அவரது தோற்றத்தைப் பார்த்ததுமே, அடுத்து சிக்கலான சூழலைப் பேசப் போகிறார் என்று புரிந்தது அரவிந்தனுக் கும், பூரணிக்கும்!

"மாப்பிள்ளைகள் மூணு பேரும் என் குடும் பத்தோட சௌஜன்யமா பழக ஆரம்பிச்சா. என்னோட தொழிலைப் பத்தியெல்லாம் விஸ்தாரமா பேசி, விவரம் எல்லாம் தெரிஞ்சுண்டா. ஒரு நாள் மூணு பேரும் சேர்ந்து வந்து, 'ஓய்வு நேரத்தில் தொழில்லே உங்களுக்கு ஒத்தாசையா இருக்கோம் மாமா. அதனாலே நாம ரெண்டு கல்யாண மண்டபத்தை லீஸுக்கு எடுத்துக்கலாம். இன்னும் நாலு மண்ட பத்திலே - அங்கே உள்ள மேனேஜரை கையிலே போட்டுண்டு, நாம்பளே முக்கிய மான கல்யாணத் தேதிகளை ஏதாவது பேரைப் போட்டு புக் பண்ணி வச்சுக்க லாம். மண்டபம் கேட்டு வரவாகிட்டே மேரேஜ் காண்ட்ராக்ட் நமக்குக் குடுத் தான்னா முன்னாலே புக் பண்ணவா கிட்டே சொல்லி கேன்ஸல் பண்ணி, புதுசா வர்றவாளுக்குக் கொடுக்கறேன்னு சொல்ல வைக்கலாம்.



சங்கராபுரம்

முக்கால்வாசி மண்டபத்திலே தேவையான பாத்திரங்கள் இல்லே. அதனாலே நான்கு செட் பாத்திரங்கள் நாம்பளே வாங்கிப் போடணும். இதெல்லாம் வச்சுப் பாதுகாக்க ஒரு கோடவுன் வாடகைக்குப் பிடிக்கணும்.

இதுக்கெல்லாம் செலவு ஜாஸ்தியாகுமேன்னும் நீங்க பயப்பட வேண்டாம். பேங்க்லே லோன் கிடைக்குமான்னு நாங்க மூணு பேரும் போய்க் கேட்டோம். யாருக்குன்னதும் உங்க பேரைச் சொன்னேன். கிருஷ்ணமூர்த்தி ஐயரா - ரொம்ப நல்ல மனுஷர் - நாணயமா, நேர்மையா தொழில் பண்றவர். அவரை அழைச்சுண்டு வாங்கோ! நிச்சயமா உதவி பண்றேன்னுட்டார்' என்றார்கள்.

முகஸ்துதிக்கு மயங்காதவா யாரு? இதையெல்லாம் கேட்டதும் நேக்கே ஒரு மாதிரியாயிருந்தது. இருந்தும் இப்படி அகடவிகடம்லாம் பண்ணி, தொழில்லே சத்யம் தவறிடுவோமோன்னு பயமும் குழப்பமுமாகவும் இருந்தது. சாரதத்தோட அபிப்ராயத்தைக் கேட்டேன்.

'அவா பேசறதெல்லாம் நானும் கேட்டுண்டுதான் இருந்தேன். சும்மா சொல்லப்படாது. பேச்செல்லாம் தேன்

"எழுந்திருடா... பொறப்பட்ட எடத்துக்கே வந்து சேர்" -ஸ்வாமியின் குரல் கேட்ட மாதிரி இருந்தது!

ஒழுகத்தான் இருந்தது. ஆனா, அகலக்கால் வைக்கறோமோன்னு தோணறது. அப்புறம் உங்க இஷ்டம்' என்றாள் சாரதம்!

நான் பண்ண ஒரே தப்பு, எல்லாத்துக்கும் மடத்து மேனேஜர்கிட்டே யோசனை கேட்டவன், இந்த விஷயத்திலே அவரைக் கலந்துக்காததுதான்.

ஒரு ஆறு மாசத்துக்கு எல்லாம் ஒழுங்கா போயிண்டிருந்தது. அப்புறமாதான் மாப்பிள்ளைகள் மூணு பேரும் என்னோட மூலதனத்தை வச்சு தனியா கல்யாண காண்ட்ராக்ட், மாம்பலம், மந்தைவெளி, ராயபுரத்திலெல்லாம் சாப்பாட்டு மெஸ் நடத்தறதா காதிலே விழுந்தது. தீர விசாரித்ததிலே உண்மைதான்னு புரிஞ்சுது. பேங்க் லோன் சரியா திருப்பிக் கட்டப்படலே.

பெண்கள், மாப்பிள்ளை மூணு பேரையும் கூப்பிட்டு 'ஏன் இப்படி நம்பிக்கைத் துரோகம் பண்ணினேள்?'னு சத்தம் போட்டேன். மொதல்லே மறுத்தார்கள்; ஆதாரத்தைக் காட்டியதும் பேச்சு இல்ல.

'எத்தனை நாளைக்கு உங்களுக்கே உழைச்சுக் கொட்றது? எங்களுக்கும் குழந்தைகள், குடும்பம்னு ஆயிடுத்து. நாங்களும் நாலு காசு சேர்க்க வேண்டாமா?'

'நீங்கதான் திரும்பிப் பார்த்தா காஞ்சிபுரத்திலே போய் நிக்கறேள். எல்லாத்தையும் மடத்துக்கு எழுதி வச்சுட்டா? அப்புறம் எங்க கதி என்னாறது? ஏற்கெனவே கிடைக்கற வருமானத்திலே கால் பங்கு அங்கேதானே போயிண்டிருக்கு?'

மூணு மாப்பிள்ளைகளும் மாறி மாறி பேசிண்டே இருந்தா. இதையெல்லாம் கேட்டிண்டிருந்த சாரதம் நொறுங்கிப் போயிட்டா.

'இப்படி மோசம் போயிட்டேளேன்னா! ஆரம்பத்திலேயே சொன்னேனே... கேட்டேளா?' என்று அழத்துவங்கியவள் மயங்கிக் கீழே சரிந்தாள். ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போனோம். 'மூளையில் ரத்தக் குழாய் வெடிச்சிருக்கு. தீவிர

அருள்வாக்கு

'நமக்கு வருகிற கஷ்டத்தைப் பிறத்தியான் போக்கணும். நமக்குத் தரித்ரமா, பிறத்தியான் நமக்கு அள்ளிக் கொடுக்கணும். நமக்கு வியாதியா, பிறத்தியான் சுச்ரூஷைப் பண்ணணும். நமக்கு ஒரு காரியம் பாரமா இருக்கா, அதைப் பிறத்தியான் தலையில் கட்டிவிட வேண்டும்'- இப்படித்தானே நாம் நினைக்கிறோம்? இதை அப்படியே மாற்றி நம் இடத்தில் பிறத்தியானை வைத்து, அவனுக்கு எந்த விதத்தில் கஷ்டமானாலும் அதை நாம் போக்கணும் என்று ஆக்கிக் கொண்டால், அதுதான் 'ஆத்மௌபம்யம்'. அன்பு என்ற ஒன்றை வளர்த்துக் கொண்டால் இந்த ஆத்மௌபம்யம் தன்னால் ஸித்தித்துவிடும். விச்வ வியாபகமான அன்பு இல்லாமல் நம்மிடம் மாத்திரமே நாம் அன்பு பாராட்டிக் கொண்டிருக்கும்போது, பிறத்தியானுக்கு ஸௌக்கியம் தருகிற எல்லாமும் நம்மிடம் வந்துவிடவேண்டுமென்று நினைக்கிறோம்; உத்தமமான அன்புக் குணம் நமக்கு வந்துவிட்டாலோ இது அப்படியே மாறி, பிறத்தியாருக்கு நம்முடைய ஸகலத்தையும் கொடுத்துவிடவேண்டுமென்று தோன்றிவிடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

மான வைத்தியம் பண்ணிண்டு இருக்கோம். பன்னிரண்டு மணி நேரம் போனா தான் எதுவும் சொல்லலாம்'- என்றார் டாக்டர்.

புண்ணியவதி ரெண்டுமணி நேரத்திலேயே கண்ணை மூடிவிட்டாள்.

எல்லாச் சூழ்நிலையிலயும் எனக்குத் துணையா இருந்தவளும், இப்ப என்னைத் தனியா விட்டுட்டுப் போய்ட்டா...''

பேசும்போதே குரல் கம்மியது அவருக்கு. கண்ணீர் பெருகி தாடியை நனைத்து நெஞ்சில் விழுந்தது. பெருக்கெடுத்த உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த அவர் பிரயாசைப்படுவது புரிந்தது. கண்களை மூடியபடி சற்றுநேரம் மௌனித்தவர், மீண்டும் கண்களைத் திறந்தார். முகத்தில் தென்பட்ட தளர்ச்சி, பேசும் போது இல்லை.



''மடத்துக்குச் செய்தி சொல்லப்பட்டது. எல்லா சிக்கலையும் நேர் செய்ய மேனேஜர் பொறுப்பு எடுத்துக்கொண்டார்.

பதினான்கு நாள் காரியமும் முடிந்ததும் வரவு செலவு கணக்கெல்லாம் பார்த்தோம். மாப்பிள்ளைகள் சுருட்டிக்கொண்டு போனது போக - பாக்கி சாமான்கள், கார், வேன் எல்லாத்தையும் வித்து, பேங்க் கடனை அடைச்சது போக- ரூ.20,000/- மிஞ்சித்து.

மிஞ்சினது ஹோட்டல், கட்டிடம், இருபதாயிரம் பணம். அதுல ஐயாயிரத்தை மடத்துக்குச் செலுத்தினேன். ஆரம்பத்துல இருந்து என்னோட உழைச்சவங்களுக்கு ஹோட்டலையும், இடத்தையும் எழுதித் தந்தேன். மீதிப் பணத்தைத் தொழில் நடத்த வெச்சக்கோன்னு கொடுத்துட்டுக் கிளம்பினேன்.

என்னோடதுன்னு மிச்சம் மடத்திலேருந்து கொண்டு வந்த கரண்டியும் ஜாரிணியும்தான். அதை எடுத்துண்டு கிளம்பினேன்.

எறைப்பு வாங்கித்து. தலையைச் சுத்தற மாதிரி இருந்தது. வழியிலேயே ஒரு இடத்துல சாஞ்சுட்டேன்.

'எழுந்திருடா! பொறப்பட்ட எடத்துக்கே வந்து சேர்' ஸ்வாமிகள் குரல் கேட்ட மாதிரி இருந்தது. சொன்னா நம்பறதுக்குக் கஷ்டம். ஆனா, முகத்தில் நீர் தெளித்திருந்தது. என் வழுக்கைத் தலையைத் தடவிப் பார்த்தப்போ சோபன அக்ஷதை தென்பட்டது.

விருட்டென்று எழுந்து கோணிப்பையைத் தூக்கிண்டு நடந்தேன். சைதாப்பேட்டை பாலத்தருகே நடந்து போகும்போது, கார் ஒன்று பக்கத்தில் வந்து நின்றது. 'காஞ்சிபுரம் போறேளா? ஏறிக்கோங்கோ! நாங்களும் மடத்துக்குத்தான் போயிண்டுருக்கோம்' என்றனர்!

எதுவும் புரியாமல் ஏறி அமர்ந்தேன்.''

(தொடரும்)








ராஜ்குமார் ஸ்தபதி :
(பாண்டிச்சேரி ஆரோவில்)

"வேலையும் பொழுதுபோக்கும் எனக்கு ஓவியம்தான். ஐந்து வயதில் வரையத் தொடங்கினேன். இதுவரை ஆயிரக்கணக்கான முகங்களை வரைந்துள்ளேன். முகங்களைத் தேடித் தேடி இந்தியா முழுதும் சுற்றியுள்ளேன். சைக்கிள் ரிக்ஷாக்காரரின் பரிமாணங்களைக் கைப்பற்ற ஒரு

ஜென்மம் போதாது. ஒரு ரிக்ஷாக்காரர் ரிக்ஷாவின் ஒரு பாகமாக மாறிப் போகிற விந்தையை என்னென்று சொல்வது? ரிக்ஷா அவனுக்குத் தொழிற்சாலையா, கெஸ்ட்ஹவுஸா, பொழுதுபோக்கா, உணவு விடுதியா எல்லாமுமா இருக்கு. இடைவெளி இல்லாம அதனாலதானே என் கவனம் அதில் குவியுது."

படங்கள்: சின்னராஜ்

செய்தி: சூர்யா





* ராஜ்குமார் ஸ்தபதி

முகங்களைத் தேடி







சென்னையின் கிழக்குத்திசை சூரிய னின் வருகையை முன்னிட்டு ஒரு ரங்கோலி கோலமாய் மாறியிருக்க, அதை ரசித்தபடி வாக்கிங் போய்க் கொண்டிருந்தார் டாக்டர் சிவசைலம்.

இன்னும் ஒரு பதினைந்து நிமிஷம் நடக்க லாமா இல்லை, காருக்குத் திரும்பலாமா என்று யோசித்த விநாடி செல்ஃபோன், 'நலம்தானா உடலும் உள்ளமும் நலம் தானா?' என்று அழைத்தது. எடுத்துப் பார்த் தார்.

சாதுர்யா.

உற்சாகமானார். ''ஹலோ சாதுர்யா.. குட்மார்னிங்... என்னம்மா இவ்வளவு காலை யில் ஃபோன்?''

''டாக்டர்...! இன்னிக்கு உங்களுடைய வொர்க் ஷெட்யூலில் ஒரு பாடியை போஸ்ட்

நள்ளிரவுக்

மார்ட்டம் பண்ண வேண்டியிருக் குமே?''

''ஆமாம்மா... நேத்து மிட் நைட் பீச் ரோட்ல நடந்த வாகன விபத்தில் ஒரு பெண் அடிபட்டு இறந்து போயிட்டா. அவ ளோட பாடியைத் தான் போஸ்ட்மார்ட் டம் பண்ணனும்.''

''ரிப்போர்ட் எப்போ கிடைக்கும் டாக்டர்?''

''எப்படியும் பதினொரு மணியாயிடும்மா. ஏம்மா ஏனி எமர்ஜென்ஸி...?''

''எஸ்... டாக்டர்...! நேத்து மிட் நைட்ல அந்தச் சம்பவம் நடந்திருக்கு. போக்குவரத்து இல்லாத அந்த நேரத்துல விபத்து நடக்க வாய்ப்பு இல்லை.

ராஜேஷ்குமார்

அந்தப் பக்கமாய் ரோந்து வந்த போலீஸார் விபத்தைப் பார்த்து இருக்காங்க. அந்தப் பெண் யார்க்கோ பயந்த மாதிரி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கிட்டே போனதாகவும் கார் வந்து அவள் மேல் மோதி, அவள் கீழே விழுந்ததும், காரில் அவளைத் தூக்கிப் போட்டுக்கிட்டுப் போக முயற்சி பண்ணினதாகவும், போலீஸாரைப் பார்த்ததால அந்தப் பெண்ணை அப்படியே விட்டுட்டு காரை வேகமாய் ஓட்டிட்டுப் போனதாகவும் தகவல். ஸோ, நடந்தது விபத்து இல்லை. ஒரு

செய்தி

திட்டமிட்ட கொலைன்னு சந்தேகப்படறேன்.''

''ஓ..கே. சாதுர்யா! நான் அந்தப் பொண்ணோட பாடியை ஒரு டீப் பி.எம். பண்ணிடறேன். பதினொரு மணிக்கு ரிப்போர்ட் ரெடியானதும் நானே உன்னைக் கூப்பிடறேன்.''

''தேங்க்யூ டாக்டர்.''

ஜி.ஹெச்.

டாக்டர் சிவசைலம், தன் அறைக்குள் நுழைந்தபோது, நர்ஸ் ஸ்டெல்லா அவருடைய லேண்ட் லைன் டெலிஃபோனில் யாருடனோ பேசிக்கொண்டிருந்தாள்.

''ஓகே! டாக்டர் இப்பத்தான் வந்தார். நான் இன்ஃபர்ம் பண்றேன்.''

ஸ்டெல்லா ரிஸீவரைப் பொருத்திவிட்டு, சிவசைலத்திடம் வந்தாள்.

''டாக்டர்... கடந்த ஒரு மணி நேரமாய் உங்களைக் கேட்டு நிறைய ஃபோன் கால்ஸ். உங்க செல்ஃபோன் வொர்க் பண்ணலைன்னு சொல்றாங்க. ஏதாவது பிரச்னையா டாக்டர்?''

''ஆமாம்மா...! காலையில் வாக்கிங் போய்ட்டு வீடு திரும்பும்போது கையில் வெச்சிருந்த செல்ஃபோன் 'ஸ்லிப்'பாகி கீழே விழுந்து ஊமையாயிடுச்சு. வரும்போதுதான் 'மொபைல் க்யூர்' சர்வீஸ் சென்டர்ல கொடுத்துட்டு வந்தேன். முக்கியமான கால்ஸ் ஏதாவது வந்திருந்தா சொல்லு... இல்லைன்னா எல்லார்கிட்டேயும் நான் சாயந்திரம் பேசிடறேன்மா. அவசரமா ஒரு பாடியை போஸ்ட்மார்ட்டம் பண்ணி ரிப்போர்ட் கொடுக்க வேண்டியிருக்கு. நீ போய் போஸ்ட்மார்ட்டம் பண்றதுக்கான ஏற்பாடுகளைப் பண்ணிட்டிரு... வந்துடறேன்...''

நர்ஸ் ஸ்டெல்லா வெளியேறினாள். டாக்டர் சிவசைலம் போஸ்ட்மார்ட்டம் செய்யும்போது அணிய வேண்டிய கோட்டை அணிய ஆரம்பித்தார். அதே விநாடி...

அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

''எஸ்... ப்ளீஸ் கம் இன்...''

ஒரு இளைஞன் உள்ளே வந்தான். ''குட்மார்னிங் டாக்டர்... ஐ'யம் பிரணவ்குமார். மணிபால் மெடிக்கல் காலேஜ் ஃபோர்த் இயர் ஸ்டூடண்ட். இண்டியன் மெடிக்கல் கவுன்ஸில் என்னை சென்னை ஜி.ஹெச்க்கு ஒரு வார அப்ஸர்வேஷன் வொர்க்குக்காக அனுப்பி வெச்சிருக்கு...''

''எங்களுக்கு அப்படிப்பட்ட இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஏதும் வரலையே?''

''நான் அந்த இன்ஸ்ட்ரக்ஷனை கையோடு கொண்டு வந்துட்டேன் டாக்டர்...'' சொல்லிக் கொண்டே அந்த இளைஞன் ஒரு கடிதத்தை நீட்ட, சிவசைலம் அதை வாங்கிப் பிரித்தார்.



க்ரைம்.காம்

பாராளுமன்றத்தைப் பொறுத்தவரை பாண்டிக்கு ஒரே ஒரு எம்.பி.தான் என்றாலும், சட்டசபையில் மொத்தம் முப்பது இடங்கள். இவற்றில் பாண்டிச்சேரியிலிருந்து இருபத்தொரு எம்.எல்.ஏ.க்கள். காரைக்காலிலிருந்து ஆறு பேர். மாகேவிலிருந்து இரண்டு. ஏனாமிலிருந்து ஒன்று. இவற்றில் பாண்டியும், காரைக்காலும் தமிழகத்தை ஒட்டி உள்ளன. மாஹே, கேரளாவிலும், ஏனாம் ஆந்திராவிலும் அமைந்துள்ளதால் பாண்டிக்கு தமிழ், ஃபிரெஞ்ச், மலையாளம், தெலுங்கு - நான்கு மொழிகளுமே ஆட்சி மொழிகள்தான்.

- மௌலி



துக்கடா நியூஸ்!

உள்ளே ஒரு வெற்றுத்தாள் நான்காய் மடித்து வைக்கப்பட்டிருந்தது. அவர் திகைப்பாய் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்த பிரணவ்குமார் அறைக் கதவைச் சாத்தித் தாழிட்டான். சிவசைலம் கலவரமானார்.

''ஏய்... யார் நீ? எதுக்காக கதவைச் சாத்தறே?'' அவன் சிரித்தான்.

''டாக்டர்! நான் மெடிக்கல் காலேஜ் ஸ்டுடண்ட் கிடையாது. உங்ககிட்டே எனக்கு ஒரு காரியம் ஆகணும். ஒரு ரெண்டு நிமிஷம் பேசலாமா?''

''என்ன பேசணும்?''

''நேத்து மிட்நைட் பீச் ரோட்டில் ஆக்ஸிடெண்ட்டில் செத்துப்போன ஒரு பொண்ணோட பாடி இப்ப மார்ச்சுவரியில் இருக்கு. அதை நீங்கதானே போஸ்ட்மார்ட்டம் பண்ணப் போறீங்க...?''

''ஆ... ஆமா...!''

''அந்தப் பொண்ணோட வயித்துல ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள உயர்ஜாதி ஊதா நிற வைரம் ஒண்ணு இருக்கு. போஸ்ட் மார்ட்டம் பண்ணும்போது அதை நீங்க போலீஸுக்குத் தெரியப்படுத்தாமே எனக்கு எடுத்துக் கொடுக்கணும். இது சுலபமான மேட்டர். நீங்க பிரச்னை பண்ணாமே ஒத்துழைப்பு கொடுத்தா உங்களுக்கும் நல்லது; எனக்கும் நல்லது. இல்லேன்னா உங்க உடம்பை இன்னிக்கு சாயந்தரம் வேற எந்த டாக்டராவது போஸ்ட் மார்ட்டம் பண்ண வேண்டியிருக்கும்.''

சிவசைலம் உடல் நடுங்கி வியர்த்தார்.

''என்ன உளர்றே...? அந்தப் பெண்ணோட டெட்பாடிக்குள்ளே வைரம் இருக்கா?''

''இருக்கு டாக்டர். நான் நல்லவன் கிடையாது. அந்தப் பொண்ணும் நல்லவள் கிடையாது. அவ பேர் பிரின்ஸி. எங்க கடத்தல் கும்பலைச் சேர்ந்தவ. மும்பையிலிருந்து ஒரு அரிய வகை ஊதாநிற வைரத்தைக் கடத்திட்டு வர வேண்டிய பொறுப்பை பிரின்ஸிகிட்டே கொடுத்தோம். அவளும் அந்த வைரத்தை ஜீரண நீர்களால் அரிக்க முடியாத ஒரு காப்ஸ்யூலில் வைத்து விழுங்கி ஃப்ளைட்டில் பயணம் செய்து சென்னை வந்து சேர்ந்துட்டா. அப்படி வந்தவ எங்களை ஏமாத்திட்டு வைரத்தோடு தலைமறைவாயிட்டா. நேத்து பகல் முழுவதும் அவளைத் தேடினோம். அவ கிடைக்கலை. ராத்திரி பதினொரு மணிக்கு மேல்தான் பீச் ரோட்ல அவ யார்க்கோ வெயிட் பண்ணிட்டு இருக்கிறதாய்த் தகவல் கிடைச்சுது. உடனே கிளம்பினோம். பீச் ரோட்ல அவளைப் பார்த்தோம். அவளைப் பிடிக்க முடிஞ்சா சத்தம் போடுவான்னு நினைச்சு, அவ மேலே காரை மோதி விழ வைச்சு

எங்க இடத்துக்குக் கொண்டு போக முடிவு பண்ணினோம். அதன்படி காரைக் கொண்டு போய் அவ மேலே மோதி னோம். அவளும் அடிபட்டுக் கீழே விழுந்தா. கீழே விழுந்தவளை கார்க் குள்ளே போடறதுக்குள்ள அந்தப் பக்கமாய் வந்த ரோந்து போலீஸார் பார்த்துட்டாங்க. அதனால பிரின்ஸியை அப்படியே விட் டுட்டு நாங்க தப்பிச்சுட்டோம். எப்படியும் இன்னிக்குக் காலையில்தான் பிரின்ஸியை போஸ்ட்மார்ட்டம் பண்ணுவீங்கன்னு தெரியும். அதான் காலையிலேயே வந்து உங்களுக்காக வெயிட் பண்ணிட்டிருந் தேன். உங்களுக்கும் எனக்கும் இப்போ ஒரு ஜென்டில்மென் அக்ரிமெண்ட். பிரின்ஸி வயித்துக்குள்ள டயமண்ட் இருக் கிற விஷயம் இந்த நிமிஷம் உங்களுக்கும் எனக்கும் மட்டும்தான் தெரியும். ஸோ அந்த டயமண்ட் இருக்கிற காப்ஸ்யூலை எடுத்து என் கிட்டே கொடுத்துட்டா நான் பாட்டுக்குப் போயிட்டிருப் பேன். இல்லை இந்த சைலன்ஸர் துப்பாக்கியிலிருக் கிற ஒரு தோட்டாவை வாங் கிக்கோங்க!''

சிவசைலம் பதறினார். ''நோ... நோ... அந்த வைரம் இருக்கிற காப்ஸ்யூலை எடுத்துத் தர்றேன். ஆனா...''

''என்ன ஆனா...?''

''பிரின்ஸி வயித்துல ஒருவேளை வைரம் இல் லைன்னா?''

''கண்டிப்பாய் இருக் கும்.''

''அது எப்படி அவ்வளவு நிச்சயமாய் சொல்றே...? ஒருவேளை அவளோட வயிற்றில் வைரம் இல்லா மல் இருந்து நான் அந்த உண்மையைச் சொன்னா நீ நம்புவியா? நான் ஏதோ அந்த வைரத்தை எடுத்து வெச்சுக்கிட்டுப் பொய் சொல்றதா நீ நினைக்கலாமே?''


''அந்தக் கவலை உங்களுக்கு வேண் டாம். போஸ்ட்மார்ட்டம் நடக்கும்போது நான் உங்ககூடவே இருப்பேன். பிரின்ஸி யின் வயிற்றில் வைரம் இருந்தா அதை எடுத்துக் கொடுத்துடுங்க. நான் அதை வாங்கிட்டுப் போயிட்டேயிருப்பேன்.''

''போஸ்ட்மார்ட்டம் பண்ணும்போது ரெண்டு நர்ஸ்கள் மட்டும்தான் எனக்கு உதவியாய் இருப்பாங்க. மத்தவங்க யார்க் கும் உள்ளே வர்றதுக்கு அனுமதி கிடை யாது.''

''டாக்டர்! அந்த விதிமுறையெல்லாம் எனக்குத் தெரியாதா என்ன...? மணிபால் மெடிக்கல் காலேஜிலிருந்து வந்து இருக் கிற ஒரு மெடிக்கல் காலேஜ் ஸ்டூடண்ட்ன்னு என்னை அறி முகம் பண்ணுங்க. நான் நீங்க

துக்கடா நியூஸ்!

புக்கர் பரிசு பெற்ற நாவலான 'லைஃப் ஆஃப் பை' பாண்டிச் சேரியை வைத்து எழுதப்பட்டது. லீ லாங்லே என்ற எழுத்தாளரின் நாவலுக்குத் தலைப்பே 'எ ஹவுஸ் இன் பாண்டிச்சேரி'. சார்லி அண்டு சாக்லேட் ஃபாக்டரி நாவலில் வரும் ஒரு கதாபாத்திரத் தின் பெயர்: பிரின்ஸ் பாண்டிச்சேரி. சர் ஆர்த்தர் கோனான் டோயல் எழுதிய ஷெர்லாக் ஹோம்ஸ் துப்பறியும் 'தெ சைன் ஆஃப் ஃபோர்' நாவலில் கொலை யாகும் நபரது குடும்பம் 'பாண்டிச் சேரி லாட்ஜில்' வசிப்பதாக வரு கிறது.



மாஹேயில் இருந்த ஃபிரெஞ்சுத் தூதரகத்தில் பணியாற்றிய மலை யாள எழுத்தாளர் முகுந்தன், தன் எழுத்துக்களில் பலமுறை பாண்டிச் சேரி பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

- மௌலி

பண்ற போஸ்ட்மார்ட்டத்தை அப்ஸர்வ் பண்ணி நோட்ஸ் எடுக்கற மாதிரி நடிக்கிறேன்.

சிவசைலம் யோசித்தார். ''போஸ்ட் மார்ட்டம் ஆரம்பிக்க இன்னும் ஒரு மணி நேரமாகும்...''

''நோ... ப்ராப்ளம். நாம ரெண்டு பேரும் இதே ரூம்ல இருப்போம். காப்பி சொல்லுங்க. அந்த டீ.வி.யை ஆன் பண்ணுங்க... ஒரு மணி நேரம் சுலபமா போயிடும்!''



டாக்டர் சிவசைலம் இன்டர்காம் ரிஸிவரை எடுத்து ஒரு பட்டனைத் தட்டிவிட்டு, ''மாரியப்பன்! ரெண்டு காப்பி வேணும்'' என்று சொல்லி நாற்காலிக்கு ஆயாசமாய்ச் சாய்ந்தார்.

சரியாய் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு நர்ஸ் ஸ்டெல்லா N-95 என்று சொல்லப் படும் பச்சை நிற முக கவசம் அணிந்து அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

''டாக்டர்...! அந்தப் பெண்ணோட பி.எம்.முக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் பண்ணியாச்சு.''

''இதோ வர்றோம்..''

ஸ்டெல்லா, அந்த இளைஞனை ஒரு சந்தேகப் பார்வை பார்த்தாள். ''டாக்டர்.. இவர்?''

''இவர் மணிபால் மெடிக்கல் காலேஜ் ஸ்டூடண்ட். அப்ஸர்வேஷனுக்காக வந்திருக்கார். போஸ்ட்மார்ட்டம் பண்ணும் போது இவரும் நம்ம கூட இருப்பார். பை...த...பை.. நர்ஸ் மாலதி ரெடியா?''

''மாலதி அந்தப் பெண்ணோட டெட்பாடியை ஃபார்மலின் பண்ணிட்டிருக்கா டாக்டர்...''

சிவசைலம் எழுந்தார்.

''வாங்க பிரணவ்குமார். மார்ச்சுவரிக்குப் போவோம்.''

அறையை விட்டு வெளியே வந்தார்கள். வராந்தாவில் நடக்கும்போது டாக்டருக்கு மட்டும் கேட்கும்படியாய் பிரணவ்குமார் முணுமுணுத்தான்.

''டாக்டர்...! என்னை போலீஸில் காட்டிக் கொடுக்கிற திட்டம் ஏதாவது உங்க மனசுல அரும்பியிருந்தா இப்பவே அதை அழிச்சுடுங்க. வீணாக ரிஸ்க் எடுத்து

சாதுர்யா சக்ஸஸ் - 7

சாதுர்யா பேசறேன்... நிருபமா இறந்து கிடந்தபோது அவளுடைய பற்களில் இரத்தக் கறை இருந்தது. தலையில் இருந்து வெளிவந்திருந்த இரத்தத்துக்கும், பற்களில் தென்பட்ட இரத்தத்துக்கும் நிற வேறுபாடு இருப்பதாய்த் தோன்றியது. பி.எம். ரிப்போர்ட்டில் தலையில் அடிபட்ட இடத்தில் தென்பட்டது AB நெகட்டிவ் வகை இரத்தம், பற்களில் தென்பட்டது 'O' பாம்பே எனப்படும் 'OH' வகை இரத்தம் என்றும் தெரியவந்தது. நிருபமாவின் இரத்தம் AB நெகட்டிவ் என உறுதிசெய்யப்

உயிரை விடாதீங்க.''

''பிரின்சியோட வயித்துல வைரம் இல்லைன்னா?''

''உங்களுக்கு ஒரு 'குட்பை' சொல்லிட்டு போய்க்கிட்டே இருப்பேன்...''

''என் மேல சந்தேகப்படக்கூடாது!''

''உங்க மேலே எனக்கு எப்படிச் சந்தேகம் வரும்? போஸ்ட்மார்ட்டம் பண்ணும் போது நான்தான் உங்களுக்குப் பக்கத்திலேயே இருக்கப் போறேனே...?''

மார்ச்சுவரி வந்தது. உள்ளே நுழைந்தார்கள். பிரின்ஸியின் உடல் அந்த நீளமான தகர மேஜையில் தெரிய, உடலை ஃபார்மலைன் செய்து கொண்டிருந்த நர்ஸ்

பட்டதால், 'OH' கொலையாளியின் இரத்தமாக இருக்கலாம் என ஊகித்தேன். பொதுவாக 'OH'க்கும் மும்பைவாசிகளுக்கும் தொடர்பு உண்டு என்பதால், கம்பெனியில் மும்பையிலிருந்து வந்து பணியாற்றுபவர்களைக் கண்காணித்த போது மேத்யூ மாட்டிக் கொண்டான். சரியான பதிலை யூகித்து எழுதி குலுக்கலில் தேர்வானவர்களின் விவரம் 'வட்டமேஜை' பக்கத்தில்...

சிவசைலத்தைப் பார்த்ததும் தள்ளி நின்றாள்.

''என்ன மாலதி...! பாடியை ஃபார்மலைன் பண்ணிட்டியா...?''

''பண்ணிட்டேன் டாக்டர்...''

''ஜெர்மிசைட் ஸ்பிரே?''

''பண்ணனும் டாக்டர்.''

''பண்ணு சீக்கிரம்...''

''இதோ பண்ணிடறேன்...'' சொன்ன நர்ஸ், கண்ணாடி அலமாரியில் இருந்த அந்த ஜெர்மிசைட் ஸ்பிரேயரை எடுத்து வந்தாள்.

பிரின்ஸியின் டெட்பாடி மீது ஸ்ப்ரே செய்ய ஆரம்பித்த அந்த நர்ஸ், எதிர்பாராத ஒரு விநாடியில் 'திடும்' மென்று ஸ்பிரேயரை பிரணவ்குமாரின் முகத்தை நோக்கித் திருப்பினாள். பிரணவ் குமார் நிதானித்து விலகுவதற்குள் ஜெர்மிசைட் மூக்கு, தொண்டை வழியாக நுரையீரலுக்குள் பிரவேசம் செய்துவிட மூச்சுத் திணறினான்.

பிடரியில் ஒரு மூர்க்கத்தனமான அடி விழுந்தது. சுருண்டு விழுந்து மயக்கத்துக்குப் போனான்.

டாக்டர் சிவசைலம் பரவசமாய் நர்ஸை ஏறிட்டார்.

''மாலதி...! உனக்கு எப்படி அவன்...''

''ஸாரி டாக்டர்... நான் மாலதி இல்லை சாதுர்யா. கடந்த அரைமணி நேரமாய் இந்த நர்ஸ் யூனிஃபார்மையும், பச்சை முகக் கவசத்தையும் மாட்டிக்கிட்டு இந்த பிரணவ் குமார்க்காகக் காத்துக்கிட்டு இருந்தேன்.''

''இவன் உள்ளே வருவான்னு உனக்கு எப்படித் தெரியும் சாதுர்யா?''

சாதுர்யா சொல்ல ஆரம்பித்தாள். ●

துப்பறியும் போட்டி-8

வாசகர்களே... சாதுர்யா டாக்டரிடம் என்ன சொல்லியிருப்பாள்? சாதுர்யா மார்ச்சுவரி அறைக்குள் வர அவளுக்கு உதவிய தடயம் எது...?

மூளைக்கு ஓவர்டைம் கொடுத்து இந்தக் கதையை மீண்டும் ஒரு தடவை படியுங்கள். தடயம் உங்கள் பார்வைக்குக் கிடைக்கும்.



சரியான பதிலை போஸ்ட்கார்டில் எழுதி அனுப்புங்கள். **துப்பறியும் போட்டி-8** என்று குறிப்பிட்டு கல்கி முகவரிக்கு அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

கடைசித் தேதி: 26.08.09

ஸ்டார்ட்... கேமரா... ஆனந்த்!



கே.வி.ஆனந்த்

மாயாவி காமிக்ஸ்களிலிருந்து துப்பறியும் சாம்பு, தமிழ்வாணனின் துப்பறியும் கதைகள் என்று படிக்க ஆரம்பித்தேன். அதனைத் தொடர்ந்து பத்திரிகைகளில் வெளியாகும் சிவசங்கரி, வாஸந்தி, இந்துமதி தொடர்கதைகளைப் படித்தேன். அடுத்து நான் வாசித்த எழுத்தாளர் கல்கி. அப்புறம் சுஜாதாவின் எழுத்துக்கள் எனக்கு அறிமுகமாகின. அடுத்து ஜெயகாந்தன், ர.சு.நல்லபெருமாள், தி.ஜானகிராமன் ஆகியோரது சீரியஸான எழுத்துக்களையும் தேடிப் படித்து, என் இலக்கிய ரசனையை மேம்படுத்திக்கொண்டேன்.

இன்று சினிமாவில் முத் திரை பதித்து மிகப் பிரபலமாக விளங்கும் சில நட்சத்திரங்கள் அறிமுகமான படங்களில், கேமராமேனாகப் பணியாற்ற எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அப்படி எனக்குக் கிடைத்த முதல் வாய்ப்பு கே.டி. குஞ்சுமோன் தயாரிப்பில் கதிர் இயக்கிய 'காதல் தேசம்'. கதிர் தன் படங்களில் காதலைச் சொல்கிற விதத்தில் ஒருவித நளினமான ஸ்டைல் இருக்கும். அவரிடம், என்னை மிகவும் கவர்ந்த இன்னொரு வித்தியாசமான பழக்கம் ஒன்று உண்டு. அவர் ஒரு படம் எடுக்கிறார் என்றால், படப்பிடிப்பை ஆரம்பிப்பதற்கு முன்னால், அந்தக் கதை நடக்கிற இடங்களில் தானே சில நாட்கள் இருந்து, பலவிதமான விஷயங்களைக் கவனித்து, அனுபவித்து, அவற்றைச் சரியான முறையில் படத்தில் பயன்படுத்திக்கொள்வார். அவர் ஓவியக் கல்லூரியில் படித்தவர். நல்ல ரசனை உடையவர். அதனாலேயே அவரது படங்களின் காட்சிகளில் கற்பனையும் கலர் காம்பினேஷனும் அபாரமாக இருக்கும்.

காதல் தேசம் படத்தின் முக்கால்





"ஸார், சினிமாவுல நடிக்கிறீங்களா..?"

வாசிக் காட்சிகள் பெங்களூருவில்தான் எடுக்கப்பட்டன. அங்கே பல்வேறு கல்லூரிகளிலும் படித்த நிஜமான மாணவ, மாணவிகளையே படத்திலும் பங்கேற்கச் செய்தார். சுமார் ஒரு வாரத்துக்கு மேல் பெங்களூருவின் பல கல்லூரிகளுக்கும் சென்று மாணவ மாணவிகள் எப்படி நடந்துகொள்கிறார்கள், எப்படிப் பேசிப் பழகுகிறார்கள், என்ன விதமான உடை அணிகிறார்கள், என்றெல்லாம் நானும் அவருமாகக் கவனித்தோம்.

அந்தப் படத்தில் நடிக்க ஹிந்தி நடிகை தபுவை ஒப்பந்தம் செய்தார். காதல் தேசம் இரு நண்பர்களின் கதை என்பதால், ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞனின் கதாபாத்திரத்துக்கு வினீத்தைப் பேசி முடித்தார் கதிர். பணக்காரக் குடும்பத்து இளைஞன் ரோலுக்கு யார் என்பது இன்னமும் முடிவாகவில்லை; தேடிக்கொண்டிருந்தோம்.

ஒரு நாள் இரவு பெங்களூருவில் நாங்கள் தங்கி இருந்த ஹோட்டலுக்கு வெளியில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, ஒரு இளைஞர் வேகமாக மோட்டார் பைக்கில் வந்து, நிறுத்திவிட்டு, அங்கே இருந்த ஒரு கடையில் ஏதோ வாங்கினார். ''ஆனந்த்! அதோ அந்தப் பையன் நம் படத்து ரோலுக்கு தேறுவாரான்னு பாருங்க!'' என்றார் கதிர். அந்த இளைஞனைப் பார்த்தவுடன் நானும், ''தேறுவாருன்னுதான் தோணுது!'' என்றேன். உடனே, ''அந்தப் பையனிடம் விஷயத்தைச் சொல்லி அழைச்சுட்டு வா!'' என்று தம் அஸிஸ்டெண்ட்டை அனுப்பினார் கதிர்.

''ஸார் நீங்க சினிமாவுல நடிக்கறீங்களா?'' என்று அந்த அஸிஸ்டண்ட் நேரடியாகவே கேட்டுவிட, அந்த இளைஞர், முன்னே பின்னே தெரியாத யாரோ தம்மைக் கிண்டல் செய்வதாக நினைத்து, ''என்ன கிண்டலா? யார் நீ?'' என்று ஹிந்தியில் கேட்க, இவர், சற்று தூரத்தில் இருந்த எங்களைச் சுட்டிக்காட்டி, விஷயத்தைச் சொல்ல அவர் நேரே எங்களிடம் வந்தார்.

எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு எங்கள் புதுமுகத் தேடல் பற்றிச் சொன்னோம். அவருக்கும் சினிமாவில் நடிக்க ஆர்வம் இருந்தது. மேக்-அப் டெஸ்ட் எடுத்துப் பார்த்தோம். திருப்திகரமாக இருக்கவே, அவரையே நடிக்க வைத்தோம். அவர்தான் அப்பாஸ்!

அப்பாஸைப் போலவே 'காதல் தேசம்' படம் வாயிலாகத்தான் நான்கூட



போனது.

நேருக்கு நேர் படத்துக்கு இன்னொரு ஹீரோ தேடும் படலம் ஆரம்பமானது. ஒரு நாள், 'நடிகர் சிவகுமாருக்கு சரவணன்னு ஒரு பையன் உண்டு. ஏதோ ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனியில் மேனேஜராக இருக்காரு. இன்னிக்கு ஈவினிங் அவங்க வீட்டுக்குப் போய்

தயாரிப்பாளர் குஞ்சுமோன் என்னுடைய முதல் படமான 'தேன்மாவில் கொம்பத்து' பார்த்துவிட்டு. காதல் தேசம் படத்துக்கு நான்தான் ஒளிப்பதிவு செய்ய வேண்டும் என்று கதிரிடம் சொல்லிவிட்டார்.

தமிழ் சினிமாவில் அறிமுகமானேன். கதிர் காதல் தேசம் எடுக்க முடிவு செய்தபோது, அவர் வேறு ஒரு கேமராமேனுடன்தான் பேசிக்கொண்டிருந்தார். ஆனால், தயாரிப்பாளர் குஞ்சுமோன் என்னுடைய முதல் படமான 'தேன்மாவின் கொம்பத்து' பார்த்துவிட்டு, காதல் தேசம் படத்துக்கு நான்தான் ஒளிப்பதிவு செய்ய வேண்டும் என்று கதிரிடம் சொல்லிவிட்டார். அதன் பிறகு கதிர் என்னை அழைத்தார் என்பதெல்லாம் எனக்குப் பின்னால்தான் தெரிய வந்தது.

தமிழில் ஆழமான இலக்கிய ஈடுபாடு கொண்ட இயக்குநர்களில் வஸந்த் முக்கியமானவர். அவருடைய 'நேருக்கு நேர்' படத்துக்கு நான்தான் ஒளிப்பதிவாளர். அந்தப் படத்தில் முதலில் விஜய்யும், அஜித்தும்தான் நடிப்பதாக இருந்தது. அஜித் நடிக்க ஒரு சில நாட்கள் ஷூட்டிங் கூட நடந்தது. ஆனால், இந்தப் படம் கொஞ்சம் தாமதம் ஆனதாலும், அஜித் அதற்கேற்ப கால்ஷீட் கொடுப்பதில் சிக்கல் எழுந்ததாலும், அவர் நடிக்க முடியாமல் பார்த்துட்டு வர்றேன்'' என்றார் வஸந்த்.

மாலை, சிவகுமார் வீட்டுக்குப் போனார் வஸந்த். ஸ்கூட்டரில் ஒல்லியாக ஒரு இளைஞர் வந்து இறங்கினார். வஸந்த், அவரிடம், ''சினிமாவில் நடிக்க விருப்பமா?' என்று கேட்டதுதான் தாமதம்...'' ''ஐயோ! சினிமாவா? நமக்கும் அதுக்கும் துளிக்கூட சம்பந்தமில்லை. ஆளைவிடுங்கள்'' என்று பெரிய கும்பிடு போட்டுவிட்டு உள்ளே ஓடிவிட்டார். மகன் மறுத்தால் என்ன, அப்பாதான் அனுபவம் வாய்ந்த நடிகராயிற்றே! அவர் மூலம் மகனின் சம்மதத்தைப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையில், சிவகுமாரிடம் பேசியபோது, ''அவனுக்கு இஷ்டம் என்றால் நடிக்கட்டும்; எனக்கு ஆட்சேபணை ஏதுமில்லை; ஆனால் நான் அவனை வற்புறுத்த மாட்டேன்'' என்று கட் அண்ட் ரைட்டாகச் சொல்லிவிட்டார்.

(ஆக்ஷன் தொடரும்)

எழுத்து வடிவம்:

எஸ்.சந்திரமௌலி

வாவ் வாசகர்



'கல்கி' காட்டிய இலக்கிய ருசி

''சமூக நலன் மீது அக்கறை கொண்டது கல்கி. கல்கியில் எனக்கு மிகவும் பிடித்த விஷயம் அதுதான். இன்றைய காலகட்டத்துக்கு ஏற்றாற்போல தனக்குள் மாற்றங்களை உருவாக்கிக் கொண்டுள்ளது. அதேநேரத்தில் தன் கொள்கைகளிலிருந்து மாறிவிடாமல், வன்மம் - ஆபாசம் போன்றவற்றைத் தவிர்த்து வெளிவருவது தனிச் சிறப்பு. தமிழ்நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும், அவசியம் ஒரு நூல் நிலையம் இருக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அடிக்கடி கூறுவார். அதுபோல ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு வாரமும் இருக்க வேண்டியது கல்கி'' என்கிறார் இளங்கவி அருள்.

புதுச்சேரி சுதானா நகரில் வசித்து வரும் இளங்கவி அருள், இருபது வருட கல்கி வாசகர். பொதுப்பணித்துறை ஊழியர். மனைவி பவுனாம்பாள், கிராமப்புற செவிலியர். கானிதாசன், கவிராஜன் என இரண்டு மக்கட்செல்வங்கள். கவிதை இலக்கியம் மீது இளங்கவி அருளுக்குத் தீராத காதல்.

'வெளிச்சத்தில் ஆடும் நிழல்', 'மணக்கும் எறும்பு' உட்பட நான்கு நூல்களை எழுதியிருக்கும் இவர், இலக்கிய ருசியைக் காட்டி எழுத்தைத் தம்முள் விதைத்தது கல்கியின் எழுத்து என்கிறார். 'மீறல்' இலக்கியக் கழகம் எனும் அமைப்பினை உருவாக்கிச் செயல்பட்டு வருகிறார்.

இவரோட 'மீறல்' இலக்கிய அமைப்பு, கடந்த இரண்டு ஆண்டுகளாக எழுத்தாளர்களைத் தேர்வு செய்து ரொக்கப் பரிசு தந்து கௌரவித்து வருகிறது.

மீறலின் மூலம் ஆண் எழுத்தாளர் ஒருவருக்கு கபிலர் விருது, பெண் எழுத்தாளருக்கு ஔவை விருது, சமூக சேவகர் ஒருவருக்கு விருது என ஒவ்வொருவருக்கும் தலா ஐந்தாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்குகிறார். ''என்னுடைய மாதச் சம்பளம், என் மனைவி பவுனாம்பாள் மாதச் சம்பளம் இவற்றில் இருந்து ஆண்டுதோறும் குறைந்தபட்சம் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் ஒதுக்கீடு செய்து எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தி இலக்கியப்பணி ஆற்றி வருகிறோம்!'' என்கிறார் இளங்கவி அருள்.

மனசுக்குள் மணக்குள விநாயகர்!

தமிழ்நாட்டில் வேறெங்கும் காண இயலாத கணபதி வடிவங்கள், கோயில் வலப்புறச் சுவரில் இடம்பெற்றுள்ளன. பார்வதிதேவியின் இடுப்பில் புத்திர கணபதி, ஆறுமுக கணபதி, மயில் வாகன (தம்பி வாகனத்தை இவரு எப்போ லவட்டிட்டு வந்தாரு?) கணபதி, விஷ்ணுராச கணபதி, யோக கணபதி, திருமணக் கோல சித்தி புத்தி கணபதி என வரிசையாக விரிகின்றன கணபதி வடிவங்கள்.



எங்கே? புதுச்சேரியின் பிரசித்தி பெற்ற தலமான, மணக்குள விநாயகர் ஆலயத்தில்! ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது, மணற்குள விநாயகர். அப்போது அந்த இடம் மணல் நிறைந்த குளமாகவே இருந்துள்ளது. அதன் குளக் கரையில் விநாயகர். காலப்போக்கில் மணற்குளம் மறைந்து போனது. மாற்றங்கள் பல கண்டது. நாளடைவில் பேச்சு வழக்கில் மணக்குள விநாயகர் என்கிற பெயர் நிலைத்துப் போனது.

அரவிந்தர் ஆசிரம வீதியில் கிழக்கு நோக்கிய சன்னிதியில் அமைந்துள்ள ஆலயம். கோயிலின் மைய நுழைவாயிலில் இராஜ கோபுரம். அதன் நான்கு புறங்களிலும் உச்சிவரை சுண்ணச் சுதையிலான பல உருவங்கள். அனைத்தும் விநாயகர் வடிவங்கள். கோபுர உச்சியில் தங்கமுலாம் பூசப்பட்ட மூன்று கலசங்கள். கோபுர தரிசனத்துக்குப் பின்னர் உள்ளே சென்றால் கொடிக் கம்பம். தங்கமுலாம் பூசிய பித்தளைத் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. விளக்கொளியில் ஜொலிக்கிறது துவஜஸ்தம்பம்.

கருவறையில் அமர்ந்த நிலையில் மூலவர் விநாயகர். நான்கு திருக்கரங்கள். மேல் வலக்கையில் அங்குசம். மேல் இடக்கையில் பாசம். கீழ் வலக்கை அபயதான முத்திரை. கீழ் இடக்கை வரததான அமைப்பு. கருவறையில் மூலவருடன் மற்றும் ஒரு விநாயகர், சிறிய திருவுருவமாக. தென்புறத்தில் இரட்டை நாகத் திருமேனி. இதனை அக்காலத்திலேயே மணற்குளத்தின் கரையில் எழுந்தருளச் செய்து வழிபட்டிருத்தல் வேண்டும். குளம் இருந்த இடத்தில், இன்று பெரிய கட்டடங்கள் உருவாகியுள்ளன. ஒரு பகுதியில் கோயில் எழுந்துள்ளது. மணற்





குளம் இருந்த சுவடு இன்றைக்கும் மூல விநாயகருக்கு அருகில் உள்ள, வற்றாது நீர் சுரக்கும் ஒரு குழியாகக் காட்சி தருகிறது.

கோயில் பிராகாரச் சுவர்கள் அனைத்தும் பளிங்குக் கற்கள். நம் நாட்டில் உள்ள பல்வேறு விநாயகத் திருவுருவங்களும், ஜப்பான், ஜாவா, சைனா, நேபாளம் போன்ற வெளிநாடுகளில் உள்ள விநாயகர் வடிவங்களும் சுண்ணக் கலவையால் உருவாக்கப்பட்டு வண்ணந்தீட்டப்பட்டுள்ளன.

பக்தர்கள் கூட்டத்துடன், வெளிநாட்டினரும் வரிசையில் நின்று சுவாமி தரிசனம் செய்வதை இங்கு சர்வ சாதாரணமாகக் காணலாம். அர்ச்சகர்கள் அவர்களுக்குப் பிரசாதம் வழங்கி, கழுத்தில் பூ மாலை போட்டு கௌரவிக்கிறார்கள். அவர்கள் தங்கியுள்ள கெஸ்ட் ஹவுஸ் செல்லும் வரை கழுத்திலிருந்து அந்த மாலையினைக் கழற்றுவதேயில்லை. நம்மில் பலருக்கு கழுத்து மாலையைக் கழற்றாவிட்டால் வெட்கமாகிவிடும். கோயிலுக்குள்ளேயே கழற்றி பாலிதீன் பைகளுக்குள் போட்டுச் சிறைப்பிடித்து வைக்கின்றனர்.



பல வெளிநாட்டுப் பெண்கள் அழகாகப் புடைவை உடுத்தி, தலைவாரி சடை பின்னி, பூச்சூடி அழகிய தமிழ் மகள் போல வரிசையில் நின்று விநாயக தரிசனம் செய்வதைக் காணலாம்.

மணக்குள விநாயகர் கோயிலில் படிகலிங்கம் இருப்பதால், பிரதோஷ கால பூஜை வழிபாடு சிறப்பாக நடத்தப்படுகிறது. புதுச்சேரி, தமிழக பக்தர்களின் மனங்களில் மட்டுமல்லாது வெளிநாட்டவரின் மனங்களிலும் நீங்காமல் நிறைந்திருப்பவர் இந்த மணக்குள விநாயகர்!

வாசகர் யோசனை:
மாலதி மணியன்

"உயர்நிலைப் பள்ளி ரெண்டு கி.மீ. தூரத்தில். கால்ல செருப்பு இருக்காது. வெட்டவெளி மணல்ல பாதச்சூடு பொறுக்காம பொஸ்தக மூட்டையைத் தூக்கிட்டு வெரசா நடந்து போவணும். நாம நடந்து போற பாதையில மரக்கன்னு நட்டு வெச்சா, நமக்கு அப்புறமா இதே பாதையில நடந்து வர்ற புள்ளைங்களுக்கு நிழல் தந்து உதவுமேன்னு மனசுக்குள்ள சின்னப் பொறி தட்டிச்சு. என்னோட பன்னிரண்டாவது வயசுல, அந்தப் பாதையில பத்துப் பதினைஞ்சு மரக்கன்னு நட்டு வெச்சேன். ஹைஸ்கூல் படிப்பை முடிச்சு நான் வெளியே வர்றதுக்குள்ள அந்த மரங்கள் நல்லா வளர்ந்திடுச்சு. ஒரு வருஷம் அதனோட நிழல்ல நடந்து அனுபவிச்சுட்டுத்தான் மேல் படிப்புக்காக வெளியூரு கிளம்பினேன்" என்கிறார் புதுச்சேரி சோலைநகர் செல்வகுமாரி.

இவர்தான் கடலூர் மாவட்டம் சோனங்குப்பம் மீனவக்குப்பத்தின் முதல் பட்டதாரிப் பெண். பதினான்கு ஆண்டுகளாக புதுச்சேரிவாசி.

கடற்காற்று கூடுதல் விசையுடன் வீசினால் போதும். கடல் தண்ணீர் வாசல் தெளித்து விடும். இரவுகளில் ஆர்ப்பரிக்கும் அலைகளின் பேரிரைச்சல் அவர்களுக்குத் தாலாட்டுப் பாடும். கடல் கைக்கெட்டும் தூரத்தில் அமைந்துள்ளது செல்வகுமாரி வீடு.

எம்.ஏ. தமிழ் தேர்ச்சி பெற்றவர். ஆசிரியை பயிற்சிக்குப் பின் பாண்டிச்சேரி செவன்த் டே அட்வெண்டிஸ்ட் மேனிலைப் பள்ளியில் பத்து ஆண்டுகளாகத் தமிழாசிரியை. தற்போதும் ஆசிரியப் பணியில் இருப்பவர். புதுச்சேரி மீனவப் பெண்கள் முன்னேற்ற அமைப்பின் தலைவியாக இயங்கி வருபவர்.

கணவர் நெய்தல் ஜெயபால். மகள் ரோஷிணி. இவங்களோட ஒத்துழைப்புடன், எங்களோட மீனவ மக்களுக்காக, பல போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றுள்ளேன்.

ரெண்டு போராட்டங்கள்ல எங்களுக்குக் கெடைச்ச வெற்றி, எங்களால மறக்க முடியாதது. எல்லா நேரத்துலயும் கடல்ல மீன் பிடிக்கப் போவ முடியாது. தொடர்ந்து சில நாட்கள்ல இயற்கை இடையூறுகளால கடலுக்குள்ள போக மாட்டாங்க. வருஷந்தோறும் கடல்ல மீன்களோட இனப்பெருக்க காலம்னு ஒண்ணு வரும். ஏப்ரல்-மே மாசத்துல தொடர்ந்து நாப்பத்தைஞ்சு நாட்களுக்கு யாரும் கடலுக்குள்ளார மீன் பிடிக்கப் போகக்கூடாதுன்னு தண்டோரா போட்டு தடைவிதிக்கப்பட்டிருக்கும்.

அந்த நாப்பத்தைஞ்சு நாள், மீனவக் குடும்பங்கள் சாப்பாட்டுக்கு என்ன செய்யும்? அப்ப அரசு உதவி எதுவும் கிடையாது. எங்க கூத்துல பதினாறு மீனவக் கிராமங்களை ஒன்றிணைச்சுப் போராடினோம். புதுச்சேரி சட்டமன்றம் முன்பாக பதினாறு நாள் பட்டினிப் போராட்டம் நடத்தினோம். மீனவர்களுக்கு உதவ புதுச்சேரி அரசு முன்வந்தது.

அந்த நாற்பத்தைந்து நாட்களுக்கு மீனவக் குடும்பம் ஒன்றுக்கு நூறு கிலோ அரிசியும், ஐந்நூறு ரூபாய் பணமும் தர்றதா அறிவிப்பு வெளியிட்டது. இந்த அரசு உதவியை, கடந்த ஆறு வருஷமா அந்தத் தடைசெய்யப்பட்ட மாதங்கள்ல எங்களோட மீனவக் குடும்பங்கள் வாங்கிப் பயனடைஞ்சு வருது.

பாண்டிச்சேரி தேங்காய்த் திட்டு துறைமுகம். மீனவர்களின் மீன்பிடி வாழ்வாதாரத்துக்கான பயன்பாட்டுக்கு உரியது.

அதனைச் செயற்கைத் துறைமுகமா மாற்றி உல்லாச மையமாகச் செயல்படுத்தத் திட்டமிட்டு, நேரில் வந்து ஆய்வு செய்தது குஜராத்தின் அலுவாலியா நிறுவனம். அதற்கு மத்திய அரசின் ஒப்புதலும் கிடைத்துவிட்டது. அங்கிருந்துதான் எங்கள் மீனவர்களின் படகுகள் கிளம்பும்; வந்து சேரும். உல்லாச மையமாக மாறிவிட்டால், மீனவக் குடும்பங்களில் தினசரி உலை கொதிப்பது கனவாகிப் போய்விடும். வெகுண்டெழுந்தோம். விழிப்புணர்வுப் பிரசாரம் செய்தோம். தொடர் போராட்டங்கள் நடத்தினோம். ஆயிரம் பெண்களுடன் சட்டசபையை முற்றுகையிட்டோம். உண்ணாவிரதம் இருந்தோம். சென்னை வந்திருந்த மத்திய அமைச்சரைச் சந்தித்து மனு அளித்து முறையிட்டோம். அந்தச் செயற்கைத் துறைமுக உல்லாச மையத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டு விட்டது.

மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்போதெல்லாம், எனது போராட்டம் தொடர்ந்து இயங்கும். மீனவ சமூக மக்களின் ஒத்துழைப்போடு வெற்றி பெறுவோம்!'' என்கிறார் செல்வகுமாரி, உப்புக்காற்று முகத்தில் மோத!

வாசகர் யோசனை:

இளங்கவி அருள்

மீனவர் வாழ்வின் மீட்சிப் பெண்மணி!



வேண்டும் மதுவிலக்கு!



★ பூங்காவில் சந்தித்த புதுமைப்பெண்கள்...

மகாகவி பாரதி பூங்கா. புல்வெளியில் நாம் சந்திக்க நேர்ந்த கல்லூரி மாணவிகள் மூவரும், புதுவையில் தோன்றியிருக்கும் புதிய சிந்தனையை எதிரொலித்தனர்.

''நீங்க எந்த இடத்துக்கும் போயி, 'பாண்டிச்சேரி'னு சொல்லிப் பாருங்க. 'கள்ளு, சாராயம், பிராந்தி, விஸ்கி எல்லாம் ரொம்ப ரொம்பக் கம்மி விலைக்குக் கிடைக்குமே... அந்த ஊருதானே?' அப்படிம்பாங்க. எங்களுக்குக் கிடைச்சிருக்கற இந்த டிரேட் மார்க் சர்ட்டிஃபிகேட்டை மொதல்ல நீக்கியாகணும். இதுவா ஒரு பிரதேசத்துக்குப் பெருமை? இல்லை. பாண்டியில பூரண மதுவிலக்குதான் பெருமை!'' - காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்புக் கல்லூரி மாணவி ஆனந்தி.





டெய்லி ஐம்பது- நூறு கூலி வாங்குறியா? கள்ளு-சாராயக் கடை உனக்குன்னே திறந்திருக்கு. தினசரி இருநூறு - முந்நூறு வருவாய் கிடைக்குதா பிராந்தி, விஸ்கி, ரம்மு, ஜின்னுனு உனக்கு என்ன பிரியமோ வந்து ஒரு பிடி பிடிச்சுக்கோ. வொயிட் காலர் ஜாப்பா? கை நெறைய சம்பளமா? வெள்ளைப் பணம் கொள்ளையா குவிஞ்சிருக்கா? கவலையேபடாதே. அதெல்லாம் கரைச்சு ஊத்த அங்கங்க ஸ்டார் அந்தஸ்து 'பார்' நெறைய இருக்கு. இந்தப் பெருமை எல்லாம் எங்க தலைமுறைக்கு வேணாங்க!'' எனக் கொதிக்கிறார், பெயரில் குளுமை கொண்டிருக்கும் ஐஸ்வர்யா. காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்புக் கல்லூரி மாணவி.

''சின்ன வயசுல படிப்பை நிறுத்திட்டு, தனியா சம்பாதிக்கப் போற பையன்களை இந்த மதுக்கடைங்கதான், 'வாடா செல்லம்... வாடா செல்லம்'னு இழுத்து 'மட்டை'யாக்கி அவன் லைஃப்பையே மட்டரகமா மாத்திடுது. எங்களைப் போல காலேஜ் பொண்ணுங்க கண்ணியமா வண்டியிலே போக முடியலை. பாண்டியில தொண்ணூறு சதவிகித விபத்துகள் மது அருந்திட்டு வாகனம் ஓட்டுறதாலதான்னு புள்ளிவிவரம் சொல்லுது!'' எனத் தெரிவிக்கிறார் மதர் தெரசா இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹெல்த் சயன்ஸ் மாணவி சுந்தரவள்ளி.

''ஒரு கணவன் மதுவுக்கு அடிமை ஆகிட்டான்னா, அவனோட குடும்பமே கண்ணீரில் மிழ ஆரம்பிச்சிடுது. குடிப்பழக்கம் உள்ள காசநோயாளிகள் மாத்திரைக்குப் பதிலா மதுவைச் சாப்பிட்டு சாவு வேணும்னு சாராயக்கடையில் கையேந்தி நிக்கிறாங்க. என்ன செய்யறது சொல்லுங்க?'' என்று யதார்த்தமாகப் பேசுகிறார் கிராமப்புற செவிலியாகப் பணியாற்றிவரும் பவுனாம்பாள்.




* பவுனாம்பாள்

''முந்தியெல்லாம் கோயில் திருவிழான்னா, யாரும் குடிக்க மாட்டாங்க. அன்னைக்கு ஏதோ கட்டுப்பாடா இருப்பாங்க. திருவிழாக்கள் அமைதியா நடந்து முடிஞ்சுடும். இப்ப அப்படியில்லை. திருவிழாக்கள்ல 'தண்ணி' அடிச்சிட்டு கலந்துக்கறதை ஏதோ கௌரவமா நெனைக்கறாங்க இந்தக் காலத்து இளைஞர்கள். அப்புறம் என்ன குடியின்னா சண்டைதானே? இவங்க கலாட்டாவுல கச்சேரி, டிராமா எதுவும் நிம்மதியா நடக்காது'' என்கிறார் அரவிந்தர் தெருவில் வசித்து வரும் ஃபர்னிச்சர் தயாரிப்பாளரான ஜெயபாலன்.

* டாக்டர் வீரன்





* ஜெயபாலன்

''புதுவையில விசாரிச்சா தெரியும். விவசாயக் கூலிகள் யாரும் தொடர்ந்து வேலைக்குப் போக மாட்டேங்கறாங்க. இதனால விவசாய வேலையே தடைபட்டுடுச்சு. இதே மாதிரிதான் மத்த எல்லா தொழிலுமே அதனதன் வளர்ச்சியில பாதிக்கப்பட்டிருக்கு. நான் மருத்துவரா





* பாஸ்கரன்

"மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபோது 1978-79ல் ஒன்றரை வருடம் புதுச்சேரியில் மதுவிலக்கு அமுலில் இருந்துள்ளது!"

ஒரு உண்மையை உங்ககிட்ட பதிவுசெய்யறேன். மதுப்பழக்கத்தால கல்லீரல், சிறுநீரகம் பாதிச்சு மரணம் அடையறவங்களோட எண்ணிக்கை ஒவ்வொரு வருஷமும் அதிகரித்துக்கொண்டே போகிறது!'' எனக் கூறுகிறார் தவளைக்குப்பம் அரசு சுகாதார நிலையப் பொது மருத்துவர் வீரன்.

''கலப்பட மதுவையும் பாண்டியையும் பிரிக்க முடியாது. வாரத்துல ரெண்டு தடவையாவது கலப்பட மது வாகனங்கள் கைப்பற்றப்படுவதாக காவல் துறை மூலமாக பத்திரிகைச் செய்திகள் வருது. ஒரு வருஷத்தில சாகிறவன் ஆறு மாதத்தில சாகட்டுமேன்னு க்விக் ரிலீஸாகுது இந்தக் கலப்பட மது.

இங்கு மதுவிலக்கு புதிதல்ல. மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபோது, 1978-79ல் ஒன்றரை வருடம் புதுச்சேரியில் மதுவிலக்கு அமுலில் இருந்துள்ளது!'' எனச் சொல்கிறார் மனிதவள மேம்பாட்டுத் துறை ஆலோசகராகப் பணியாற்றிவரும் எஸ்.பாஸ்கரன்.

மதுவிலக்கு ஆதரவு விதைகள் பாண்டி மண் மீது பரவி முளைக்கத் தொடங்கியுள்ளதாகவே தோன்றுகிறது. ○

கம்யூனிஸ்ட்டுகள் சாப்பிட வரவேண்டாம்!

நேரு வீதியில் உள்ளது இந்தியன் காபி ஹவுஸ் பில்டிங். பயன்பாடு இன்றிப் பூட்டிக் கிடக்கிறது. முன்பு அது பிரெஞ்சு இந்திய தேசிய காங்கிரஸ் அலுவலகமாகச் செயல்பட்டது. மாடியில் அலுவலகம், கீழ்த்தளத்தில் துரைசாமி என்கிற காங்கிரஸ் தலைவர் நடத்திய ஹோட்டல். அப்போது காங்கிரஸும், கம்யூனிஸ்ட்டும் பரம எதிரிகள். அதனால், தம் ஹோட்டல் வாசலில், ''கம்யூனிஸ்ட்டுகள் தயவு செய்து இங்கே சாப்பிட வரவேண்டாம்!'' என்று போர்டு எழுதி வைத்துவிட்டார். புதுச்சேரியில் 1947ல் கம்யூனிஸ்ட்டுகள் பேரணி நடத்தினர். நேரு வீதி வழியாக பேரணியில் வந்த கம்யூனிஸ்ட் தோழர்கள், அந்த வாசகத்தைப் படித்துவிட்டு, அந்த ஹோட்டலை அடித்து நொறுக்கினர்.

* தடை போட்ட ஹோட்டல்




வாசகர் யோசனை: **மல்லிகா அன்பழகன்**





தேசமுத்து மாரியம்மா!



கோயில் முகப்பு, வெளிச் சுவர் மீதான பீடத்தில் மாரியம்மன் சிலை. அம்மனின் பக்கவாட்டில் அமர்ந்து, பாடல் புனையும் பாவனையில் மகாகவி பாரதி. மாரியம்மனை தேசமுத்து மாரியம்மனாக உருவகித்து தெய்விக தேசபக்திப் பாடல்களைப் புனைந்ததனால், கோயிலின் முகப்பில் சுவாமி சிலை அருகே அமர வைக்கப்பட்டிருக்கிறான் மீசைக் கவிஞன்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன் உருவானது இக்கோயில். சந்தான நவநீத சித்தர் என்பவரால் மூலஸ்தான அம்மனின் திருவுருவக் கற்சிலை நவபாஷாண மூலிகைகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதாகக் கோயிலின் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது. 1916ம் ஆண்டில் சில தினங்கள் இங்கு வந்து தங்கியுள்ளார் பாரதியார்.

பாரதியார் இங்கு அமர்ந்து பாடிய,

''தேடியுனைச் சரணடைந்தேன் தேச முத்துமாரி /

கேடதனை நீக்கிடுவாய் கேட்ட வரந் தருவாய்...'' மற்றும்,

''உலகத்து நாயகியே எங்கள் முத்து / மாரியம்மா எங்கள் முத்துமாரி / உன்பாதம் சரண் புகுந்தோம் எங்கள் முத்து / மாரியம்மா எங்கள் முத்துமாரி...'' ஆகிய இரண்டு பாடல்களின் முழு எழுத்து வடிவமும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

உப்பளம், நேதாஜி நகரில் அமைந்துள்ளது தேசமுத்து மாரியம்மன் கோயில். கோயில் முகப்பு மேல் தளத்தில் உள்ள மாரியம்மனைக் கண்டு கன்னத்தில் போட்டுக்கொள்ளும் பக்தர்கள், அப்படியே பாரதியைப் பார்த்தும் கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்கள்: 'எல்லார்க்கும் நல்ல புத்தியை... நல்ல வாழ்க்கையைக் கொடுப்பா பாரதி!'

வாசகர் யோசனை :

உமையாள் ரவி

அரசாங்கம்



கீழூர் கிராமத்தின் பேருந்து நிறுத்தத்தை யொட்டி பெட்டிக்கடை வைத்திருந்தேன். ஒரு ரூபாய் நாணயம் போட்டுப் பேசும் தொலைபேசிப் பெட்டியை யும் அங்கு மாட்டி வைத் திருந்த காரணத்தால் என் பொழுதுகள் சுலபமாகக் கழிந்தன. ஏனெனில், தொலைபேசியின் பிரச்னையோ அல்லது பேசுபவர்களின் பிரச்னையோ தெரியாது. பேசுபவர்கள் கத்திக் கத்திப் பேசி, அவர்கள் பேசும் விஷயம் முழுக்க என் காதில் வந்து விழும்படி ஆகிவிடும். அன்று மாலை அப்படித்தான். முதலில் ஒரு முண்டா பனியன் ஆசாமி ஓடிவந்து, ''ஐயா.. தீயணைப்பு அலுவலகம்களா? கீழூர் மேற்குத் தெருவுல, கடைசியா உள்ள வயல்ல கருப்பஞ்சோலை பத்திக்கிட்டு எரியுது. உடனே வாங்க. ஆ... நான் அந்த முக்குட்லதான் நிக்கிறேன்... நீங்க வாங்க நான் கூட்டிட்டுப் போறேன்'' என்று சொல்லிவிட்டு நின்றான்.

சில நொடிகளில் வெள்ளை வேட்டி, சட்டை ஆசாமி வந்து, தொலைபேசியை எடுத்தான்.

''ஐயா... போலீஸ் ஸ்டேஷனுங்களா? கீழூர் வடக்குத் தெருவுல ரெண்டு கோஷ்டி களுக்கு இடையே தகராறு நடந்துக்கிட் டிருக்கு. இல்ல... இல்ல... கருப்பஞ் சோலைய யாரோ கொளுத்திட்டாங்கன்னு பிரச்னை. கத்தி, அருவாளோட ஓடறாங்க. என்னங்க... நானா... பஸ் ஸ்டாப் முக்கடையிலேர்ந்து பேசறேன். இங்கியே நிக்கவா? சரி.''

சற்று நேரத்தில் நடுத்தர வயது கொண்ட இன்னொரு வர் தொலைபேசியில், ''சார்... வனத்துறையா? கீழூர் கிராமம் தெற்குத் தெருவுல இருக்கிற முருகன் கோயில்ல ஒரு பெரிய பாம்பு புகுந்துடுச்சு. கலாட்டா பண்ணிக்கிட்டு இருக்கு. சீக்கிரம் யாரையாவது அனுப்பி அதைப் புடிச்சுட்டுப் போனீங்கன்னா நிம்மதி. இல்ல... ஆங்... இல்ல இல்ல பக்கத்துத் தெருவுல கருப் பஞ்சோல பத்திக்கிச்சு. அங்க இருந்துதான் ஓடியாந்திட்டிருக்கும். கோயிலையா? நான் காட்டறேங்க. நான் இந்த... கீழூர் என்ட்ரன்ஸ்ல இருக்கேன். இங்கியே நிக்கவா? சரி.''

ஐந்து நிமிடத்துக்கும் அதிகப்படியான இடைவெளி விட்டு ஒரு டீ-ஷர்ட் வாலி பன் வந்தான். தன் பாக்கெட் டைரியில் நிதானமாகத் தேடி, குறித்துவைத்திருந்த ஓர் எண்ணைத் தொடர்புகொண்டு,

''ஹலோ... பீட்சா வேணும். அஞ்சு ரிஜ்விஜ் பீட்சா வேணும். கீழூர் ஈஸ்ட் ஸ்டிரீட்ல, பத்தாம் நெம்பர் வீடு. கொண்டு வர முடியுங்களா?''

''..............''

''இல்லீங்க. நீங்க டவுனுக்குள்ளே மட்டும்தான் டோர் டெலிவரி குடுப்பீங்க. கிராமத்துக்கெல்லாம் வரமாட்டீங்கன்னு

தீயணைப்புத் துறை, காவல் துறை, வனத்துறையில் எல்லாம் 'பீட்சா பசங்கள்' வேலைக்கு வச்சா என்ன?

சொன்னாங்க. வருவீங்களா... ஓ.கே. பக்கா கிராமம் சார். எவ்வளவு தூரம்ன்னு தெரிஞ்சுதானே சொல்றீங்க. சரி. நான் அந்த 'கட்'ல நிக்கறேன். ஒரு பெட்டிக்கடை இருக்கு... அங்கதான்'' படபடப்பில்லாமல் பேசினான்.

நேரம் ஓடியது. நான்கு பேரும் காத்திருந்தார்கள். 'யாரையும் காணோமே...' குழப்பத்தோடு இருந்த எனக்கு முற்றுப் புள்ளி வைத்தான், முதலில் வந்து சேர்ந்த ஹெல்மெட் பையன். ஆம். அவன் பீட்சா பையன்! டி-ஷர்ட் பார்ட்டி அவனைத் தன்னோடு அழைத்துக்கொண்டு கிளம்ப, அவசர அழைப்புகள் விடுத்த மூவரும் அப்படியே சற்று நேரம் நின்றுவிட்டு, ஏதேதோ புலம்பிக் கொண்டே நகர்ந்து போனார்கள். அவர்கள் கலைந்து போன பிறகு ஓர் எண்ணம் எனக்குள் தோன்றி மறைந்தது.

'பேசாம... தீயணைப்புத் துறை, காவல் துறை, வனத்துறையில எல்லாம் பீட்சா பசங்களை வேலைக்கு வச்சா என்ன?'○

புதுவை பிரபா



புதுச்சேரி நகரின் மேற்கே அமைந்துள்ள வில்லியனூரில், ஒருமுறை தங்கியிருக்கிறார் விஜய நகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயர். உழவர்கரை கிராமத்தில் உய்யகுண்ட விசுவராய முதலியார் தாடி, மீசை, தலைமுடி மட்டுமின்றி உடல் முழுவதும் முடி வளர்த்து (கரடி சித்தர்?!) சித்தராகக் காட்சியளிப்பதாகத் தகவல் வருகிறது மன்னருக்கு. அமைச்சர் அப்பாஜி ராவ் மற்றும் பரிவாரங்களுடன் உழவர் கரைக்குச் சென்று, சித்தரைப் பார்த்துவிட்டுத் திரும்புகிறார்.

திரும்பி வருகையில் முத்தரையர் பாளையம் நெருங்கும்போது, இருட்டி விடுகிறது. ஓரிடத்தில் வரிசையாய் அகல் விளக்குகள் தீப ஒளி சிந்த அலங்கரிக்கப்பட்டிருந்தது. வாசலில் அழகிய மாக்கோலம். உள்ளிருந்து நறுமணம் கமழ்ந்து வெளியே பரவுகிறது. குதிரையை விட்டுக் கீழே இறங்கி விடுகிறார் பேரரசர். நிச்சயம் இது ஒரு கோயிலாகத்தான் இருக்க வேண்டுமெனக் கருதி, பக்திப் பரவசத்துடன் கை கூப்பி வணங்கி நிற்கிறார். உடன் வந்த பரிவாரங்கள் சும்மா இருக்குமா? அமைச்சர் உட்பட அனைவரும் வணங்கினர்.

அதைப் பார்த்த அந்த ஊர் மக்கள், ''என்ன இது? அநியாயமா இருக்கு! போயும் போயும் இந்த இடத்தைக் கும்பிட்டு வணங்குறாங்க!''னு அதிர்ச்சியாகி, கிருஷ்ணதேவராயரிடம் சென்று, ''பேரரசரே! தாங்கள் நினைப்பது போல் இது ஒன்றும் கோயில் அல்ல. இந்த ஊரில் ஆயி-ஊசி இருவரும் அக்கா தங்கை. இந்த வீடு அவர்களுடையது. இரவு நேரத்தில் வரிசையாய் அகல்விளக்குகள்

அக்கா - தங்கை அளித்த தண்ணீர்க்கொடை!



ஒளிவீச, வாசலில் வண்ணக் கோலமிட்டு, வீட்டினுள் நறுமணம் கமழ வைத்திருப்பது அவர்களது தொழிலாகும்!'' எனக் கூறுகின்றனர்.

கிருஷ்ண தேவராயருக்கும் அமைச்சருக்கும் பெரும் அதிர்ச்சி. தாசியின் வீட்டை வணங்கி விட்டோமே என்கிற உணர்வு கோபமாக மாறுகிறது. ''அந்தத் தாசியின்(ஆயி) வீட்டை இடித்துவிட்டு, அந்த இடத்தில் ஒரு குளமும் கிணறும் வெட்டி அமையுங்கள்!'' என ஆணையிட்டுப் புறப்பட்டுச் சென்று விடுகிறார் அரசர்.


ஆயி எனும் தாசி, வீட்டை இடித்துவிட்டு தாமே குளமும் கிணறும் வெட்டித் தருவதற்கு அனுமதி கோருகிறாள். அனுமதி தருகிறார் அரசர். முதலில் ஒரு கிணறு வெட்டப்படுகிறது. என்ன ஆச்சர்யம்? அதில் சுவையான குடிநீர் ஊற்றாகப் பெருக்கெடுத்துப் பீறிடுகிறது. ஊர் மக்கள் வந்து பார்க்கின்றனர்.



அதன் அருகிலேயே ஒரு குளத்தையும் வெட்டுகிறாள் ஆயி. அந்தக் கிணற்று நீரை குளத்தில் தேக்கி, அப்பகுதி மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குகிறாள்.

தங்கை ஊசி என்பவள், முத்தரையர் பாளையத்துக்கு மேற்கே தனக்குச் சொந்தமான நூற்றைம்பது ஏக்கர் நிலத்தில் பெரிய ஏரி வெட்டித் தருகிறாள். அதில் தண்ணீர் தேங்கி


* ஆயி மண்டபம்...



நிற்கிறது. ஊசி வெட்டித் தந்த ஏரி, ஊசி விட்ட ஏரி என்றாகி, காலப்போக்கில் உசுட்டேரி என்றாகிவிட்டது. தற்போது அந்த ஊருக்கும், ஏரிக்கும் உசுட்டேரி என்ற பெயர் நிலைத்துப் போனது.

ஆயி குளம், உசுட்டேரி என்கிற இரண்டு நீராதாரங்களும்தான் பாண்டி மக்களின் குடிநீர்த் தேவையைப் பெருமளவு இன்றளவும் பூர்த்தி செய்து வருகின்றன. முத்தரையர்பாளையத்தில் ஆயி குளம் எதிரே, இருபது ஆழ்குழாய்கள் அமைத்து குடிநீர் பெறப்படுகிறது. இதற்கு அடித்தளமிட்டவர் போன்தாம்ப் எனப்படும் பிரெஞ்சு கவர்னர்.

'ஆயி குளம்' சிறப்பினைக் கேள்விப்பட்ட பிரெஞ்சு ஆளுநர்


ஆயி மண்டப வரலாறு கூறும் கல்வெட்டு

போன்தாம்ப், பொறியாளர் லமரேஷ் என்பவரிடம் அந்தக் குளத்து நீரைக் கொண்டு புதுச்சேரி நகர மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யுமாறு உத்தரவிடுகிறார். குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன் வெற்றியை புதுச்சேரி ஆளுநர், பிரான்ஸ் நாட்டு மன்னன் மூன்றாம் நெப்போலியனுக்குத் (1852-1870)தெரிவிக்கிறார்.

இதற்கெல்லாம் காரணமாய் இருந்து குளத்தையும் கிணற்றையும் வெட்டித் தந்த ஆயி அம்மைக்கு ஒரு நினைவு மண்டபம் அமைக்க ஆணையிடுகிறார். அதன்படி ஆளுநர் போன்தாம்ப், தம் மாளிகைக்கு எதிரே ஓர் அழகிய மண்டபம் எழுப்புகிறார். அதன் மேற்குப் பக்கம் மேல் பகுதியில் ஆயி அம்மை ஓய்வெடுக்கும் பாங்கில் எழிலான உருவம் படைக்கப்படுகிறது.

ஆயி மண்டபம், 1866ஆம் ஆண்டு ஆகஸ்ட் பதினைந்தாம் நாளன்று திறந்து வைக்கப்பட்டது. மண்டபம் உருவான வரலாற்றைக் கூறும் கல்வெட்டும், மண்டபத்தில் பதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயி மண்டபம்தான், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் அரசு

பாண்டிச்சேரியின் குடிநீர்த் தேவையை ஆயிகுளம், உசுட்டேரி... இரண்டும்தான் பூர்த்தி செய்கின்றன!

சின்னம் என்பது தனிப் பெரும் சிறப்பு!

வாசகர் யோசனை :
புதுவை செ.இராம லிங்கம்


* கிருஷ்ணதேவராயர்

வரலாற்று வார்ப்புகள்!

இது என்ன புதுச்சேரியா இல்லை... சிலைச்சேரியா என்கிற எண்ணத்தை உண்டுபண்ணி விடுகின்றன - அரசியல், கலை, இலக்கியம், சமூகம் என அந்தந் தத்துறை சார்ந்தவர்களின் முப்பதுக்கும் மேற்பட்ட சிலைகள்.

பெரியார், அண்ணா, காமராசர் தொடங்கி மூன்தார்க் அம்மை, ப்ரெஞ்சு போர் மறவர் சிலைகள் வரை என கம்பீரமாகக் காட்சி யளிக்கின்றன.

* வார்ப்பாக வாணிதாசன்...



கவிஞர் வாணிதாசனின் இயற்பெயர் ரெங்கசாமி. வாணிதாசன் எனப் பெயர் சூட்டியவர் சி.பா.ஆதித்த னார். தமிழாசிரியரான வாணிதாசன், மரபுக் கவிஞ ரும்கூட. பாரதிதாசனின் சீடரான இவருக்கு இலக்கியத்துக்கென பிரெஞ்சு அரசு 1972ல் செவாலியே விருது தந்து கௌரவித்துள் ளது. வாணிதாசன் இறந்து முப்பத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. அவரது சிலை பாரதி பூங்கா அருகே அமைக்கப்பட்டுள் ளது.

புதுச்சேரி கவர்னர் தூப்ளே. இவரிடம் தலைமைப் பிரதிநிதியாக இருந்தவர்தான் ஆனந்தரெங்கம் பிள்ளை. இவருடைய டைரி, இலக்கிய உலகில் படுபிரபலம். தூப்ளேயின் மனைவி ஆடம்பர ப்ரியை. அவர் நிர்வாகத்திலும் தலையிட்டதால் தூப்ளேக்கு அவப்பெயர் ஏற்பட்டு பிரெஞ்சு அரசின் நீதி விசாரணைக்கு உட்பட வேண்டியிருந்தது. அந்தக் கவலையிலேயே மனம் நொந்து இறந்து போனார். விசாரணை யின் முடிவில், தூப்ளே குற்றமற்றவர் என்பது நிரூபணமானது.



அவரைக் கௌரவிக்கும் வகையில் கடற்கரையில் சிலை எழுப்பியது பிரெஞ்சு அரசு. பாண்டிச்சேரி நகரை அழகுற வடி வமைத்தவருக்கு அழ கான சிலை!



* பாண்டியை அழகுற அமைத்த தூப்ளே

வாசகர் யோசனை :
புதுவை
செ.இராமலிங்கம்,
அ.யாழினி பார்வதம்



தனியா ஒண்ணு நடக்கும். கிறிஸ்தவ ஆலயத்துல தெப்பக்குளமான்னு ஆச்சர்யப்படுவீங்க. வில்லியனூர் மாதா கோயில் வளாகத்து உள்ளே கோயில் எதிர்ல தெப்பக்குளம் ஒண்ணு இருக்கு. மைய மண்டபத்துல ஏசுநாதர் சிலை நிறுவப்பட்டிருக்கு. குளத்து நீரை பக்தர்கள் புனித நீராகப் பயன்படுத்துறாங்க. பலருக்கு நோய்கள் குணமாகுது. கிறிஸ்தவ ஆலயங்கள்லயே தெப்பக்குளம் அமைந்திருப்பது ஆசியா கண்டத்துலயே இங்கே மட்டும்தான்!

மாதா கோயில் தெப்பக்குளம்

பெரும்பாலும் இந்துக் கோயில்கள்லதான் தெப்பக்குளம் இருக்கும். தெப்பத் திருவிழான்னே

வாசகர் யோசனை:
- மல்லிகா அன்பழகன்

பாரதிதாசன் பிறந்த இல்லம்!

குருவுக்கு ஈஸ்வரன் கோயில் தெரு என்றால், சீடருக்கு பெருமாள் கோயில் தெரு. பாரதிதாசன் கனகசுப்புரத்தினமாகப் பிறந்து தவழ்ந்த வீடு பெருமாள் கோயில் தெருவில் இருக்கு. வளர்ந்த பின்னர் கவிதைகள் வந்து தளர்ச்சியின்றிக் கொட்டியபோது, பாரதி மீது கொண்ட கவிதா மோக ஆவேசம் காரணமாக பாரதிதாசனாக தம்



தி பவன்



பாரதி வாழ்ந்த வீடு!

கடற்கரைக்கும், குயில் தோப்புக்கும், வீட்டுக்குமென ஒரு நாளைக்கு மனுஷன் அத்தினி நடை நடப்பாராம். புதுச்சேரி, ஈஸ்வரன் கோயில் தெருவில 1908லேருந்து 1918 வரைக்கும் அவர், கால் தேய நடந்திருக்கார்!





மகாகவியோட சிந்தனைக்கு சிறகுகள் முளைச்சது இந்த ஊர்லதான்னு இலக்கிய ஆய்வாளர்கள் சொல்றாங்க. அவரு வசிச்ச வீட்டை புதுவை அரசு, நினைவு இல்லம் மற்றும் ஆராய்ச்சி மையமாகப் பராமரித்து வருது. காட்சியகம், பாரதியோட பத்திரிகைத் தொடர்பு, கையெழுத்துப் பிரதியா சில கவிதைகள், சில கடிதங்கள், தன்னோட இளம் மனைவி செல்லம்மாவுக்கு எழுதிய காதல் கடிதம் - எல்லாம் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. படிச்சுப் பார்த்துட்டு தொட்டுக் கண்ணுல ஒத்திக்கணும் போல இருக்கு!

வாசகர் யோசனை: **அ.யாழினி பர்வதம்**



பெயரைப் பிரகடனப்படுத்திக் கொண்டவரின் வீட்டினை, 1971லிருந்து நினைவு இல்லம் மற்றும் அருங்காட்சியமாகப் பராமரித்து வருகிறது புதுச்சேரி அரசு. நாம் சென்றிருந்தபோது கட்டடத்தின் உள்ளே வர்ணமடித்தல் மற்றும் கட்டட மராமத்துப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

வாசகர் யோசனை: **பர்வதம்**



யானை முக மரம்!

மஞ்சினி நகர்ல ஒரு பொதிகை மரம். அது பாட்டுக்கு வளர்ந்துட்டுப் போனப்ப, அதோட அடிமரப் பகுதி உருண்டு திரண்டு வந்திருக்கு. நல்லா உத்துப் பார்த்தப்ப... அட யானை மொகம்! எப்படி இருக்கும் நம்மாளுங்களுக்கு! உடனே செயல்ல எறங்கிட்டாங்க. துதிக்கைக்கு (மரத்துலதான்) மஞ்சளைப் பூசி, நெத்திப் பட்டையில (மரப் பட்டைதான்) விபூதி குங்குமமிட்டு, தரையை ஒட்டி இருக்கற அந்த மரத்தோட அடிப்பகுதியில சரிகைத் துண்டு கட்டி விட்டுட்டா... அட மர வடிவத்துல அச்சு அசலா அற்புத விநாயகர். பொறவு என்னா... பொதிகை மரத்துல சுயம்பாகத் தோன்றிய இன்ஸ்டன்ட் விநாயகர், பக்தர்களுக்கு அருள் பாலிச்சுட்டு இருக்கார்.

வாசகர் யோசனை: **எஸ்.பாஸ்கரன்**



கண்ணாம்பார் படகுத் துறை!

பாண்டியில அவசியம் பார்க்க வேண்டிய இடம், அகண்ட கண்ணாம்பார் ஆறு கடல்ல கலக்குற முகத்துவாரம். ரம்யமா இருக்கு. படகு சவாரி உண்டு. காலை ஒன்பது முதல் மாலை ஆறு மணி வரை. மூணு கி.மீ. தூரம் படகுல போகணும். வால் மாதிரி நீட்டமா பெரிய மணல் திட்டு. அங்கிருந்து கடல் ஆரம்பம். கடற்கரை படகு சவாரி மாலை ஆறு மணி வரைக்கும்தான். அந்த மணல் திட்டுல ஹோட்டல் இருக்கு. ஆர்ப்பரிக்கும் அலைகடலை ரசிக்கலாம். நிர்ணயிக்கப்பட்ட தூரம் வரை படகுலயும் போய் வரலாம். தாராளமா செலவு பண்றதுலயும், இதுபோல ரிஸ்க் எடுக்கற சமாசாரம் எல்லாம் ரஸ்க் சாப்பிடுற மாதிரிங்கற தாலபுமோ என்னவோ வெள்ளைக்காரங்க எல்லாத்துக்கும் ஓ.கே. நம்ம ஆளுங்கள்ல பல பேரு தயங்கித் தூரமா நின்னு ரசிச்சுப் பார்த்துட்டு வந்துடுறாங்க.

வாசகர் யோசனை : **எஸ்.விஜயலட்சுமி**



விருது பிரியங்கா!

கல்கி வாசகர்களுக்கு வணக்கம்!

என்னைப் பத்திக் கொஞ்சம் சொல்லட்டுமா?

என் பேரு பிரியங்கா. என்னோட அம்மா தேன்மொழி, இனிய இல்லத்தரசி. அப்பா இளஞ்செழியன் உதவிப் பேராசிரியர். வீட்டுக்கு நான்தான் மூத்த பெண். அதனால ரொம்ப செல்லம். மூணு வயசுல பென்சில் எடுத்து ஏதேதோ கிறுக்க ஆரம்பிச்சிருக்கேன். ('பொதுவா அந்த வயசுல எல்லா புள்ளைங்களும் கிறுக்கும். இதுல என்ன மேட்டர்?'னு கேக்குறது காதில் விழுது!) அதைப் பார்த்துப் பரவசமாகி அப்பா, என்னோட நாலு வயசுல ட்ராயிங் கிளாஸ்ல சேர்த்து விட்டாரு. அங்கே பயின்ற ரொம்ப ரொம்பக் கம்மி வயசு ஓவிய மாணவி நான்தான்.

அஞ்சு வயசுலேருந்து ஓவியப் போட்டிகள்ல பங்கேற்க ஆரம்பிச்சேன். பாண்டிச்சேரி மாகாண அளவுல பல பரிசுகள், தேசிய அளவுல இரண்டு முறை தங்கப் பதக்கம்னு ஓவியப் போட்டிகள்ல நிறைய பரிசு வாங்கிக் குவிச்சிருக்கேன்.

ஸ்ரீராம் சிட்ஸ் நடத்தின குறள் பற்றிய பேச்சுப் போட்டியிலும் ஒரு தடவை பரிசு. செஸ் போட்டியிலும் நான் ஆஜர் ஆனேன். மாநில அளவில் இரண்டாம் பரிசு.

2008ல் புதுவை யோகாஞ்சலி நாட்டியாலயா அமைப்பு, எனக்கு 'பெஸ்ட் சைல்டு அவார்டு' தந்திருக்கு. ஓவியம், யோகா, பேச்சு அப்படின்னு புத்தி சுத்திச் சுத்தி வந்தாலும், பெரிய ஓவியரா ஆகணும்கறதுதான் என்னோட கனவு. இப்ப நான் புதுவை லாஸ்பேட்டையில் ஜோசப் க்ளுனி மெட்ரிக் மேனிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிச்சிட்டு இருக்கேன். சிறந்த ஓவியர்ங்கற என்னோட கனவு பலிக்க எனக்காக பிரார்த்தனை பண்ணிக்கங்க... ப்ளீஸ்!

ரொம்ப தேங்க்ஸ்.

இப்படிக்கு,

பிரியங்கா



✱ பிரியங்கா



இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட திருக்கோயில், நாற்பதாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் கட்டி எழுப்பப் பட்டுள்ளது என்பதே வேதபுரீசுவரர் திருக்கோயிலின் திடுக்கிடும் வரலாறு. புதுச்சேரியின் பழைமையான பெயர் வேதபுரி. சோழர் காலக் கைவண்ணப் பெருமையுடையது. வேதபுரீசுவரர் கோயிலின் சிவலிங்கம் சுயம்புமூர்த்தி!


காந்தி வீதியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது கோயில். எழுபத்தைந்து அடி உயர இராஜகோபுரம். நுழைந்ததும் நம்மை வரவேற்பவை பலிபீடம், கொடி மரம். அடுத்து நந்தியின் திருவுருவம். கிழக்குப் பிராகாரத்தில் சூரியன், சந்திரன், பைரவர் என திருச்சுற்று தேவதைகள். தென்கிழக்கு மூலையில் நால்வர்க்கான ஆலயங்கள் தனித்து அமைந்துள்ளன. கோயிலுக்கு கிழக்கு, தெற்கு, வடக்குப்புற வாசல்கள். இதில் தெற்கு நோக்கி வீற்றிருக்கிறாள் திரிபுரசுந்தரி.

அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் திருவுருவச் சிலைகள். கருவறையைச் சுற்றிலும் ஆகமப்படி தெய்வங்கள் பிரதிஷ்டை. தென்புறத்தில் தக்ஷிணாமூர்த்தி. கருவறையின் பின்புறத் திருச்சுற்றில் திருமால். வடக்கில் விஷ்ணு துர்க்கை. இங்கே வழிபாட்டுக் குழுவினர் பாடி, பரவசம் அடைவது தனி அழகு. தென்மேற்குப் பிராகாரத்தில் நாயன்மார்களுக்கு எதிரே கிழக்கு நோக்கி, விநாயகருக்குத் தனி சன்னிதி. மகாமண்டபம், அர்த்தமண்டபம், கருவறை ஆகியவற்றுடன் பொலிவாகக் காட்சியளிக்கிறது திருக்கோயில்.

பன்னிரு தோள்களோடும், ஆறு முகங்களோடும் ஆறுமுகப் பெருமான் தனிக்கோயில் கொண்டுள்ளார். இதற்கடுத்து மெய்யன்பர்கள் கூடி, தண்டாயுதபாணிக்குத் தனி சன்னிதி நிறுவியுள்ளனர். இதன் வடக்கே பக்தபுரீஸ்வரர் கோயிலில் மூலவர் லிங்கமூர்த்தமாகக் காட்சியளிக்கிறார். ஆனந்தத்தாண்டவ நடராசருக்கும், சிவகாமி அம்மைக்கும் சிறிய கோயில், வடக்குப்பிராகாரத்தின் மேற்குக் கோடியில். கல்லிலே கலைவண்ணமாக வடிக்கப்பட்டுள்ளனர் தாண்டவரும் அம்மையும். இந்த நடராசர் சன்னிதியில் சிதம்பரம் போன்றே, தனி விழாவான ஆனித் திருமஞ்சனம், ஆருத்ரா தரிசனம் போன்றவை நடக்கின்றன. மார்கழித் திங்களில் திருவெம்பாவை ஓதப்பெறுகின்றது.

கந்தப்ப முதலியாரின் முயற்சி!

விபவ ஆண்டு ஆவணி மாதம் இருபதாம் தேதி (1748) அன்று, இத்திருக்கோயில் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டதாக ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் பதிவாகியுள்ளது. வன்முறையில் இடிக்கப்பட்ட இக்கோயில் டூப்ளே - ரங்கப்பிள்ளை காலத்தில் புதிதாக உருவாக்கப்படாமலே போயிற்று. அதன் பின்னர் கி.பி.1788ல் திவான் கந்தப்ப முதலியாரின் முயற்சியாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பாலும் மீண்டும் புத்தம் புதியதாகக் கட்டி முடிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது.



இருபது தூண்களைக் கொண்ட மகா மண்டபம், கோயிலின் உள் பிராகாரத்தில் நுழைந்ததும் நம்மை வரவேற்கிறது. இம்மண்டபம் வேதபுரீசுவரர், திரிபுரசுந்தரி அம்பிகை ஆகியோரின் கருவறை. இது அர்த்த மண்டபங்களோடு இணைந்து ஒரே மண்டபமாகக் காட்சியளிக்கிறது. அம்மன் சன்னிதி மகாமண்டபத் தூண் ஒன்றில் ஆஞ்சநேயர்.


வேதபுரீசுவரர் லிங்க வடிவில் அருட்காட்சி அளிக்கிறார். திரிபுரசுந்தரியின் உற்சவமூர்த்தியாக அன்னை பராசக்தி இங்கே அமைதி கொலுவீற்றிருக்கிறாள்.

வேதபுரீசுவரர் கோயிலுடன் சேர்த்து புதுச்சேரி நகருக்குள் பல சிவாலயங்கள் அமைந்துள்ளன. இராயப்புதுப்பாக்கம் - அரசனேசுவரர், மாத்தூர் - மன்னாதீசுவரர், இரும்பை மாகாளம் - மகா காளேஸ்வரர், ஒழிந்தியாபட்டு - அரசலீசுவரர், வில்வநத்தம் - அகண்ட வெளிப்பரப்பு லிங்கம், கோட்டக் குப்பம் - அனந்தீசுவரர் கோயில், வானூர் - தவக்கொழுந்தீசுவரர், கிளியனூர் - அகத்தீசுவரர், கீழ்புத்துப்பட்டு - மஞ்சனீசுவரர், புதுச்சேரி - காளத்தீசுவரர், வில்லியனூர் - திருக்காமேசுவரர், திருவக்கரை - சந்திரமௌலீசுவரர், பெருமுக்கல் - முக்காலீசுவரர், முன்னூர் - ஆடவல்லீசுவரர், மரக்காணம் - பூமிலிங்கேசுவரர், திருச்சிற்றம்பலம் - கைலாசநாதர் மற்றும் உலகாபுரம் - உலகாபுரீசுவரர்!


புதுச்சேரியில் சூழ்ந்துள்ள சிவாலயங்களைத் தரிசிக்கக் கிளம்பி விட்டீர்களா?

வாசகர் யோசனை : **தண்டபாணி**

கோயில் சூழ் புதுச்சேரி










முட்டுக்கட்டை போடும் '3'

மத்த பிரதேசங்களைக் காட்டிலும் பாண்டிச்சேரியில பல சலுகைகள் இருக்கறதா பரவலா ஒரு கருத்து இருக்கு. அதெல்லாம் உண்மையா? பாண்டிச்சேரிக்கு இன்னும் என்ன வேணும்? - புதுச்சேரி வர்த்தக சபைத் தலைவர் சிவசங்கரைச் சந்தித்தோம்...

"**பு**துவையில அக்கவுண்ட்ஸ் படிக்க விரும்புறவங்களுக்குத் தேவையான பயிற்சி வகுப்புகள் ஏதும் இல்லை. சி.ஏ. பண்ணணும்னு நெனைக்கறவங்க சென்னையிலதான் தங்கிப் படிக்கணும். அதுக்கு வசதி இல்லாத மாணவ-மாணவியர் சி.ஏ. படிக்க முடியாமப் போகுது. புதுவையில சி.ஏ.க்குன்னு அரசே பயிற்சி வகுப்புகள் தொடங்கினா, வணிகவியல் பட்டதாரிகளுக்கு ரொம்ப யூஸ்ஃபுல்லா இருக்கும்.

இங்க இருக்கற தூர்தர்ஷன் தொலைக் காட்சி தினமும் மாலை ஐந்தரை மணியிலிருந்து இரவு ஏழு மணி வரைக்கும்தான்

ஆசியா கண்டத்துலேயே முதன்முதலா உருவானது (சேம்பர் ஆஃப் காமர்ஸ் - வணிகர்கள் சங்கம்), புதுச்சேரி வர்த்தக சபை. பிரெஞ்சுக்காரர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. பிரெஞ்ச் கவர்னர்தான் அதன் தலைவர். இந்த நடைமுறை 1954 வரைக்கும் இருந்துருக்கு. 1954லிருந்து 1986 வரை காசிம் என்பவரும், 1986லிருந்து 2009 மார்ச் வரை டாக்டர் கோவிந்தசாமி முதலியார் (92 வயது) என்பவரும் புதுச்சேரி வர்த்தகசபைத் தலைவராக இருந்துள்ளனர். இப்போது சிவசங்கர்.







- பாண்டிச்சேரி வர்த்தகச் சங்கத் தலைவர் சிவசங்கர்

ஒளிபரப்பாகுது. பகல் முழுவதுமான ஒளிபரப்பாகச் செய்தால், இன்னும் பயனுள்ளதாக அமையும். மாநிலப் பல்கலைக்கழகமும், என்.ஐ.டி.யும் கொண்டு வரப்பட வேணும்.

எங்க ஊர்ல ரயில் நிலையம் நவீனமா சூப்பரா கட்டிட்டாங்க. ஆனா அடிக்கடி வந்து போக போதுமான ரயில்கள்தான் விடலை. காலைல ஆறு மணிக்கு சென்னைக்கு ஒரு ட்ரெயின். அதே போல சென்னையிலேருந்து பாண்டிக்கு மாலை ஆறு மணிக்கு அதே ட்ரெயின்.



மத்தபடி பாண்டியிலேருந்து தமிழ்நாட்டோட முக்கிய நகரங்களுக்கு நேரடி விரைவு ரயில் ஏதுமில்லை.

இங்கே ஏர்போர்ட் இருக்கு. சமீபமா விரிவு பண்ணினாங்க. கடந்த அஞ்சு வருஷமா பயணிகள் விமானச் சேவை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கு. அதை இயக்கணும். சென்னை, பெங்களூரு, திருப்பதி போன்ற முக்கிய நகரங்களுக்கு பயணிகள் விமானச் சேவை வேணும்.

தட்டாஞ்சாவடி, மேட்டுப்பாளையம், சேதுராப்பட்டு, திருபுவனை, காட்டுக்குளம் ஆகிய பகுதிகள்ல ஒரு காலத்துல சிறிசும் பெருசுமா மொத்தம் எட்டாயிரம் தொழிற்

சாலைகள் இயங்கின. இப்போ இரண்டா யிரம் தான். மீதியை மூடிட்டாங்க... சுமார் ஒண்ணரை லட்சம் தொழிலாளர்கள் வேலை இழப்புக்கு ஆளாகிப் போயினர். காரணம் மத்திய அரசுதான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் மத்திய அரசு, பாண்டிச்சேரியில் சமச்சீர் வரியை அமுலுக்குக் கொண்டு வந்தது. இன்கம்டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ் வரிவிலக் குச் சலுகைகளை வாபஸ் பெற்றுக்கொண்டது. 2009 பிப்ரவரியிலிருந்து வாட் என்கிற வரியையும் கொண்டு வந்துவிட்டது. வரிசையா வந்திறங்கிய இந்த மூணு விதமான வரி விதிப்புகளும், பாண்டிச் சேரி தொழில் மற்றும் வர்த்தகத் துறையோட வளர்ச்சிக்கு அகற்ற முடியாத மிகப் பெரிய முட்டுக்கட்டைகளாகிவிட்டன.

"இன்கம் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ், வாட்... மூன்றும்தான் பாண்டியின் தொழில் முன்னேற்றத்தைக் கீழ்நோக்கி இழுக்கின்றன!"

உதாரணத்துக்கு, முன்னாடி சென்னை யில வாங்கற ஒரு பொருள் பாண்டியில ஆயிரம் ரூபா விலை குறைவா கிடைக்கும். இப்ப அதுவே சென்னை விலையை விட ஆயிரம் ரூபா அதிகமா ஆகிடுச்சு. அப்புறம் எப்படி தொழில் மற்றும் வர்த்தகம் பெருகும்? இப்போதைக்கு வாய்ப்பு இல்லை. தொழிலகங்களுக்கான மூலப் பொருட்கள் வெளிமாநிலங்கள்லேருந்து தான் வாங்கிவர வேண்டியதா இருக்கு.

மத்திய அரசு, பாண்டி யில சமச்சீர் வரியை ரத்து பண்ணணும். வாட் (VAT), CSTயை வாபஸ் வாங்க ணும். அப்பத்தான் பாண்டிச் சேரியில தொழில் மற்றும் வர்த்தகத்துறை வளர்ச்சி அடையும். இழுத்து மூடப் பட்ட தொழிற்சாலைகள் மீண்டும் இயங்கத் தொட ங்கும். அந்தந்தத் தொழில் சார்ந்த வணிகம் பெருகும். ஆவன செய்யுமா, மத்திய அரசு?'' கேள்வியோடு முடித்துக் கொண்டார்.

வாசகர் யோசனை:
மாலதி மணியன்



சிவராந்தகம் கிராமம் பாண்டிச்சேரியில் இருந்து 30 கி.மீ. தொலைவில் இருக்கிறது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசுமையைப் போர்த்திக் கொண்டுள்ள கிராமம். இந்தக் கிராமத்தின் எல்லையில் உள்ள மாரியம்மன் கோயிலை ஒட்டி இருக்கிறது அந்த மெகா... மெகா ஆலமரம். ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் பள்ளிச் சிறுவர்கள் மற்றும் வெளிநாட்டினர் ஆலமரத்தைப் பார்க்க வருகிறார்கள். இது தவிர அவ்வப்போது தாவர இயல் நிபுணர்களும் வருகிறார்கள். இந்த 'படா' ஆலமரத்தைப் போஷித்துப் பாதுகாத்து வருபவர் மகேஸ்வரி.

''நாற்பத்து மூன்று வருஷம் ஆச்சு ஐயா... அப்போ இந்தப் பகுதி காடாகத்தான் இருந்தது. அப்போ சின்னதாக இருந்த கோயிலையும் மரத்தையும் பராமரிச்சுக்கிட்டு குழந்தைகளுடன் இங்கேயே தங்கிட்டேன். நான்கு பேர் சேர்ந்து கட்டிப் பிடிக்கும்படி இருந்த ஆலமரத்தை இன்று முப்பது பேர் சேர்ந்தால்தான் கட்டிப் பிடிக்க முடியும்'' என்கிறார் மகேஸ்வரி.

காலையில் எழுந்தவுடன் பரந்து விரிந்திருக்கும் ஆலமரத்தின் கீழுள்ள இலைச் சருகுகளைக் கூட்டிச் சுத்தமாக்குகிறார். பின்னர், தரையைத் தொடத் துடிக்கும் விழுதுகளுக்கு, முனையில் உரம் பூசி பூமியில் குழிதோண்டி சரியான விதத்தில் ஊடுருவ ஏற்பாடு செய்கிறார். ''இந்த விழுதுகள் சரியாக பூமிக்குள் சென்றால்தான் அடிமரம் உறுதிப்பட்டு புயல் காற்றில் மரத்துக்கு ஒன்றும் ஆகாது'' என்கிறார் மகேஸ்வரி. பல புயல்களைத் தாங்கியுள்ளது இந்த ஆலமரம்.

கோயிலுக்கு வரும் பக்தர்களின் காணிக்கையை வைத்து வாழ்க்கையை ஓட்டும் மகேஸ்வரியின் ஒரே ஆசை, ஆலமரத்து அடியில் தன் வாழ்வு முடிய வேண்டு மென்பதுதானாம். ''அம்மா கருணையில் அதுவும் நடக்குங்க'' என்கிறார். அவர் வளர்த்த ஆலமரம் தலைமுறைகளுக்கு அவர் பெயரைச் சொல்லுமே!



* மகேஸ்வரி

விழுதுகளைக் காக்கும் மகேஸ்வரி!





கருவறை மூலவருக்குப் பாலாபிஷேகம் எனில் ஆயிரம் லிட்டர் பால் தேவை. முப்பத்தாறு அடி உயரம். ஐந்து விதத் தெய்வத் திருமுகங்கள். பின்பக்கம் கருட முகம். வலது பக்கம் வராகம். இடது பக்கம் நரசிம்மம். நடுவில் அனுமன் முகம். அதன் மேலே ஹயக்ரீவர் என ஐந்து திருமுகங்கள். பத்து திருக்கரங்களிலும் அந்தந்தத் தெய்வங்களின் மங்கலப் பொருட்கள். பஞ்சமுக ஆஞ்சநேயர் திருவுருவத்தின் மூன்று பக்கங்களில் ஐந்து நிலை பால்கனி அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஏறி நின்று பால் வார்த்துத்தான் உச்சிமுதல் பாதம் வரையிலுமாக சுவாமிக்கு பாலாபிஷேகம் செய்ய முடியும்.

சனி, ஞாயிறு அறுநூறு பேர்களுக்கும், இதர நாட்களில் தினசரி இருநூறு பேர்களுக்கும் மதிய உணவு அன்னதானம். உலகிலேயே மிக அதிக உயரத்தில் எழுப்பப்பட்டு மூலவராக நின்ற கோலத்திலிருக்கும் முப்பத்தாறு அடி உயர பஞ்சமுக ஆஞ்சநேயர். எங்கே என்கிறீர்களா...

பாண்டி - திண்டிவனம் நெடுஞ்சாலை. பதினைந்து கிலோமீட்டர் தூரத்தில் உங்கள் கண்களில் படுவது பஞ்சவடீ ஆஞ்சநேயர்! அழகிய கோயிலும் அதன் நெடிதுயர்ந்த கருவறை கோபுரமும். அதன் தெய்விக வசீகரம். இத்திருக்கோயில் உருவாக மூல காரணமாக இருந்தவர் ஆஞ்சநேய பக்தரான ப்ரம்மஸ்ரீ ரமணி அண்ணா. சென்னை நங்கைநல்லூரில் உள்ள விஸ்வரூப ஆதிவ்யாதிஹர ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் கோயில் உருவாக மூல காரணமாக இருந்தவரும் இவரே.

ரமணி அண்ணா ஒருமுறை, பண்ருட்டி ஸ்ரீஹனுமான் ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். வீரவல்லி சந்தானம் அய்யங்கார் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவரது நிலத்தைப் பார்வையிடச் சென்

பலம் தரும் பஞ்சவடீ!



நார். அந்நிலத்தில் காலடி எடுத்து வைத்ததும், அமானுஷ்யமான தெய்விக சக்தி பிரவாகமெடுத்துத் தம்மை ஆட்கொள்வதை உணர்ந்து மெய்சிலிர்த்தார். இங்கு தமக்கொரு ஆலயம் எழுப்ப வேண்டுமென ஸ்ரீ ஹனுமான் அசரீரியாகக் கட்டளையிடுவதாக உணர்ந்தார். ரமணி அண்ணா தெய்வசித்தத்தை வீரவல்லி சந்தானத்திடம் தெரிவித்தார். அதன்படியே ஆகட்டும் என நெகிழ்வுடன் தமது நிலத்தைத் திருக்கோயில் கட்ட உடனடியாக வழங்கினார் சந்தானம்.

அந்த இடத்தில் கோயில் கட்ட அஷ்டமங்கள தேவபிரசன்னம் பார்க்கப்பட்டு 1999ல் பணி தொடங்கப்பட்டது. 2007 ஜனவரியில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. நாள்தோறும் அலைகடலென பக்தர்கள் கூட்டம்.

முப்பத்தாறு அடி உயர பஞ்சமுக ஆஞ்சநேயர் கற்சிலை செதுக்க, ஒரே கல் தேடியது பெருங்கதை!

இதற்கு நாற்பதடி உயரமும் நல்ல அகலமும் கொண்ட ஒரே கருங்கல் தேவைப்பட்டது. கல்தேடல் தொடர்ந்து நடந்தபோது சிறுதாமூர் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர், தமது ஊரில் மிகப் பெரிய கருங்கல் இருப்பதாகத் தெரிவித்தார். சென்று பார்த்தார்கள். ஒரு தோட்டம். நல்ல நீள அகலம் கொண்ட கருங்கல். அங்கு பகவானே பூமிக்குள் ஓய்வாகப் படுத்து இருப்பது போன்ற உணர்வு.





தோட்டத்திலிருந்த நூற்றைம்பது டன் எடை கொண்ட கருங்கல், கேளம்பாக்கம் முத்தையா ஸ்தபதி குழுவினரால் பஞ்சமுக ஆஞ்சநேயராக உருமாறியது.

உலகில் எந்தவொரு கோயிலிலும் இல்லாத வகையில் ஸ்ரீராமர், சீதாபிராட்டி, லக்ஷ்மணர், பரதன், சத்ருக்னன், ஆஞ்சநேயர், விபீஷணர், சுக்ரீவன், அங்கதன் மற்றும் ஜாம்பவான் என பூர்ண பட்டாபிஷேகத் திருக்கோலத்தில் சன்னிதி இங்கு அமைந்துள்ளது.

வாசகர் யோசனை : **உமையாள் ரவி**

1947.

ஆங்கிலேயர்களிடமிருந்து நாம் விடுதலை பெற்றபோது, புதுச்சேரி தொடர்ந்து ஃபிரான்ஸ் நாட்டின் காலனி பகுதியாகவே இருந்து வந்தது. அந்தச் சூழலில் புதுச்சேரி தலைவர்களான குபேர், முத்துப்பிள்ளை, வெங்கட சுப்பா ரெட்டியார் மற்றும் பலர் விடுதலைக்காகப் போராடி வந்தார்கள். பிரதமர் நேருவும், பிரான்ஸ் தேசத்துத் தலைவர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு புதுச்சேரிக்கு விடுதலை வழங்க வேண்



• மன்னர் மன்னன்

புதுச்சேரி சுதந்திரம் பெற்றது எப்போது?

டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால், ''ஃபிரான்ஸ் நாடு ஜனநாயகத்தில் வலுவான நம்பிக்கை உள்ள நாடு. எனவே, மக்கள் கருத்தறிந்துதான் முடிவு செய்வோம்'' என்று சொல்லிவிட்டது. அப்புறம் என்ன நடந்தது? புதுவை வரலாறு குறித்து பல புத்தகங்கள் எழுதியுள்ளவரும், பாரதிதாசனின் மகனுமான பேராசிரியர் மன்னர் மன்னன் சொல்கிறார்:

''தமிழகத்தின் எல்லையோர கிராமமான கீழூர் என்ற இடத்தில் வாக்கெடுப்பு நடத்தலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. அந்தக் கிராமம் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது என்றால், அது தமிழக எல்லையோரம் இருப்பதால், ஏதேனும் கலவரம், அசம்பாவிதம் நடந்தால், தமிழகக் காவல் துறை உள்ளே நுழைய வாய்ப்பிருக்குமே... அதனால்தான். மக்கள் நேரடியாக வோட்டுப் போடாமல் அவர்களது உள்ளாட்சிப் பிரதிநிதிகளாக இருந்த 178 பேர் வோட்டுப் போட கீழூர் வந்தார்கள். இந்திய - ஃபிரான்ஸ் தேசத்து அதிகாரிகள் முன்னிலையில் வாக்கெடுப்பு நடந்தது. பிரதமர் நேரு தில்லியிலிருந்து டிரங்க்காலில் மணிக்கொருமுறை குபேரிடம், 'என்னாச்சு' என்று கேட்டுக்கொண்டிருந்தார். 170 பேர் புதுச்சேரி இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று வாக்களித்தார்கள். செய்தி பரவியதும் புதுச்சேரியே கொண்டாட்டத்தில் இறங்கியது. அப்போது குபேர் நேருவிடம், 'எந்தக் காலகட்

டத்திலும் புதுச்சேரி ஒரு தனி மாகாண மாக இருக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். நேருவும் ஒப்புக்கொண்டார். கீழூர் வாக்கெடுப்பு நடந்தது. 1954ம் வருடம் அக்டோபர் மாதம் பதினெட்டாம் தேதி. கீழூர் கிராமத்தில் நினைவுச் சின்னம் இருக்கிறது. ஃபிரான்ஸ் கொடி



● வைத்திலிங்கம்



இறக்கப்பட்டு, நிலப்பகுதிகள் இந்தியா விடம் ஒப்படைக்கப்பட்டது அதே வருடம் நவம்பர் ஒன்றாம் தேதி. ஆனால் புதுச்சேரி, இந்தியாவுடன் இணைந்த பிறகு ஃபிரான்ஸ் பாராளுமன்றம் ஒப்புதல் அளித் தது, 1962-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் பதினாறாம் தேதி. இப்போது பிரச்னை என்னவென்றால் ஃபிரான்ஸ் கொடி இறக் கப்பட்ட நவம்பர் ஒன்றாம் தேதியை புதுவை சுதந்திர நாளாகக் கொண்டாடுவதா அல்லது ஃபிரான்ஸ் பாராளுமன்றம் ஒப்பு தல் அளித்த ஆகஸ்ட் 16-ம் தேதியை சுதந்திர நாளாகக் கொண்டாடுவதா என்பது தான். இதுவரை அரசு மட்டத்தில் ஆகஸ்ட் 16ஐத்தான் புதுச்சேரி சுதந்திர நாளாகக் கொண்டாடி வருகிறார்கள்.''

ஆனால் சில இயக்கங்கள் பிரெஞ்சுக் காரர்கள் வெளியேறிய நவம்பர் ஒன்றைத் தான், சுதந்திர நாளாகக் கொண்டாட வேண்டும் என்று பிரச்னையைச் சூடாக்கிக் கொண்டிருக்கிறார்கள். 1954-யைக் கணக்கில் வைத்து, 2004ல் அப்துல்கலாம் தலைமை யில் புதுவையில் சுதந்திரப் பொன் விழா வையும் கொண்டாடி விட்டார்களாம். ''இதில் எதற்குப் பிரச்னை? நவம்பர் ஒன் றையும் கொண்டாடலாம்; ஆகஸ்ட் 16ம் தேதியிலும் கொண்டாடலாம். ஃபிரான்ஸ்

- சூடாகும் சர்ச்சை!

தேசத்துப் பாராளுமன்றம் ஒப்புதல் அளிக்க எட்டு வரு டங்கள் எடுத்துக் கொண்டதற் குக் காரணம், இங்குள்ள மக்களுக்கு ஃபிரான்ஸ் குடிமகன்களாகத் தொடர வாய்ப்பு கொடுப்பதற்காகத் தான்'' என்கிறார் மன்னர் மன்னன்.

இது தொடர்பாக புதுவை முதல்வர் வைத்திலிங்கத் திடம் கேட்டபோது, ''இந்த விவகாரத்தில் de-facto; dejure என்ற சட்ட வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். இதற்கான சரியான விளக்கத்தைப் பெற்று முடிவு செய்வோம்'' என்றார்.

ஏதாவது பிரச்னை கிளப்பிக் கொண் டேயிருந்தால்தான் சிலருக்குப் பொழுது போகும்!

அருணன் சரண்யா

19

''விட்டலனின் புகழ்பாடும் பல மகான்களுடன் சேர்ந்து பழகும் பாக்கியம் ஜனாபாய்க்குக் கிடைத்தது. இதற்கு மகுடம் சூட்டினாற்போல் விட்டலனும் அவ்வப்போது அந்த சந்திப்பில் பங்கு கொண்டான்.''

ராமநாதன் இப்படிக் கூறியதும் ஜருகண்டி வாயைப் பிளந்தான். ''பக்தர்களுடன் இப்படிச் சரிசமமாக பகவான் பழகிய சம்பவங்களைக் கேட்டால் ஆச்சரியமாகவும் இருக்கிறது. பிரமிப்பாகவும் இருக்கிறது'' என்றான்.

''கண்ணன் கோகுலத்திலும் பிருந்தாவனத்திலும் புரியாத லீலைகளா? ஆக விட்டலனாக விளங்கிய கண்ணன் தம் பக்தர்களைச் சந்தித்ததும் சந்தோஷப்பட்டதும் வியப்பான விஷயங்களே அல்ல'' என்ற ராமநாதன், ஜனாபாயின் அபங்கம் ஒன்றில் விவரிக்கப்படும் காட்சியை ரசனையுடன் விளக்கினார்:

''ஒரு சமயம் சந்திரபாகா நதி மணற்கரையில், தாளத்துடன் கீர்த்தனம் நடந்தது. ஞானதேவர் கோபாலனின் பிரசாதமான பொரியை வினியோகம் செய்தார். நாமதேவர் கீர்த்தனம் செய்தபோது, பாண்டுரங்கன் முன்னால் வந்து ஆட ஆரம்பித்தான். ஞானேஸ்வரர் அபங்கம் பாடும்போது, அரங்கம் கீர்த்தனத்தால் நிறைந்தது.

அன்பு மிகுந்த அந்தச் சந்தங்களுக்கு ஏற்ப விட்டலன் ஆடினான். அவன் தன்னை மறந்து ஆடியபோது அவனது பீதாம்பரம் அவிழ்ந்தது. 'தேவா! ஜாக்கிரதையாக இருங்கள்' என்று கபீர்தாஸர் கூறினார். கூடியிருந்த ஸாதுக்களும், ஸந்துக்களும் பகவானின் மணிக்கட்டைப் பிடித்து நிறுத்தினர். இவ்வாறாக, கீர்த்தனத்தின் மகிமை எல்லாவற்றையும்விட உன்னதமானது.



'அது எளிய பக்தர்களுக்காக ஏற்பட்ட கலபமான மார்க்கமாகும்...' என்கிறது ஜனாபாயின் ஓர் அபங்கம்.''

''ஜனாபாயின் சிறப்புக்கு மணிமகுடமாக வேறொரு செய்தியும் உண்டு. தனது பக்தர்கள் பாடிய அபங்கங்கள் குறித்து விட்டலன் ஓர் ஒழுங்குமுறையை நடைப்படுத்தியிருந்தான். பாடுபவர் தமது பெயரை, மறக்காமல் தமது ஒவ்வொரு அபங்கத்திலும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அதேபோல யாருடைய அபங்கத்தை யார் எழுதித் தொகுக்கவேண்டும் என்பதையும் விட்டலனே தீர்மானித்ததாக நம்பிக்கை. உதாரணமாக ஞானேஸ்வரரின் பாடல்களை சச்சிதானந்தர் என்பவர் எழுதவேண்டும். அனந்தபட்டரின் பாசுரங்களை சோக்காமேளர் தொகுக்கவேண்டும், இப்படி. ஆனால் நாமதேவர் மற்றும் ஜனாபாயின் இனிய திருவாய்மொழிப் பாடல்களை மட்டும் கண்ணன் தன் கரத்தாலே தானாகவே எழுதினானாம்!''

எங்களைச் சுமந்து சென்ற ஆட்டோ நின்றது. ''இதுதான் விஷ்ணுபாதம்'' என்றார் ஆட்டோ ஓட்டுனர்.

மூவரும் இறங்கினோம். சந்திரபாகா நதியின் வேறொரு கரை அது. அங்கு இருந்தது ஒரு மண்டபம். அதற்குள் காணப்பட்டது விஷ்ணுபாதம். ஆம், இடத்தின்

''இதுதான் விஷ்ணுபாதம்!''



பெயரும் அதுதான்.

''வழக்கமாக விஷ்ணு ஆலயங்களின் பிராகாரத்தில் ராமருடைய பாதுகைகளின் வடிவம் இருக்கும். இது என்ன கொஞ்சம் வித்தியாசமாக, தனியான சன்னிதியில்?'' என்று கேட்டான் ஜருகண்டி.

''இங்கு கண்ணன் தன் நண்பர்களுடன் நீராடி இருக்கிறான். பிறகு அவர்களுடன் தான் கொண்டுவந்திருந்த கட்டுச் சாதத்தைப்

பகிர்ந்துகொண்டான். மற்றவர்களும் தாங்கள் கொண்டுவந்த உணவுகளைக் கண்ணனுடன் பகிர்ந்துகொண்டனர்.''

சந்திரபாகா நதியில் இறங்கி அதன் நீரைச் சிறிது தலையில் தெளித்துக் கொண்டோம். மிக அதிக அளவில் மக்கள் வந்து செல்லாததாலோ என்னவோ கரை பளிச்சென்று இருந்தது. விஷ்ணு பாதத்தைத் தரிசித்தோம். விட்டலனின் இரு பாதங்கள் பிரதிமைகளாகத் தரிசனம் அளித்தன. அருகிலேயே ஜனாபாய்க்கான ஒரு மிகச் சிறிய கோயில் காணப்பட்டது. கோயில் என்பதுகூட அவ்வளவு சரியில்லை; ஒரு சிறிய சன்னிதிதான். ஆனாலும் ஜனாபாயின் இதயக்கோயில் எவ்வளவு விசாலமானதாகவும் மேன்மை படைத்ததாகவும் இருந்திருந்தால் விட்டலன் அங்கே நிரந்தரமாகக் குடியேறியிருப்பான்!

அடுத்தது எங்கள் பயணத் திசை கோபால்புரி. ஜனாபாயின் புகழ் கூறும் விட்டலதலம் கோபால்புரி. கோயில் சற்று உயரத்தில் சிறு குன்றின்மீது இருந்தது. படிகளின் எண்ணிக்கை அதிகம் இல்லை. ஆனால் கொஞ்சம் செங்குத்தாக இருந்ததால் மிக வேகமாக ஏறமுடியவில்லை. உச்சியை அடைந்ததும் அருமையாகக் காற்று வீசியது. விட்டலனுக்கு, ருக்மணிக்கு, ஜனாபாய்க்கு, காளிக்கு என்று தனித்தனி சன்னிதிகள்.

"நாமதேவர் கீர்த்தனம் செய்த போது பாண்டுரங்கன் முன்னால் வந்து ஆட ஆரம்பித்தான்!"

பிராகாரத்தின் ஓர் அறையில் 'ஜனாபாயும் விட்டலனும் பயன்படுத்திய அரைவை இயந்திரம்' என்ற அறிவிப்புடன் தங்கத் தகடினால் மூடப்பட்ட மாவரைக்கும் இயந்திரம் ஒன்று காணப்படுகிறது. அங்கு விற்கும் அரிசியைக் கொஞ்சம் வாங்கி அந்த இயந்திரத்தில் போட்டு நாமும் மூன்று சுற்று சுற்றலாம் - பத்து ரூபாய் கொடுத்துவிட்டுத்தான்!

அபங்க அமுதம்

தேவ பாவாசா லம்பட ஸோடுனீ ஆலா ஹோ வைகுண்ட
புண்டலிகபுடே உபா ஸம சரணாவரீ சோபா
ஹாதீ சக்ர பாயீ வாங்கீ முக பக்தாசே அவலோகீ
உபா பை ஸேன ஸர்வதா பாஹே கோடே பக்த கதா
ஸர்வ ஸூகாசா ஸாகர ஜனீ ம்ஹணே சாரங்கதர

- ஜனாபாய்

'பகவான், பக்தியின் மீதுள்ள அதீதமான ஆசையால் வைகுண்டத்தை விட்டு வந்து, புண்டலீகன் முன் நிற்கிறான். கையில் சக்ரம் ஏந்தியுள்ளான், கால்களில் தண்டை அணிந்துள்ளான். முகமோ பக்தர்கள் வரும் வழியைப் பார்க்கிறது. பக்தர்களுக்கு ஏதாவது துன்பம் நேர்ந்துள்ளதா என்று பார்த்துக் கொண்டே இருக்கிறான். அப்படி நேர்ந்தால் உடனே விரைந்து சென்று அந்தத் துன்பத்தை நீக்கத் தயாராக நிற்கிறான். இதற்காகவே அவன் ஒருபோதும் உட்காருவதில்லை.'

வண்ணப்படம் : **வேதா**
படங்கள் : **ஸ்ரீஹரி**



''காந்திஜியின் அகிம்சையைப் போற்றும் நாம், நேதாஜியின் வீரத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த விஷயங்களை நிமிடங்கள் படத்தில் அழுத்தமாகப் பதிவுசெய்திருக்கிறேன்'' என்கிறார் இயக்குநர் கீதா கிருஷ்ணன்.

''அதே நேரத்தில் இன்று உலகையே அச்சுறுத்தும் தீவிரவாதப் பிரச்னையும் படத்தின் மையமாக இருக்கும்'' என்கிறார்.

தீவிரவாதத்தை மையப்படுத்தி படம் இயக்கும் அவசியம் என்ன?

''நான் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவன். ஹைதராபாத் உட்பட இந்தியாவின் அனைத்து மெட்ரோ நகரங்களும் தீவிரவாதத்தின் கோரமுகத்தைச் சந்தித்துள்ளன. ஆனால், சென்னையில் பெரிய அளவில் தீவிரவாதச் செயல்கள் எதுவும் நடைபெறவில்லை. இங்குள்ள மக்களுக்குத் தீவிரவாதம் என்பது அன்றாடத் தொலைக் காட்சிகளில் வரும் செய்தி மட்டும்தான். ஆனாலும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தீவிரவாதத்தின் அச்சுறுத்தல் இருப்பதாக உளவுப்பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

• கீதா கிருஷ்ணன்



தீவிரவாதத்துக்கு மாநில, தேச எல்லைகள் கிடையாது. இதே கதையை தெலுங்கில் காஃபி கிளப் என்றும் கன்னடத்தில் காஃபி ஷாப் என்ற பெயரிலும் இயக்குகிறேன்.''

நிமிடங்களின் சிறப்பம்சங்கள்...?

''நாம் பெரும்பாலும் நமது மூளையை வாழ்நாள் முழுவதும் 0.25 சதவிகிதம்தான் பயன்படுத்துகிறோம். விஞ்ஞானிகள், சாதனையாளர்கள் அனைவருமே பத்து சதவிகிதம் வரை பயன்படுத்துகிறார்கள். தீவிரவாதிகள் 1.25 சதவிகிதம் வரை மூளையைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் தவறான வழியால் அழிவைத் தருகிறார்கள் என்பதையும் இப்படத்தில் சொல்கிறேன்.

கராச்சி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் 'அதுல் குல்கர்னி', தீவிரவாதத்தின் மாஸ்டர் பிரைனாகச் செயல்படுகிறார். வறுமையால் தமிழ்நாட்டில் ஒரு கிராமத்திலிருந்து சென்னைக்கு வரும் ஹீரோ சேஷாந்தை, தன் பிடியில் இழுக்க முயற்சிக்கிறார். முடியாத சூழலில் சேஷாந்த் பழகும் சிறுமியைக் கடத்தி, உடலில் டைம்பாமைக் கட்டி, வெடிக்க வைக்க முயற்சிக்கிறார். அதுல் குல்கர்னியின்



திட்டம் நிறைவேறியதா... இல்லையா என்பதைச் சுவாரஸ்யமாகச் சொல்லியிருக்கிறேன்.

'சலங்கை ஒலி', 'சிப்பிக்குள் முத்து' போன்ற இசைப் படங்களுக்கு உதவி இயக்குநராகப் பணியாற்றிய அனுபவத்தாலும், எனக்கு இசையின் மீதுள்ள தனிப்பட்ட ஆர்வத்தாலும் நானே இப்படத்துக்கு இசையமைக்கிறேன். எம்.வி.ரகு, முரளி என்ற இரு கேமராமேன்கள் இப்படத்துக்கு ஒளிப்பதிவு செய்திருக்கிறார்கள். 'ரெட் ஒன்' என்ற புதிய கேமரா டெக்னாலஜியையும் பயன்படுத்தியிருக்கிறோம்.''


தீவிரவாதத்தை நிரந்தரமாக ஒழிக்க என்ன வழி?

''நமது நாட்டில் தீவிரவாதிகளை ஒடுக்க சாத்வீகமான முறைகளையே கையாளுகிறார்கள். மனித உயிர்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிக்கும் தீவிரவாதிகளின் உயிருக்கு எந்தவிதக் கருணையும் காட்டக்கூடாது. சமீபத்தில் கைதான தீவிரவாதி 'கசாப்', ஏதோ சாதனை செய்தது போல நீதிமன்றத்துக்கு வருகிறான். அவனுக்காக வழக்கறிஞரும் வருகிறார். இதுபோன்ற சட்டங்கள் இருப்பதால்தான், நமது நாட்டில் தீவிரவாதிகள் தைரியமாக வந்து கொடுமைகளை அரங்கேற்றுகிறார்கள். தீவிரவாதத்தில் ஈடுபடுபவர்களுக்கு மரணதண்டனைதான் வழங்கவேண்டும். இதையும் நிமிடங்களில் காட்டியிருக்கிறேன். அன்பு, அகிம்சை, காந்திய வழி போன்றவையெல்லாம் தீவிரவாதிகளிடம் எடுபடாது.''

- ராகவ்குமார்



காந்திஜியா? நேதாஜியா?



உங்க பேரு?

சொர்ணபாரதி

உங்க குறும்படத்தின் பேரு ?

கொஞ்சம் கொஞ்சமாய்.

காட்சியாக ஓடும் காலம்?

7 நிமிடங்கள்தான்.

இது எத்தனையாவது படம்?

இதுதான் என்னோட முதல் குறும் படம்.

நடிகர்கள் யாரு?

ஏரியும் கொஞ்சம் இசையும்.

எவ்வளவு செலவாச்சு?

சொந்த ஹேண்டி கேமராவுல ஒருநாள் ஷூட் பண்ணுனேன். எடிட்டிங்குக்கு நண்பர் உதவினார். நூறு காப்பி சி.டி பிரிண்ட் போட 1,500 செல வாச்சு. மொத்தச் செலவே அவ்வளவுதான்.

குறும்படம்

ஏரி

காட்சியும் இசையும்தான் கதாநாயகர்கள்!



* சொர்ணபாரதி

வரவு சாத்தியமா? : ஏழு இடங்களில் பொதுமக்கள் முன்னாடி போட்டுக் காண்பிச்சதுல ஆயிரம் பேர் பார்த்தாங்க. சில அமைப்புங்க பாராட்டினாங்க! கவிதை உறவுன்னு ஒரு அமைப்பு சிறந்த குறும் படம்னு தேர்வு செஞ்சு 5,000 ரூபாய் பரிசு கொடுத்தாங்க. இதை அடுத்த குறும் படத்துக்கான மூலதனமா வெச்சிருக் கேன்...

இதனால என்ன யூஸ்?: ஒரு கவிஞனா சமூகப் பிரச்னைய எழுதினேன் - சிற்றிதழ் ஆரம்பிச்சு அடுத்தவங்களுக்குக் கடத்தி னேன் - படிக்கத் தெரியாத பாமரனுக்கும் நம்ம கருத்துப் போகணும். அதே நேரம் அது பிரசாரமா ஆகிடாம கொஞ்சம் கலை உணர்வோடு காட்சியா போனா மனசுல நச்சுன்னு தைக்கும்னு குறும்படம் எடுத் தேன். நம்மனால முடிஞ்ச சமூக சேவை இதுதான். மாற்றம் ஒருநாள்ல நடக்காது. தவறைச் சுட்டிக்காட்டினாதானே திருந்த, திருத்த சூழல் அமையும்.

வசனம் எழுதியது யாரு? : வசனம்



ecomes ஏரியா..!



* கொஞ்சம் கொஞ்சமாய் குறும்படத்தில் சில காட்சிகள்...

ஏதும் இல்ல.

(தேங்கஸ் ஸார்! நான் படத்தைப் பத்தி என்னோட அபிப்ராயத்தைச் சொல்றேன்.)

குறும்படத்தைப் பார்த்தபோது... அலை அடிக்கும் பெரும் ஏரி... வாத்துகள் மேய, சிலர் மீன் பிடிக்க, அழகிய காட்சியாக மணலி ஏரி (சென்னைக்கு அருகே) கண் முன் விரிகிறது. பிறகு சூரியன் எழும்பி மறைய, காட்சிகள் மெல்ல மெல்ல மாறுகின்றன. மாடி வீடுகள் தோன்றி, ஏரி - லேக்வியூ ஏரியாவாக மாறுகிறது. குப்பை, கோழி இறகுகள் என கழிவுகள் சேருமிடமாகி எஞ்சிய ஓர் அல்லி மீது பிளாஸ்டிக் பை மூடி நிற்க, சோக இசையோடு காட்சி முடிகிறது. கொஞ்சம் கொஞ்மாய் அரசும் மனிதர்களும் நமது நீர் ஆதாரங்களை இழந்து வருவதை, ஆத்திச்சூடி போல எளிமையாக எடுத்துக்காட்டிவிட்டுப் போகிறது. முதலில் மீன் குஞ்சுகள் மேய்வதும் இறுதியில் சேற்று நீரின் அசுத்தக் குமிழியும், மண் அள்ளும் கருவியின் ஓசைக்கு மிரண்டோடும் வாத்தும், ஒற்றை அல்லியும் தூரத்தில் ஒரு கல்லறையும் என மாற்றி மாற்றிக் காட்டி ஓசை மொழியை ஓரங்கட்டிவிட்டது காட்சியின் சினம். சின்னச் சின்னக் குறை இருப்பினும் அதன் இலக்கின் நோக்கத்துக்காக விட்டுவிடலாம். தொடர்புக்கு சொர்ணபாரதி: 9677110102

- அமிர்தா

அக்கம் பக்கம் - கர்நாடகா

நியாயமா கௌடா..?

பெங்களூருவில் மழை நீர் சேகரிப்பு கட்டாயம். சமீபத்திய அரசு ஆணையில் ஒரு கிரவுண்டும், அதற்கு மேலும் உள்ள இடங்களில் கட்டப்பட்டுள்ள வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள்... அனைத்திலும் மழை நீர் சேகரிப்புக்கான வசதி செய்யப்படவேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. **(மொதல்ல ஒக்கேனேகல் திட்டத்துக்கு முட்டுக்கட்டை போட்டு பாலிடிக்ஸ் பண்றதை நிறுத்துங்க!)**




• குமாரசாமி

ஐ.டி.துறை அடிபட்டுக் கலகலத்துள்ள நிலையில் அதைத் தூக்கி நிறுத்த முன் வந்துள்ளது கர்நாடக அரசு. கிராமப்புறங்களில் பி.பி.ஓ. மையங்கள் திறப்பதை ஊக்குவிக்கும் வகையில், நூறு பேருக்கு வேலை கொடுக்கும் கிராமப்புற பி.பி.ஓ. மையம் ஒன்றைத் திறந்தால் அரசு இருபது லட்சம் வரை மானியம் வழங்கப் போகிறதாம். **(வாடாள் நாகராஜ் போன்ற ஆட்களை ஏதாவது ரூரல் பி.பி.ஓ.வுக்கு வேலை பார்க்க அனுப்பிட்டா, அரசாங்கத்துக்குத் தலைவலி குறையுமே!)**

பெங்களூருவில் அறிவிக்கப்படாத பவர் கட் அமுலில் இருக்கிறது. புறநகர்ப் பகுதிகளில் இரண்டு மணி நேரம்; கிராமப் புறங்களில் தினமும் பத்து மணி நேரம். பிரச்னையைச் சமாளிக்க, தன் அமைச்சரவை சகாக்களுடன் டெல்லி சென்று, மத்திய மின்துறை அமைச்சர் ஷிண்டேவைச் சந்தித்து கர்நாடகாவுக்கு இன்னும் அதிக மின்சாரத்தை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப் போகிறார் முதல்வர் எடியூரப்பா. **(எங்க ஊர் ஆற்காட்டாரைச் சந்திக்க எப்படி பவர்கட்டைச் சமாளிச்சாருன்னு டிப்ஸ் கேட்கலாமே!)**

கர்நாடகாவின் சரித்திரப் புகழ் சித்ர துர்கா கோட்டைக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளைப் புதுமையான

முறையில் ஆச்சரியப்படுத்தி, மகிழ்விக்கிறார் குரங்கு ராஜு. கோட்டை வளாகத்திலுள்ள மரங்கள் மீது குரங்கு போலவே சரசரவென்று ஏறுகிறார்; ஒரு கிளையிலிருந்து



* தேவகௌடா



* பவானி



* ரேவண்ணா

இன்னொன்றுக்கும், ஒரு பாறையிலிருந்து இன்னொன்றுக்கும் தாவுகிறார். பார்வையாளர்கள் ஆச்சரியப்பட்டு, ரசித்து, காசு கொடுக்கிறார்கள். ஆரம்ப காலத்தில் கூலி வேலை செய்த ஜோதி ராஜு தன் சாகசங்களால் இப்போது குரங்கு ராஜுவாகிவிட்டார்.

(கட்சி தாவுற அரசியல்வாதிங்கதான் இவருக்கு இன்ஸ்பிரேஷனோ?)

இப்போது முன்னாள் பிரதமர் தேவகௌடாவும், அவரது மகன் குமாரசாமியும் எம்.பி.க்கள். குமாரசாமியின் மனைவியும், கௌடாவின் இரண்டாவது மகன் ரேவண்ணாவும் கர்நாடக சட்டசபையில் எம்.எல்.ஏ.க்கள். குமாரசாமி எம்.பி. ஆனதை அடுத்து, அவர், தான் ஏற்கெனவே வகித்துவந்த எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டதால் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகுதியில் தேவகௌடாவின் மதச் சார்பற்ற ஜனதாதளம் சார்பில் ரேவண்ணாவின் மனைவி பவானி நிறுத்தப்படுவார் என்கிறார்கள்.

(பேசாம கட்சியோட பேரை (கௌடா) குடும்பச் சார்புள்ள ஜனதா தளம்னு மாத்திடலாம்)

- பரத்ராம்



''நீ வெளியூர் போகும்போது எதுக்காக வீணாய் டீ.வியை ஓட விட்டுட்டுப் போறே...''

''திருட வர்றவனுக்கு ஆள் இருக்குன்னு பயம் வந்திடுமே!''

- எல்.சேகர்

''தலைவர் முன்னாடி மாவு மிஷின் வெச்சிருந்தாராம்!''

''அதான் எல்லார் தலையிலும் நல்லா 'மொளகா' அரைக்கறாரு!''

- வெ.சீதாராமன்



வார்த்தைக்கு



''அவர் ரொம்ப வெள்ளந்தியா இருக்கார்.''

''எப்படி...?''

''எதை நம்பி எலெக்ஷன்ல நிக்கறீங்கன்னு கேட்டா, 'தொகுதி மேம்பாட்டு நிதியை நம்பித்தான்'னு சொல்றாரே!''

- சீர்காழி வீ.ரேவதி

''தலைவர் இதுவரைக்கும் கல்யாணமே செஞ்சுக்காம வாழ்ந்துட்டார்.''

''யார் கூடன்னு சொல்லவேயில்லையே!''

- எஸ்.கோபாலன்





''விவசாயிக்கும், மன்னருக்கும் என்ன வித்தியாசம்?''

''விவசாயி 'சாகுபடி' செய்வார், மன்னர் நம்மைச் 'சாகும்படி' செய்வார்!''

- வெ.சீதாராமன்

வார்த்தை...

'' 'அக்குபஞ்சர்' டாக்டரைக் கல்யாணம் பண்ணிட்டது தப்பா போச்சு!''

''ஏன்? என்ன ஆச்சு?''

''வார்த்தைக்கு வார்த்தை ஊசியால குத்தற மாதிரி பேசறார்!''

- சம்பத் குமார்





காப்பாற்றுவாரா டிராவிட்..?

ராகுல் டிராவிடை மீண்டும் இந்திய அணி ஒருநாள் பட்டியலில் காணும்போது, தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்திடம் சில கேள்விகள் கேட்கத் தோன்றுகிறது. பொதுவாக இந்திய அணித் தேர்வு பற்றி தேர்வுக்குழுத் தலைவர் எதுவும் பேசக்கூடாது. அதனாலேயே அவரிடம் தைரியமாகச் சில கேள்விகள் கேட்கலாம்!

☹ ராகுல் டிராவிடைத் தடாலடியாகத் தேர்வு செய்யக் காரணம் என்ன? ஐ.பி.எல்-லில் அவர் ஆடியதைப் பார்த்துத்தான் அவர் திறமை உங்களுக்குப் புரிந்ததா? அப்படித்தான் என்றால், இதுவரை அவர் அடித்த 10000 ஒருநாள் ரன்களின் மதிப்பு என்ன? ஐ.பி.எல்.தான் தேர்வுகளின் அளவுகோலா?

☹ இந்திய அணியினர், எகிறும் பந்துகளுக்கு அடிக்கடி அவுட் ஆகிறார்கள் என்றால் அதற்கு மாற்று என்ன? அந்தக் குறைபாட்டைப் போக்க அணியில் என்ன முயற்சி எடுக்கப்பட்டது? டிராவிட்தான் ஒட்டுமொத்தக் குறைகளுக்குமான தீர்வா?

☹ ராகுல் டிராவிட் அவுட் ஆஃப் பார்மில் இருந்த காரணத்தினால்தான்

அவர் ஒருநாள் அணியிலிருந்து வெளியேற்றப்பட்டார். மீண்டும் அதே நிலைமை வராது என்று என்ன நிச்சயம்?

☹ 20-20 உலகக்கோப்பையை வென்ற அடுத்த இரண்டு வருடங்களுக்கு ஒருநாள் கிரிக்கெட்டில் இந்திய கிரிக்கெட் அணிதான் ராஜா. செல்லுமிடங்களிலெல்லாம் சிறப்பைப் பெற்றது. அதற்கு மதிப்பளித்து அதன் சிறு தவறுகளைப் பொறுத்துக் கொண்டிருக்கலாமே? டிராவிட் இடத்தில் வீரத் கோலி, பத்ரிநாத், விஜய் போன்ற வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கியிருக்கலாமே!

ஸ்ரீகாந்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு இப்போது டிராவிடிடம்தான் உள்ளது.



ச.ந.கண்ணன்

சாய்னா நெவால், இன்று தரவரிசைப் பட்டியலில் ஆறாவது இடத்தில் இருக்கிறார். கேரம், பெண்கள் பாக்ஸிங் விளையாட்டுகளில் இந்தியப் பெண்கள் உலக சாம்பியன்களாக இருக்கிறார்கள். ஆனால் அத்லெடிக், டென்னிஸ், பேட்மின்டன் போன்று அதிக உடலுழைப்பும் கடுமையான சவால்களும் அந்த விளையாட்டுகளில் கிடையாது. பேட்மின்டனில் சீனர்களின் ஆதிக்கம் ஊரறிந்தது. அவர்களைத் தாண்டி அடுத்த கட்டத்துக்குப் போக நிறைய உழைப்பு தேவை! அப்படியொரு கடுமையான போட்டியில் சாய்னா இன்று ஆறாவது நிலையில் இருக்கிறார்.

சாய்னாவின் மிகப்பெரிய பலம் - கோபிசந்தின் பயிற்சி. ஒலிம்பிக் மெடலுக்காக சாய்னாவைத் தன் பயிற்சியினால் எரித்துக்கொண்டிருக்கிறார் கோபிசந்த். சாய்னாவிடம் பெரிய பலவீனங்கள் எதுவும் கிடையாது. துளி சர்ச்சை இல்லை. சில மாதங்களுக்கு முன்பு தன்னை விடவும் பெரிய வீரர்களைத் தோற்கடித்து இந்தோனேசியக் கோப்பையை வென்றபோது, 'யார்டா இந்தப் பெண்?' என்று எல்லோரும் சாய்னாவைக் கவனிக்க ஆரம்பித்தார்கள்.

வெற்றிகள் தொடரட்டும்!

காற்று

ரோஷினி

வகுப்பறை மொத்தமும் சிரிப்பால் அதிர்ந்தது. காரணம் - 'அவன்!' முதல் நாள், முதல் வகுப்பில், அறிமுகப் படலத்திலேயே அவன் திணறிப் போயிருந்தான்.

''கமான், கம் அகெயின்?'' கண்களை இடுக்கி, தலையை 45 டிகிரி சாய்த்து, மூன்றாவது முறையாக அவன் பெயரைக் கேட்கிறார் அந்த மலையாளிப் பேராசிரியர்; பெரிய டாக்டராம் கேரளாவில்...

''ஹவா ஸார்!''

இப்போதும் அவருக்கு மனசிலாகவில்லை.

''வாட்? ஹ...ல்... வா?''

வகுப்பறையோடு சேர்ந்து அவனும் சிரித்தான்; தெற்றுப் பல் தெரிய...

''நோ ஸார்... ஹ...வா! H..A...V...A!...'' என்று எழுத்துக் கூட்டினான்.

''அர்த்தம்?''

''ஹிந்தியில ஹவான்னு சொன்னா, 'காற்று'; 'விண்ட்'; 'ஏர்'ன்னு அர்த்தம் ஸார்!''

'பாச்சா!' என்று சுருக்கி அழைக்கப்பட்ட பார்த்தசாரதிக்கு, 'ஹிந்தித் துவேஷம்' உண்டு என்றாலும், மெனக்கெட்டு, புது நோட்டில் - 'ஹவா=காற்று' என்று குறிப்பெடுத்துக் கொண்டான்! முதல் நாளின் முதல் பாடம்!

''அத்தியாவசிய அமினோ அமிலங்கள் "-"EAA" என்று போர்டுக்கு வலிக்காமல் எழுதிய சந்தியா மேடம், அதை அடிக்கோடிட்டு முடித்தபோது - சொல்லிக் கொள்ளாமல் மின்சாரம் போய் விட்டது!

மைக் இல்லாத பட்சத்தில் - மூன்றாம் டெஸ்க் நீலுவுக்கே 'கிணற்றிலிருந்துதான் தன் குரல் கேட்கும்!' என்கிற யதார்த்தம் புரிய - அவசரமாய் அட்டெண்டன்ஸ் குறித்துக்கொண்டு வெளியேறினார்.

சந்தோஷம்! இப்படியாக - தெய்வம் மறைந்திருந்து அருள்பாலிக்கிறது அவ்வப்போது!... அடுத்ததாய்க் கேன்டீன் போகலாம்; வேண்டாம்! சீனியர் டாக்டர் பசங்கள் பர்ஸைத் தலைகீழாய்க் கொட்டித் தின்று தீர்ப்பார்கள்... ஆகவே, சுதாகர் இன்று ஒதுங்கித் தீரவேண்டிய இடம் - லைப்ரரி! ஜெனரேட்டர் வசதி உண்டு என்பது ஆறுதல்!


லைப்ரரியில் முன்னட்டையைக் கூடச் சரியாகப் பார்க்காமல் ஒரு குண்டுப் புத்தகத்தை உருவிக் கொண்டான். ''எதுவும் புரியப் போவதில்லை என்கிற பட்சத்தில் எதைப் படித்தால் என்ன?'' - தத்துவப் பிரவாகம் உள்ளே பீறிட்டது!

கண் சொக்கி விழப் போன தருணத்தில், எதிர்நாற்காலி இழுபட... ஹவா! அவன் எப்போதுமே தனிதான்.

'குட் ஸ்டூடண்ட்!' என்னும் அபிப்ராயம் பேராசிரியர்களுக்கு! லட்சணமாய் எல்லாரும் உறங்கித் தீர்க்கும் மதிய நேர தியரி வகுப்பிலும் - சாந்தகுமாரி மேடம், 'பித்தப்பைக் கற்கள்' பற்றிய மகாத்மியம் பேசுவதை ஹவா கவனமாய்க் கேட்டுக் கொண்டிருப்பான்; போகட்டும்! அவர்கள் ரகசியம் அவர்களுக்கு!

சுதாகரைப் பார்த்து மையமாய் ஒரு புன்னகை.

''பஸ்ஸுக்கு இன்னும் ஒரு மணி


அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப்
போட்டியில்
பிரசுரத்துக்குத்
தேர்வான கதை-2

நேரம் இருக்கு; நோட்ஸ் எடுக்கலாம்னு வந் தேன்!''

''எந்த பஸ்?''

''8! திருநெல்வேலி பஸ்!'' கேட்காமலேயே கிடைத்துவிட்ட தகவல்; அப்படியென்றால்? 'காற்று' தினமும் திருநெல்வேலியிலிருந்து கிளம்பி வடக்கன்குளத்துக்கு வந்து போகிறதா?

''ஹவா, உங்கிட்ட ஒண்ணு பர்சனலாக் கேக்கட்டா?'' - கண்களில் பயம், பதற்றம் சடுதியில் வந்துவிட்டது அவளுக்கு!

''என்ன...?''

''உனக்குப் பேர் 'ஹவா'ன்னு ஏன் வெச்சாங்க?'' என்றான் சுதாகர்.

சட்டென்று ஓர் ஆசுவாசம்; புன்னகை நிரம்பியவளாய் - ''ஜஸ்ட் லைக் தட்! ஹவா... காற்று... பொதுவான ஒரு விஷயம்; இந்த இனம், இந்த நாடு, இந்த மதம் - என்ற எந்த வட்டத்திலேயும் வராத பெயர்!''

''நல்லா நோட் பண்ணிப் பாருங்கடா! வெள்ளிக்கிழமைன்னா, அவ டிஃபன் பாக்ஸ் கொண்டு வரவே மாட்டா! விரதம்! அவ ஹிந்துதான்டா!''

''இருக்காது; பொட்டு வைக்க மாட்றா பாரு! முஸ்லிம் தான்!''

''ஏன்? கிறிஸ்டியன்ஸ் கூடத்தான் பொட்டு வைக்கிறதில்லை; ப்ராட்டஸ் டன்ட்ஸ் கேள்விப்பட்டதில்லை நீ?''

''அப்படின்னாலும் சிலுவை தொங் கணும்ல கழுத்தில்?''

''எனக்கென்னவோ, அவ நார்த் இன்டி யாக்காரின்னுதான் தோணுது! 'ஹிந்தியில காற்று'- அதானே அவ பேரு?''

''கரெக்ட்டுடா!''

''ம்ஹூம்! மலையாளியாக் கூட இருக்கலாம்! பிங்கி, சிண்டு, மஞ்சு, சிஞ்சுன்னு பெட் அனிமல்ஸ் பேரெல்லாம் கூட, கூப்பிட வசதின்னு அவங்கதான் வெச்சுப்பாங்க!''

'''ஹ',... 'வா...'' ரெண்டே எழுத்து!''


''ஆமாடா; ஆனா மலையாளிஸ் ஃபேரா, கலராயில்ல இருப்பாங்க?''

முத்தாய்ப்பாய்ச் சொன்னான் கிஷோர்!

''நீக்ரோ - மலையாளின்னு வெச்சுக் கோயேன்!'' அத்தனைபேரும் சேர்ந்தே மொத்தினார்கள் அவனை...

இடைப்பட்ட இந்த நாலு வருஷத்துக் குள் - திருவள்ளுவர் தோளைச் சீற்றமாய் உரசி அடங்கியது கடல்! குறையாத

துக்கடா நியூஸ்


* வைத்திலிங்கம்

சுமார் நாற்பத்தைந்து வருட பாண்டி சட்டசபை வரலாறு இதுவரை பதினைந்து முதல மைச்சர்களைக் கண்டிருக்கிறது. பாண்டியின் முதல் முதலமைச்சர் காங்கிரஸ் கட்சியின் எட்வர்ட் கோபர்ட். அதன் பிறகு வெங்கட சுப்பா ரெட்டியார் முதல்வரானார். ராமச்சந்திரன், ரங்கசாமி, ஷண்முகம், தற்போதைய முதல்வர் வைத்திலிங்கம் உட்பட இரண்டு முறை முதல்வராக இருந்தவர்கள் உண்டு. என்றாலும், பாருக் மரைக்காயர் மூன்று முறை முதலமைச்சராக இருந்திருக் கிறார். ஆறு முறை கவர்னர் ஆட்சி நடந்துள்ளது. இப்படி ஆட்டம் காண்பது பாண்டி அரசியலுக்கே உரிய ஸ்பெஷாலிடி.

- மௌலி

தீவிரத்துடன், நான்கு வருட இறுதிப் பரீட்சைகள்! நூறு பேராய் முதலாண்டு அடியெடுத்து வைத்தவர்கள் - நெல்லிக் காய் மூட்டை போல - சிதறிட, 'டாக்டர் களாய்'- எல்லாப் பரீட்சையிலும் தேறி, 'ஆல் க்ளியர்!' செய்து - 17 பேர் கொண்ட 'குழுவாய்' அமைந்தது - வலிக்கத்தான் செய்கிறது!

ஹவாவிடம் பெரிய மாற்றங் களில்லை. அதே ஒதுக்கம்; அதே தனிமை; யாரையும் வீட்டிற்கழைத்ததில்லை; ஃபோன் நம்பர் கொடுப்பதில்லை!... ஒரு எல்லைக்கு அப்பால் நிறுத்தியே - எல் லார்க்குமான புன்னகை என்பதில், தீவிரம் கூடிப் போயிருந்ததேயொழிய - மாற வில்லை! எண்ணெய் மேல் தண்ணீர்!

ஆச்சர்யம்! ஹவா இன்று லேட்டாய் வந்திருக்கிறாள்; அதுவும் புடைவையில்; அதுவும் அவள் அண்ணனோடு; அதுவும் அரசன் பேக்கரியில் வாங்கிய மெக்ரோன் களைப் பை கொள்ளாமல் திணித்துக் கொண்டு...

''என்ன என்கேஜ்மெண்டா?''

''பர்த் டேவா?''

''என்ன திடீர்னு?''

- கும்பலாய் டாக்டர்களைக் கண்ட பீதியோ, மரியாதையோ - ஏதோ ஒன்று அவள் அண்ணனைச் சங்கடப்படுத்தி யிருக்க வேண்டும்; நகர்ந்து போய்ச் சுவரோரம் நின்றான்.

''ஊருக்குப் போறேன்!'' - என்றாள் பொதுவாக...

''தோடா! புதுசாவா? தினம் தினம் தானே வண்டி கட்டிக்கிட்டு வர்றே? தின்னவேலியிலிருந்து?''

''இல்ல... 'என் நாட்டுக்கு'ப் போறேன்; திருநெல்வேலி என் ஊர் இல்லை!'' - ஸ்பஷ்டமாய் நிதானமாய் வந்து விழுந்த வார்த்தைகள்... வார்த்தைகளை வேகத் தோடு முந்திக் கொண்ட கண்ணீர்...

''22 வருஷம் கழிச்சு, இப்பத்தான் போறேன்; வவுனியா-ஸ்ரீலங்கா! எங்க அப்பா ஒரு போராளி! அம்மாவுக்கு அதொன்றும் சம்மதமில்லை; நான் பிறந்த கையோடு, என் பெரியப்பாவின் கையில் திணித்துவிட்டார்கள்; அண்ணனும் நானும் பெரியப்பாவோடு, கொஞ்ச நாள் லண் டனில், பின் இந்தியாவில்...

இடையில் யுத்தத்தில் பெரியம்மா, அப்பா, அண்ணன்கள் எல்லாரும் போயாச்சு... அம்மா மட்டும் இருக்காங் கன்னு தகவல் கிடைச்சிருக்கு... ஏதோ பதுங்கு குழியில - ஆர்மிக்குப் பயந்து ஒளிஞ்சப்போ - எல்லாரும் இவங்க மேல சாடிச் சாடி விழுந்ததிலே - இடுப்பெலும்பு நொறுங்கிப் போய்க் கிடக்காங்களாம்; நடக்க முடியாது! துப்பாக்கி ரவையின் மிச்சம் - எடுக்க முடியாமல் உடம்புலேயே இருப்பதாகவும் சொல்லியிருக்காங்க...''

''யாரு? எப்படித் தெரியும்?''

''அண்ணனின் தோழர் - எம்பஸியில் இருக்கார்; அவர் மூலமா... ஏழு மாசமா முயற்சி பண்றோம்; எப்படியாவது அம்மா வைப் பார்க்கணும்னு... யுத்தம் முடிஞ்சப் புறம்தான் அனுமதி கிடைச்சிருக்கு!''

- பெருமூச்சு விட்டாள்; கண்ணீர் வற்றா மல் வழிந்த வண்ணமே இருந்தது.

நீலுதான் ஹவாவின் தோள்பற்றி அழுத்தி, ''சியர் அப் ஹவா!... நாங்க எல்லாரும் உனக்காகப் பிரார்த்திக்

நல்லா நோட் பண்ணிப் பாருங்கடா! வெள்ளிக்கிழமைன்னா, அவ டிஃபன் பாக்ஸ் கொண்டு வரவே மாட்டா!

கிறோம்!'' என்றபோது, ஹவா முற்றிலு மாய் உடைந்து போனாள். ''எங்கம்மா மொகம் கூடப் பார்த்த நினைவில்லை; பார்த்தாலும், அவங்களாவது என்னை அடையாளம் கண்டுப்பாங்களான்னு தெரி யல... எனக்கொரு தங்கை கூட உண்டாம்! அவளையும் தேடணும்! அப்பாவைச் சுத்தமாத் தெரியாது; பார்த்ததோ, பேசி னதோ கிடையாது... அடையாளத்துக் குன்னு ஒரு ஃபோட்டோ கூடக் கிடை யாது... கல்லறை... அது மட்டும் தான் இருக்கு... ஒரு வேளை, அதுவும் கூட.... யுத்தத்திலே...'' என்று முடிக்க முடியாமல் அவள் திணறியபோது, அத்தனை பேருக்கும் மௌனமாய் மனசு நடுங்கியது.

இதுவரை, சுவரோரமாய் நின்றிருந்த அவள் அண்ணன், ''போதும் ஹவா! கனகாலம் அழுதாயிட்டு! இழப்பதற்கும், அழுவதற்கும் இனி ஒண்டுமில்லை! நீயே இனிப்பையும் கொடுத்து, அழுது கொண்டும் நிண்டால் - அவர்கள் எப்படிச் சுவைக்க முடியும்? வா! முதலில் ஒரு 'கோப்பி' குடிப்போம்! நீ அழுவதை என்னால் சகிக்க ஏலாது!'' என்று அவளைக் கைப்பற்றி அழைத்தான். அவன் கண் களிலும் தொலைவும், களைப்பும்! ''வாரம்... பெறகு பார்க்கலாம்!... பிரின்சி பாலைச் சரியாய் ஒரு மணிக்குச் சந்திக்க ஒப்புமை தந்திருக்கிறார்கள்!'' - ஹவாவை அழைத்துக் கொண்டு திரும்பி நடந்தான்!

''சிலோன் ஸ்லாங்! ஹவாகிட்ட சுத்தமா அது இல்லேல்ல?'' - என்று யாரோ ஆச்சர்யப்பட்டது, அவன் காதில் விழுந்திருக்க வேண்டும். ஒரு கணம் நின்று, திரும்பி அவர்களைப் பார்த்து, ''ஓம்! என்ன செய்வது? ஹவா 'பேச்சுப் படித்ததே' - அகதி யான பின்புதானே? புலம் பெயர்ந்த பின்புதானே அவளுக்குப் பெயரே வைத் தோம்?'' - சோகமாய்ச் சிரித்துச் சொன் னான். கரகரத்த குரலில், வருத்தம் தோய்த்து வந்த வார்த்தைகள்; அவை, நெடுநேரம் காதுகளுக்குள் எதிரொலித்த படியே இருந்தன.

ஓர் அகதியின் இனிப்பிலும் கூட, கசப் பும் கண்ணீரும் கலந்து கிடக்கும் நிதர் சனம் - அவர்களை ஓங்கி அறைந்தது! ●



துக்கடா நியூஸ்

கர்நாடகாவில் மணிப்பால் மாதிரி, பாண்டிச்சேரியும் ஒரு மெகா கல்வி மையம். இன்றைய தேதியில் பாண்டிச்சேரியில் ஒரு மத்திய பல்கலைக்கழகம், ஜிப்மர் உட்பட எட்டு மருத்துவக் கல்லூரிகள், மூன்று பல் மருத்துவக் கல்லூரிகள். பத்து என்ஜினீயரிங் கல்லூரிகள், ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி, ஒரு சட்டக் கல்லூரி, ஒரு விவசாயக் கல்லூரி, பத்து அறிவியல், கலைக் கல்லூரிகள், ஐந்து பாலிடெக்னிக்குகள் என ஒரு பெரிய பட்டியலே போடலாம். விரைவில் இன்னும் ஒரு பல்கலைக் கழகமும், தேசிய தொழில்நுட்பக் கழகமும் பாண்டியில் வரவிருக்கின்றன.

- மௌலி


● எஸ்.சக்தி, ராஜபாளையம்

? தி.மு.க. ஆட்சியை 'மைனாரிட்டி' அரசு என்று ஜெ.தொடர்ந்து சொல்வதால், அவரை இனி 'திருமதி ஜெயலலிதா' என்றே அழைக்கப்போவதாக கருணாநிதி கூறுவது அழகா?

! 'ஜெ' மைனாரிட்டி அரசு என்று தி.மு.க. ஆட்சியை வர்ணிப்பது தனிநபர்த் தாக்குதல் அல்ல. கலைஞரின் பதிலடியோ, நிச்சயம் மலினமான தனிநபர்த் தாக்குதலே. அது கலைஞருக்கும் அழகல்ல; அவர் வகிக்கும் பதவிக்கும் அழகல்ல. ஆனால், சோகம் என்னவென்றால், 'ஜெ.'யும் கடந்த காலத்தில் தனிநபர்த் தாக்குதலில் ஈடுபட்டிருக்கிறார் என்பதே.

● ரமணி, சென்னை-28 ☐

? ராணுவ ஆட்சியிலிருந்து மீள பல ஆண்டுகளாகப் போராடிவரும் மியான்மர் தலைவியின் துயர் பற்றி இந்தியா கவலைப்படுவதாகத் தெரியவில்லையே?



* சோதனைக் காலம்!

ஷாருக் கானுக்கு நேர்ந்த அவமானம் குறித்து..?

! பதினாறு ஆண்டுகளாக வீட்டுச் சிறைவாசம் அனுபவிக்கும் ஆங் சாங் சூ கியி ஒரு பக்கம் இருக்கட்டும். அகதிகள் முகாமிலேயே சிறைப்பட்டிருக்கும் இடம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் கதி என்ன? அதையே நமது மத்திய அரசு கவனிக்கக் காணோமே!

● மு.பெரியசாமி, விட்டுக்கட்டி

? பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை டிசம்பர் மாதத்தில் ஒரு கோடியை எட்டிவிடுமாமே?

! 'பன்றிக்காய்ச்சலுக்கு எதிரான தடுப்பூசி வெகு விரைவில் கண்டுபிடிக்கப்பட்டுவிடும்' என்று உலக சுகாதார அமைப்பு

☐ ரூ.150/- பரிசு பெறுபவர் :
ரமணி, சென்னை - 28
★ ரூ.75/- பரிசு பெறுபவர் :
ராஜி ராதா, பெங்களூரு

சொல்லியிருக்கிறதே!

எச்சரிக்கையாய் இருப்போம்; அச்சம் வெல்வோம்.

● பா.அசோக், ஸ்ரீவில்லிபுத்தூர்

? கம்பம் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் தி.மு.க.வில் சேர்ந்தது பற்றி...?

! அதான் இல.கணேசன் அழகா சொல்லிட்டாரே - 'முதல்ல வாக்காளர்களை விலைக்கு வாங்கினாங்க; இப்போ வேட்பாளர்களையே வாங்கறாங்க!'ன்னு.

● அ.அப்துல் காதர், சென்னை-45

? ஷாருக் கான், சோதனை என்கிற பெயரில், அமெரிக்க விமான நிலையத்தில் அவமானப்படுத்தப்பட்டுள்ளாரே?

! அப்துல் கலாமுக்கு இந்தியாவிலேயே அந்தக் கதி நேர்ந்தபோது, ஷாருக்குக்கு அமெரிக்காவில் நேர்ந்தது பெரிசில்லிங்க...! இவர்கள் பிரபலம் என்பதால் பேப்பர்ல வந்துடுச்சு. தினம் தினம் ஏராளமான இஸ்லாமியர்கள் சோதனைகளில் படாத பாடு படுறாங்க! இதுக்காகவாவது இஸ்லாமிய பயங்கரவாதம் தன் போக்கைக் கைவிட்டால் நல்லது.

● பி.ஜெயபிரகாஷ், சர்க்கார்பதி

? குஜராத் பள்ளிகளில் மாணவ - மாணவியரின் அறிவுக் கூர்மையை அதிகரிக்கும் செஸ் விளையாட்டைக் கட்டாயப் பாடமாக்க அரசு முடிவு செய்துள்ளது பற்றி?

! செஸ் விளையாட்டைக் கற்றுத் தருவதாகச் சொன்னால் பலரிடம் ஆர்வம் பிறக்கும்; சிலர் அலட்சியம் செய்வார்கள். கட்டாயப் பாடமாக்கினால் பலரிடம் வெறுப்பு வளரும். சிலரிடம் ஆர்வம் பிறக்கும். மதிப்பெண் போட்டு மேல் வகுப்புக்குப் போவதை நிர்ணயித்தால் அனைத்து மாணவர்களிடமும் ஆட்டத்தின் மீது வெறுப்பு வளரும்.







★ படிக்கும் புகார்!

★ சுட்டும் இலக்கு!

● ராஜி ராதா, பெங்களூரு ★

? பல்கலைக்கழக துணை வேந்தர்கள் வீடுகளிலெல்லாம் 'ரெய்ட்' நடத்தும் அளவுக்குத் தரம் தாழ்ந்து வருகிறதே?

! இது என்ன பிரமாதம்? இன்னும் கொஞ்சம் காலம் போனால், 'அகப்பட்டுக் கொள்ளாமல் லஞ்ச-ஊழல் செய்வது' குறித்துப் பாடத் திட்டமே வகுக்கப்படும். அதில் ஆய்வு நடத்தி டாக்டர் பட்டம்கூட

பெற இயலும்!

● ஜி.கீர்த்தனா, நெய்வேலி-3

? ''நாட்டில் 177 மாவட்டங்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன - மக்கள் மேலும் விலைவாசி உயர்வுக்குத் தயாராக வேண்டும்'' என்று பிரதமர் பேசியுள்ளாரே?

! பொருளாதார நிபுணர் என்பதால் நமக்குப் போதிக்கிறார். அந்த நியதியிலிருந்து மக்களைக் காப்பாற்ற வழிவகைகளை அவர் மேற்கொள்வதுதான் பாஸிடிவ் செயல்பாடு. அதைத்தான் மக்கள் பிரதமரிடம் எதிர்பார்க்கிறார்கள் - வகுப்பறை பாடத்தை அல்ல.

● ஆர்.ராஜதுரை, சீர்காழி

? சென்னை பல்கலைக் கழகத் தேர்வில் வெற்றி பெற, வினாத்தாளில் ரூ.1000, ரூ.500 என்று பணத்தை மாணவர்கள் வைத்துள்ளார்களே?

! லஞ்சம்-ஊழல் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி இருக்க, மாணவர் மனத்தில் ஊடுருவாமல் போகுமா? பன்றிக் காய்ச்சலைவிட மோசமானது இந்தத் தொற்றுநோய். மாணவர் மத்தியிலும் அது பரவ, அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் காரணமில்லை என ஒதுங்கிவிட முடியாது.

● ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி

? எந்தப் பொருளும் ஏறிய விலையிலிருந்து இறங்கியதாகச் சரித்திரம் உண்டா?

! சட்டென்று நினைவு வருவது ஷேர் மார்க்கெட்தான்! இறங்குவதாவது.... சரிந்தே விடுகிறதே!

● எஸ்.வி.பார்த்தசாரதி, திருவானைக்கோயில்



● தொடரும் போராட்டம்



● நடத்தும் பாடம்!

? ''என்னைப் பற்றி முதல்வருக்கு உளவுத்துறை தகவல் தருகிறது'' என விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளாரே?

! எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், உளவுத் துறையை, இதரக் கட்சிகளின் மீது ஏவி விடுவது நடக்கும். 'எதிலாவது சிக்க மாட்டார்களா?' என்று தூண்டில் போட்டபடி இருப்பார்கள். உளவுத் துறை தம் மீது எந்தக் குற்றமும் சுமத்த முடியாத அளவுக்கு விஜயகாந்த் நடந்து கொள்வதுதான் தூண்டிலில் சிக்காமல் தப்ப வழி!



● தொடுக்கும் தாக்குதல்

● ரேவதிப்ரியன், ஈரோடு

? 2011ல் பா.ம.க. ஆட்சியைப் பிடிக்கும் என ராமதாஸ் சொல்கிறாரே?

! இத்தகைய இலக்கு, ஓர் அரசியல் கட்சிக்கு அவசியம்தான். ஆனால், அதனை அடைய, சாதிமத பேதமற்ற நல் நோக்கும் தமிழகத்தின் முன்னேற்றத்துக்கு ஏற்ற தொலைநோக்குச் சிந்தனையும் தேவை. இவற்றில் சாண் ஏறி முழம் சறுக்கக் கூடாது. உறுதி வேண்டும். இல்லையெனில், ஒவ்வொரு தேர்தலுக்குப் பிறகும் இதே வசனம் பேச நேரிடும்!

புதுவைக்கு



பாண்டிச்சேரி, 47, கந்தப்ப முதலி தெரு. வாசலில் துப்பாக்கியுடன் ஒரு காவலர் இல்லாவிட்டால் மற்ற சராசரி வீடுகள் போலத்தான் இருக்கும் முதல்வர் வைத்திலிங்கத்தின் வீடும். அவருக்கு இது இரண்டாவது இன்னிங்ஸ். பரபரப்புக்கும், முதல்வருக்கும் பெரிய இடைவெளி உண்டு. அளந்து பேசும் வார்த்தைகள், அடக்கம் இவரது உடன்பிறப்புகள்.

எப்படி செகண்ட் இன்னிங்ஸ்..?

''ஒரு வித்தியாசமான காலகட்டத்தில் நாங்கள் பொறுப்புக்கு வந்தோம். அரசின் செயல்பாடுகளுக்கு ஒரு வாக்கெடுப்பு போல பாராளுமன்றத் தேர்தல் வந்து விட்டது. அதிலும் 92000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம். எங்கள் மீதும் எங்கள் தலைமையின் மீதும் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.''

காலையில் ஒரு கூட்டணி; மாலையில் ஒரு கூட்டணி என்று ஆட்சிக் கவிழ்ப்புக்குப் புகழ் பெற்றதாயிற்றே புதுச்சேரி?

''நீங்கள் சொல்வதெல்லாம் 1985 - 90ம் ஆண்டு காலகட்டத்தில். கட்சி மாறும் தனிப்பட்ட தலைவர்களையும், ஆட்சியைக் கவிழ்க்கும் கட்சிகளையும் மக்கள் புறக்கணிக்கத் தொடங்கிவிட்டார்கள். புதுவை அரசுக்கு ஒரு நிலையான தன்மை கொடுப்பதில் காங்கிரஸ் கட்சிக்கு முக்கிய பங்கு உண்டு. காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி, தொடர்ந்து நிலையான அரசைக் கொடுக்கும்.''

புதுவையிலும் தேர்தலின் போது ஈழப் பிரச்னை எடுபடவில்லையே!

''ஈழப் போராட்டத்தில் எழுந்த சர்வாதிகாரத் தலைமை காரணமாக இன்று பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. எல்லா சக்திகளும் இணைந்த ஒன்றுபட்ட போராட்டமாக அது அமைந்திருந்தால் வெற்றியைத் தொட்டிருக்கும். ஈழத் தமிழர்கள், சிங்களவர்களுக்குச் சமமான உரிமைகளைப் பெற்றுத் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமென்பது இந்தியத் தமிழர்களின் ஆசை. அதற்கான எல்லா முயற்சிகளையும் அன்னை சோனியா எடுப்பார்; எடுத்துக் கொண்டிருக்கிறார். ஈழத் தமிழர்கள் மேல் நமக்கு அக்கறை இருந்தாலும், நமது தேர்தல் களம் என்பது வேறு. அந்த வகையில் மக்கள் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணிக்குப் பெருவாரியாக ஆதரவு தெரிவித்தார்கள்.''

தமிழக அரசு எந்த முடிவெடுத்தாலும் நீங்களும் அது போன்றே எடுக்கிறீர்களே... ஒரு ரூபாய் அரிசி, சத்துணவு... இப்படி பல திட்டங்கள்?

''முன்பு ஃபிரான்ஸ் தேசத்துக் காலனியாக இருந்தாலும் புதுச்சேரி தமிழர்களும், தமிழகத்துத் தமிழர்களும் காலம் காலமாக கலாசார மற்றும் வாழ்க்கை முறைகளில் ஒரே தளத்தில் இயங்குபவர்கள்தான். தமிழகத்தில் ஏற்படும் சிறு சம்பவங்களின்

கோஷம் என்று சொல்லாதீர்கள். அது உணர்வுபூர்வமான விஷயம்

பாதிப்புகூட புதுச்சேரியில் இருக்கும். அதுபோல புதுச்சேரியில் நடக்கும் பிரச்னைகளின் எதிரொலி, தமிழகத்தில் இருக்கும். இந்த நிலையில், கலைஞர் அரசு மக்களுக்குச் செய்யும் நன்மைகளை, புதுவையிலும் விஸ்தரிப்பதுதானே சரியான முடிவாக இருக்க முடியும். அதைத்தான் நாங்கள் செய்கிறோம். ஆனால், சிறு பிரதேசமாக இருப்பதால் இன்னமும் பல சாதனைகளையும் செய்ய முடிகிறது. உதாரணமாக பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மாணவர் களுக்கு கல்விக் கட்டணத்தை அரசே ஏற்றுக் கொள்கிறது.''

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோஷம் என்ன ஆச்சு?

''கோஷம் என்று சொல்லாதீர்கள். அது ஓர் உணர்வுபூர்வமான



மாநில அந்தஸ்தா..?

முதல்வர் வைத்திலிங்கம்

விஷயம். இருந்தும் பல முனை களில் அது பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது. மாநில அந்தஸ்து கொடுத்தால் தனித்துப் பொருளாதார வசதி யுடன் இருக்க முடியுமா; சுயநிதி ஆதாரம் இருக்குமா என்றெல்லாம் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. நிதி ஆதாரம் தேவை யென்றால் வரி போட வேண்டும். மக்கள் தாங்குவார்களா? இப்போது யூனியன் பிரதேசமாக இருப்பதால் மத்திய அரசு தாராளமாக நிதியை வழங்குகிறது. வரிச் சுமை குறைவு. மாநிலம் என்றால் சுயமா கப் புரட்ட வேண்டும். இதுதவிர புதுச்சேரி நிலப்பரப்பு காரைக்கால், மாஹி, ஏனாம் என்று தொலை தூரங்களில் பிரிந்து கிடக் கிறது என்பதையும் சிலர் சொல்கிறார்கள். மாநிலங்களை மொழிவாரியாகத்தான் பிரித்தார்கள். மாஹி, ஏனாமில் மலை யாளமும், தெலுங்கும்தான். ஆனால், முழு மாகாண அந்தஸ்து இருந்தால் பல பிரச் னைகளில் முடிவுகளை எடுக்க முடியும். மாநில அந்தஸ்து தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இருக்கின்றன. எல்லோரது கருத்தொற்றுமையோடு செயல்படு

வோம்.''

நிர்வாகம் சிக்கலில்லாமல் போகிறதா?

''ஒரு பிரச்னையுமில்லை. இங்கே நடப்பது மைக்ரோ லெவல் நிர்வாகம். எங்கள் எம்.எல்.ஏ.க்கள் உங்கள் ஊர் கவுன்சிலர்கள் போன்றவர்கள்தான். அவர்கள் மக்களுக்கு நல்லது செய்தே



எங்கள் எம்.எல்.ஏ.க்கள் உங்கள் ஊர் கவுன்சிலர்கள் போன்றவர்கள்தான்.

ஆகவேண்டும். மக்களுக்கு அவர்களைத் தெரியும். அவர்களுக்கு மக்கள் ஒவ்வொருவரையும் தெரியும். மக்களிடமும் விழிப்புணர்வு அதிகம். அதுவே எங்களுக்கு எச்சரிக்கையைக் கொடுத்து, பொறுப்போடு செயல்பட வைக்கிறது. இதுவரை ஊழல் குற்றச்சாட்டு எதுவும் கிடையாது. அதிகாரிகள் உள்ளூர் மக்களின் உணர்வுகளைப் புரிந்தவர்கள். காரைக்கால், மாஹி, ஏனாம் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் தங்கள் பகுதி மக்களுக்கு அரசில் மூன்றாவது, நான்காவது பிரிவு வேலைகளில் அந்தப் பகுதியிலேயே வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்கிறார்கள். யாரையும் கஷ்டப்படுத்த அரசு விரும்பவில்லை. தனிப்பட்ட விதத்தில் முடிவெடுத்து அதைத் திணிக்காமல், ஒன்றுகூடி ஒரு முடிவெடுத்து அமுல்படுத்துவதால், காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி மிக இணக்கமாகவும், அழுத்தமாகவும் செயல்பட முடிகிறது''

இந்தக் குறுகிய காலத்தில் சாதனை?

''இது, அது என்று குறிப்பிட்டுச் சொல்வதற்குப் பதிலாக, பொதுவான ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்கள், செயல்பாடுகள் தடம்புரண்டு போகாமல், தொய்வடையாமல் தொடர்ந்து நடந்து வருவதற்கு ஆக்கபூர்வமாக முயன்று வருகிறேன். இருப்பதை விட்டுவிட்டு பறப்பதைப் பிடிக்க அலைந்த கதையாக இல்லாமல், நடைபோடும் திட்டங்கள் செம்மையாக நடந்தாலே மக்களுக்கு நன்மை நடக்கும்.''

படங்கள் : **ராஜன்**

''டிஃபன் சாப்பிட ஏன்டா நீ மட்டும் தனியா போற?''

''உனக்கும் சேர்த்து மாவாட்ட எனக்குத் தெம்பு இல்லை சாமி!''

- பி.பாலாஜி கணேஷ்



நூல் அறிமுகம்

குன்றில் குதித்த மின்னல்!

செஞ்சோற்றுக் கடன், ஆசிரியர்: நாவல் குமாரகேசன், வெளியீடு: நறுமுகை, 29/35, தேசூர் பாட்டை, செஞ்சி - 604202, விலை ரூ.40/-



நாம் அனைவருமே சந்தித்திருக்கக்கூடிய நபர்களாக ஒரு கதாபாத்திரம் அமையுமானால் அது எளிதில் நம்மை வசீகரித்து வாசிக்கச் செய்துவிடும். அப்படி நாமோ, நமக்குத் தெரிந்தவர்களோ, பார்த்த கேட்ட விஷயங்கள்தான் ஒவ்வொரு சிறுகதையின் உள்ளடக்கமும். ஆனால், வாசிக்கும்போது உண்டாகும் அலைகள், முடிக்கும்போது ஏற்படும் நெருடல், ஒவ்வொரு கதையிலும் அழுத்தமாக வெளிப்படுகின்றன. நறுக்குத் தெறித்த மாதிரி பன்னிரண்டு சிறுகதைகளும் ஆசிரியரின் 'எளிமை கண்டு இரங்குவாய்' என்கிற உள்ளத்தின், விரிந்த பார்வையைப் புலப்படுத்துகின்றன.





மகாராணா பிரதாப சிம்மன், ஆசிரியர்: மு.ஸ்ரீனிவாசன், வெளியீடு: விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை-600 002. விலை ரூ.70/-

தென்னிந்தியப் பகுதிகளைவிட, அந்நியப் படையெடுப்பால் அதிகம் பாதிக்கப்பட்டது வட இந்தியப் பகுதிதான். ஹூணர்கள், முகலாயர்கள் என்று அலையலையாய் வந்த ஆக்கிரமிப்புகளுக்கு ஆளான வட இந்தியப் பகுதியில் ஒன்று ராஜபுதனம். ராஜபுதனம் என்று சொன்னால், அது மேவார். மேவார் என்று சொன்னால் ராணா பிரதாப். வாழ்நாள் முழுவதும் போரிலேயே செலவிட்ட பிரதாப சிம்மனை, வரலாற்றின் அடிப்படையிலேயே உணர வைக்கிறார் ஆசிரியர். 'தன்னால் வெற்றி கொள்ளப்படாத வீரன்' என்று அக்பரே வியப்பும் மரியாதையும் செலுத்தினார் என்பதை அழகுற எடுத்தாண்டுள்ளார். ராஜஸ்தானின் நாடோடிப் பாடல்கள், பிரதாபனின் வாள் பாய்ந்த வேகத்தை, 'குன்றில் குதித்த மின்னல்' என்று கொண்டாடுகின்றன. ராஜபுதனத்தின் வீர அறிமுகம் இந்த நூல்!

ஸ்ரீமத் ராமாயணம், வால்மீகி தரும் நவரஸங்கள், சொல்லோவியங்கள், உவமை அலங்காரங்கள். ஆசிரியர்: டி.ஆர்.குப்புஸ்வாமி, கிடைக்குமிடம்: எண்.8, தெற்கு மாட வீதி, திருவல்லிக்கேணி, சென்னை- 600 005. விலை ரூ.200/-

தத்துவச் செறிவு மிக்க ஸ்ரீமத் ராமாயணத்தைப் படிக்க ஆரம்பித்தால், ஒவ்வொரு முறையும் புதுப்புது சிந்தனைகள் ஏற்படுவது இயல்பு. வால்மீகி ராமாயணத்தை, பலமுறை படித்தும் கேட்டும் ரசித்தும் பழகிய ஆசிரியர், முப்பத்தைந்து தலைப்புகளில் ராமனின் கதாரஸத்தைப் பருகத் தருகிறார். பயனுள்ள, அறிய வேண்டிய செய்திகளின் தொகுப்பாக அமைந்திருக்கிறது. ஆழ்ந்து படிப்பவர்களுக்கு அமுத விருந்து!



– ராகவன்

தெரியாமத்தான் கேட்கறேன்...



பா.ஜ.க.வை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு இயக்குகிறது என்பது உண்மையல்ல.

- ஆர்.எஸ்.எஸ். புதிய தலைவர் மோகன் பாகவத்.

இயக்கலை, ஆக்கிரமிக்குதுன்றதுதானே உண்மை?

மாநகராட்சி பள்ளி மாணவர்களின் வருகை, மதிப்பெண் விவரம் எஸ்.எம்.எஸ். மூலம் பெற்றோருக்குத் தெரிவிக்கும் புதிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வாத்தியாருங்க வருகையை யாருக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பித் தெரிவிக்கலாம்?

பா.ஜ.க. வேட்பாளர் (கம்பம்) தி.மு.க.வுக்குக் கட்சி மாறினாலும், தாமரை சின்னத்துக்கே வாக்களிக்க பா.ஜ.க. முடிவு.

- இல.கணேசன்

உங்க சின்னம் தாமரைப்பூவா இலுப்பைப்பூவா?

இந்திய அரசியல் ஜாதகத்தைக் கணிக்கும் இடத்தில் தி.மு.க. விரைவில் இடம்பெறும்.

- கருணாநிதி

அப்போ பகுத்தறிவுப் பாசறை எத்தனாவது இடத்துல இருக்கும்?

இரண்டாயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய மின்வாரிய அதிகாரி கைது. லஞ்சப் பணத்தில் மது அருந்தச் சென்றபோது போலீசார் மடக்கிப் பிடித்தனர்.

அநியாயத்துக்கு டாஸ்மாக் வருமானத்தைக் குறைச்சதுக்காக, போலீஸாருக்கு அபராதம் போடுவீங்களா?

தமிழ்நாட்டில் இனிமேல் விடுதலைச் சிறுத்தைகள் இன்றி எந்த அணியும் வெற்றிபெற முடியாது!

- திருமாவளவன்

வெற்றி பெறக்கூடிய அணியோடத்தான் விடுதலைச் சிறுத்தைகள் இருக்கும்னு சொல்றீங்களா?

சுருளிப்பட்டி தைலா

அறிவாலயம் இப்போதெல்லாம் அடிக்கடி திருவிழாக் கோலமாகக் காட்சியளிக்கிறது. காரணம், அ.தி.மு.க.விலிருந்தும், ம.தி.மு.க.விலிருந்தும் பிரமுகர்களும், தொண்டர்களும், கூட்டம், கூட்டமாக மீண்டும் தி.மு.க.வில் இணைவதுதான். அதிலும் குறிப்பாக சமீபத்தில் 'இரண்டு ராதாகிருஷ்ணன்'கள் இணைந்தபோது, முதல்வர் மிகவும் மகிழ்ச்சியாக அவர்களை வரவேற்றார் என்பது அவரது பேச்சில் தெரியவந்தது.





● அனிதா ராதாகிருஷ்ணன்



● ராதாகிருஷ்ணன்

துரத்தும் ஜெ... தாங்கும் மு.க..!

அனிதா ராதாகிருஷ்ணன் பற்றி, ஆஹா, ஓஹோவென்று புகழ்ந்து பேசிய நான்கைந்து மாதங்களுக்குள் அவரையே நீக்க வேண்டிய அவசியம் வந்துவிட்டது ஜெயலலிதாவுக்கு. ஜெ. குடும்ப பாலிடிக்ஸில் (அதாங்க சசிகலா குடும்பம்) தினகரன், மகாதேவன் இடையே நடந்த பிரச்னையில் பலிகடா ஆக்கப்பட்டிருக்கிறார் அனிதா. தம் தரப்பு விளக்கத்தைச் சொல்ல வழக்கம்போல அவருக்கு வாய்ப்பு தரப்படவில்லை. இதுதான் சமயமென்று அழகிரி அவருக்குத் தூண்டில் போட, மதுரையில் தமது வியாபாரத் தளத்தை அமைத்திருக்கும் அனிதா, சௌகரியமாக தி.மு.க.வில் இணைந்துவிட்டார்.

வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் தி.மு.க.விலிருந்து ம.தி.மு.க.வுக்கு வந்தபோது, 'பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கொடுக்கப்படும்' என்று உறுதிமொழி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் தேர்தலில் அவருக்கு ஸீட் கொடுக்கப்படாதது மட்டுமல்ல, வைகோ அவரை முற்றிலும் ஓரங்கட்டி வைத்துவிட்டார். ''இப்படி தி.மு.க - ம.தி.மு.க. என்று கபடி ஆடிக்கொண்டிருப்பதேன்?'' என்று வழக்கறிஞர் ராதாகிருஷ்ணனிடம் கேட்டோம். ''மறுமலர்ச்சி என்ற பொய்யான தளத்தை நம்பிப் பயணித்து விட்டேன். திசை தடுமாறி நின்ற என்னை, தாயுள்ளத்தோடு கலைஞர் அரவணைத்துக்கொண்டார். மறுமலர்ச்சிக் கூடாரம் விரைவில் காலியாகும்'' என்கிறார் ராதாகிருஷ்ணன்.

அவர் சொல்வது போல ம.தி.மு.க.விலிருந்து ஒன்றிரண்டு எம்.எல்.ஏக்கள் விரைவில் தி.மு.க.வில் இணையக்கூடும். அதேபோல அ.தி.மு.க.விலிருந்தும், தே.மு.தி.க.விலிருந்தும் முக்கியமாக மாவட்டப் பிரமுகர்களை இழுக்கும் வேலையும் நடந்து கொண்டிருக்கிறது.

இப்படிப் பல பிரமுகர்கள் சேரும்போது கலைஞருக்கு உள்ள தர்மசங்கடம், அவர்கள் எல்லோருக்கும் ஒரு கட்சிப் பதவி கொடுக்க வேண்டுமே என்பதுதான். ''இந்த நிலையில் தேசியக் கட்சியாக தி.மு.க. உருவாகும்'' என்று கலைஞர், வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் இணையும்போது பேசியது பல்வேறு ஊகங்களை உருவாக்கியிருக்கிறது.

- ப்ரியன் படம்: **ராஜன்**

''முழுப்பரீட்சை வரப்போகுது கவனம் தேவை. வகுப்பில் இருக்கிற அத்தனை பேரும் பாஸாக வேண்டும் ஜாக்கிரதை! சொல்லிட்டேன்'' - பள்ளிக்கூடங்களில் ஆசிரியப் பெருமக்களின் எச்சரிக்கை கலந்த அறிவிப்புகள்.

''இந்தத் தேர்வுதான் உன் வாழ்க்கையைப் புரட்டிப்போடப்போகிற தேர்வு, இதுல நீ தோத்தே, பிறகு எப்பவும் ஜெயிக்கமாட்டே, ஞாபகம் வச்சுக்கோ'' - வீட்டில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லும் 'மிரட்டல்' வாசகங்கள்.

மந்திரவாதிக்கு நடுங்கும் சிறுபிள்ளை போல, நம் வீட்டுப் பிள்ளைகளுக்குத் தேர்வு என்றாலே அச்சம், திகில், மரணபயம் என்கிற நிலை!

இம்மாதிரியான சூழ்நிலையில் 'வெற்றி வாசல்' என்ற தன்னம்பிக்கை நிகழ்வில் பங்கேற்க நண்பர் மரபின்மைந்தன் முத்தையா அழைக்க, அங்கே கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்து நான் பயந்துபோனேன்.

நேரடியாகப் பேச்சைத் தொடங்காமல், வந்திருப்பவர்களின் கேள்விகள், சந்தேகங்கள், விருப்பங்கள் போன்றவற்றைச் சிறு தாளில் எழுதச் சொல்லி, வாங்கி வைத்துக் கொண்டேன்.

'அடேயப்பா... எத்தனை எத்தனை கேள்விகள்? அத்தனைக்கும் பதில் சொல்ல நேரம் போதாதே!' என எண்ணி, பொதுவான சில வினாக்களை மனதில் வைத்துக் கொண்டு பேச்சைத் தொடங்கினேன்.

''நான் முதன்முதலாக அமெரிக்கா சென்ற போது நியூயார்க் விமான நிலையத்தில் இறங்கினேன். உலகின் மிகப்பெரிய விமான நிலையம். அமெரிக்காவின் புகழ்பெற்ற ஜனாதிபதியான ஜான் எஃப் கென்னடியின் பெயரில் அமைந்த அந்த விமானநிலையத்தில் நடந்துவந்து, தானே இறங்கும் படிக்கட்டுகளில் நின்றேன். படிக்கட்டு கீழே செல்லச் செல்ல, கீழ்த்தளத்திலிருந்த, 70 எம்.எம் சினிமாத்திரை போன்ற கணினித் திரையில் 'failure' 'failure' 'failure' என்ற எழுத்துக்கள் மேல்நோக்கிப் போய்க்கொண்டிருப்பதை ஆச்சரியத்துடன் பார்த்தேன்.

'என்னடா இது...' அமெரிக்காவில் நாம் பார்க்கும் முதல் வாசகமே failureதானா?' என்று குழப்பத்துடன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே,

'failure' 'failure' 'failure' but he became the President of America - ABRAHAM LINCOLN

இந்த எழுத்துக்களுக்குப் பின்னே மிகப் பிரமாண்டமான லிங்கனின் முகம் தோன்றிப் புன்னகையுடன் வரவேற்க, உற்சாகத்துடனும், ஆனந்தத்துடனும் அமெரிக்காவில் காலடி எடுத்துவைத்தேன்.

தோற்காத மனிதனுக்கு வெற்றிக்கனியின் இனிமையும் சுவையும் தெரியாது. தாகமுள்ளவனுக்கே தண்ணீரின் அருமை தெரியும்'' எனச் சொல்லி முடித்துவிட்டு,

''தோல்வியடைந்த யாரேனும்





சிரிப்போம் ஜெயிப்போம்!

அதற்கான காரணத்தை ஆராய்ந்ததுண்டா?'' என்று சபையைப் பார்த்துக் கேட்டேன்.

''தோத்தவுடனே செத்துப் போயிட லாம்னு தோணுதே தவிர அதற்கான காரணத்தை யார் ஸார் யோசிக்கப் போறாங்க?''

''இங்குதான் நீங்கள் மறுபடியும் தோற்கிறீர்கள். தேர்தலில் தோற்ற எந்த அரசியல்வாதி யாவது தான் தோற்றுப்போனதை ஒத்துக்கொண்டதாகச் சரித்திரம் உண்டா?'' என்று கேட்டு விட்டுத் தொடர்ந்தேன்.

'' 'வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம்'

'எதிர்க்கட்சிகளின் சதி' என்றுதான் சொல்வார்களே தவிர, அடுத்த தேர்தலை எதிர்நோக்க அப்போதே தொடங்குவார்களா? இல்லையா?''

''ஆமாம் ஸார் நேற்று நான் ஒரு புதுக்கவிதை படித்தேன்.

'நான் வென்றால் காலத்தின் வரலாறு



பயமில்லை

தோற்றால் இயந்திரத்தில் கோளாறு' '' கவிதையைச் சொன்னதும் சிலர் கைதட்டினார்கள்.

''இன்னும் கேளுங்கள்... மகாபாரதப் போர் பதினெட்டு நாட்கள் நடந்ததாகக் கேள்விப்படுகிறோம்.

10ஆம் நாள் பீஷ்மர் அம்புப் படுக்கையில் வீழ்கிறார்; 13ஆம் நாள் அர்ச்சுனனின் மகன் அபிமன்யு கொல்லப்படுகிறான்; 15ஆம் நாள் துரோணரின் மரணம்; 16ஆம் நாள் கர்ணன் மடிந்தான்.

ஆனாலும் போர் நடந்துகொண்டே இருந்தது. முடிவில் பாண்டவர்களுக்கு வெற்றியும் கிடைத்தது. தோல்வியால் மனம் சோர்ந்துபோனால், வெற்றிக்கனியை எப்படிப் பார்ப்பது? எந்த நிலையிலும் மனச்சோர்வு ஏற்படலாகாது'' என்றேன்.

''**ஸா**ர் நீங்கள் ஆபிரஹாம்லிங்கன் தொடர்ந்து தோல்வி அடைந்ததாகவே கூறினீர்களே... அவர் சிறு வெற்றிகூட அடையவில்லையா?'' என ஒருவன் வேகமாய்க் கேட்டான்.

''அருமையான கேள்வி. அவர் வெற்றி அடைந்த நிகழ்வையும் கூறுகிறேன் கேளுங்கள். அவர் அடைந்த வெற்றியால் ஓர் இளைஞனின் உயிர் காக்கப்பட்டது.

ஆபிரஹாம்லிங்கன் சட்டம் பயின்று வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

கு. ஞானசம்பந்தன்

“ஜோக்....கு”

- பணம் போட யாரும் வரவில்லை ஃபைனான்ஸ் கடை வைத்தவர் முன்னாள் ஓட்டப்பந்தய வீரர்!

- ஆம்புலன்ஸ் வேனில் அடிபட்டான்
நல்ல காலமா?
போதாத காலமா?

–ராம் ஆதிநாராயணன்

- இந்தியாவில் வெறுமில்லை காரல்மார்க்ஸ்
எல்லா தலைவர்கள் மீதும்
எக்கச்சக்கமாய் ஊழல்மார்க்ஸ்

–வீ.விஷ்ணுகுமார்

வருமானம் அதிகம் இல்லை. ஒரு ஏழைப் பெண் தன்னுடைய ஒரே மகனுக்குத் தூக்குத் தண்டனை என்று கூறி, தன் மகன் நிரபராதி என்றும் அவனைக் காப்பற்றவேண்டுமென் றும் கண்ணீருடன் கூறினாள்.

இரக்கம் கொண்ட லிங்கன் அந்த வழக் கில் வாதாடத் துணிந்தார். வழக்கை நன்கு படித்து மிகச் சிக்கலான நிலையில் இருந்த அந்த நிரபராதியை, தம் புத்திக்கூர்மையான குறுக்கு விசாரணையில் காப்பாற்றிக் காட்டி னார்,'' சபை முழுவதும் மர்மப்படம் பார்க் கும் ஆர்வத்துடன் என் முகத்தைப் பார்த்தபடி இருந்தது.

''பொய்சாட்சி சொன்னவனிடம் லிங்கன் குறுக்குவிசாரணையைத் தொடங்கினார்.

'நீங்கள்தானே இவர் கொலை செய்ததை நேரில் பார்த்த சாட்சி?'

'ஆம் சென்ற மாதத்தில் இரவில் அதனைப் பார்த்தேன்'

'கொலை நடந்த இடத்தில் விளக்கு வெளிச்சம் இருந்ததா?'

'இல்லை'

'பிறகு எப்படிப் பார்த்தீர்கள்?'

'நிலவு வெளிச்சத்தில் பார்த்தேன்'

'நீதிபதியவர்களே வழக்கு முடிந்து விட்டது. இவர் பொய் சொல்கிறார். கொலை நடந்தது செப்டெம்பர் மாதத்தில். பௌர்ண மிக்குப் பிறகு தேய்பிறையில் பின்னிரவில் தான் நிலவு தோன்றும். அதிகாலையில் மறையும். கொலையை இவர் நேரில் பார்த்த தாகச் சொல்லும் நேரம் இரவு 7 மணி. அன் றைக்கு நிலவு வந்ததே இரவு 10 மணிக் குத்தான். இதோ இந்த நாட்காட்டியையும் அதில் போடப்பட்டுள்ள, நிலவின் உதய நேரத்தையும் பாருங்கள்' என நீதிபதிக்கு நாட்காட்டியைக் காட்ட, நிரபராதி விடுவிக் கப்பட்டார். லிங்கனின் புகழும் அமெரிக்கா வெங்கும் பரவத்தொடங்கியது'' என்று சொல்லிமுடித்தபோது சிலர் கைதட்டினார் கள்.

''ஐயா தோல்வியிலும் வெற்றி கண்ட வர்கள் உண்டு என்று திருவள்ளுவர் சொல் கிறாரே...'' என்று ஒரு இளைஞர் சற்றுக் குறும்புடன் கேட்டார்.

''இவர் விளையாட்டாகக் கேட்டாலும் அதுவும் உண்மைதான். திருவள்ளுவர் காமத்துப்பாலில் 'ஊடல் உவகை' என்ற அதிகாரத்தில்

'ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும்'

என்று பாடியிருக்கிறார்'' எனச் சொன் னேன்.

''ஐயா தயவுசெய்து இதற்கு விளக்கம் சொல்லி விடுங்கள். இல்லாவிட்டால் என் நெஞ்சு பொறுக்காது'' என்று ஒருவர் நாடகப் பாணியில் கூறினார்.

''காதலிக்கும்போதும், குடும்பத்தில் மனைவியுடன் வாழும்போதும் இருவருக் கும் இடையில் ஊடல் வருமாம். அதாவது சிறு சண்டை, கோபம் வருமாம். அதில் தங்கள் 'ego'வை விட்டுக் கொடுப்பவர் தோற்றவர் போலக் காணப்பட்டாலும், முடி வில் அவர்களே வெற்றி அடைந்தவர்கள் என வள்ளுவர் கூறியுள்ளார்'' என நான் சொல்ல, அங்கிருந்த இளைஞர்கள் முகத்தில் தோன்றிய வெற்றிப் புன்னகைக்கு விலையே சொல்ல முடியாது!

(வெற்றி தொடரும்)



கல்கி ஆழ்வார்கள்!

எலியைப் பிடித்து வலையை விரித்து உலகை ஆராயும் இன்றைய இளைஞரில் பலருக்கு, முந்தைய தமிழகமும் அதன் சரித்திரமும் என்னவாக இருந்தன என்று அறியும் ஆவல் அதிகம்! அமரர் கல்கியின் 'பொன்னியின் செல்வன்', அவர்களுக்கு தமிழக சரித்திரத்தின் ஒரு பொற்காலத்தைப் படம் பிடித்துக் காட்ட, அவரது எழுத்திலும், வர்ணனைகளிலும் ஆழ்ந்து, ஆழ்ந்து, அவர்கள் கல்கி ஆழ்வார்கள் ஆகிப் போனார்கள்! இரண்டே பேரில் தொடங்கிய எண்ணிக்கை இரண்டாயிரம் ஆழ்வார்களாக ஆகிப்போனது! அவர்களில் பெரி(ய)யாழ்வாரான சிவபாத சேகரன் அத்தனை ஆழ்வார்களையும் பொன்னியின் செல்வன் வரலாற்றுப் பேரவை என்னும் இணையதளத்தில் இணைத்தது மட்டுமின்றி, ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று வெகுசிறப்பாக ஒரு விழாவும் எடுத்தார்.

விளக்கேற்றி, கல்கி ராஜேந்திரனின் வாழ்த்துரையைச் சிறப்புரையாக வழங்கி, விழாவைத் தொடங்கி வைத்தார் கல்கி ஆசிரியர் சீதா ரவி.

பொன்னியின் செல்வனை அனிமேஷன் குறும்படமாக்கும் தமது முயற்சியின் முன்னோட்டத்தைத் திரையிட்டுக் காட்டினார் ரமேஷ். பின்னர் தொடர்ந்தது ஆராய்ச்சியாளர்களின் ஒலி-ஒளித் தொகுப்பு வரிசை. முனைவர் எஸ்.ராஜவேலு, முனைவர் பி.ஜெயகுமார், முனைவர் வி.செல்வகுமார், பி.எஸ்.ஸ்ரீராமன் ஆகியோரின் ஆய்வுகள், குறும்படங்களாகக் காட்சி மொழியில் பேசின.

வைரமுத்து தமது தலைமையுரையில் மன்னன் ராஜராஜ சோழனை எண்ணி உணர்ச்சி வசப்பட்டார். தமிழைப் போலவே தமிழர் சரித்திரமும் சாகாவரம் பெற்றது என்பதைத் தெளிவாக்கினார். பேரவையின் வளர்ச்சிக்கு இருபத்தைந்தாயிரம் பொற்காசுகள், மன்னிக்கவும், ரூபாய் அன்பளித்தார்.


பிற்பகலிலும் தொடர்ந்தது விழா. கலைமாமணி விக்கிரமன், கௌரி ராம் நாராயண், குமாரவேல், வி.ஸ்ரீராம் ஆகியோருடன் கலந்துரையாடலும், கேள்வி பதிலும், நாட்டிய நாடகத் தமிழில் சரித்திரக் காட்சிகள் பற்றிய விளக்கங்களும், சரித்திர சந்தேகங்களுக்கான விளக்கங்களுமாக வெகு சுவாரஸ்யமாக நடந்தது.

பொன்னியின் செல்வன்... வரலாற்றுப் புதினம் மட்டுமல்ல - வளம் மிகு தமிழனின் வாழ்வியல் வரைபடம். தமிழ் தன்மானத்தைப் போதிக்கும் பாசறை. தமிழ் வாசிப்பில் ஒரு தலைமுறையே ஆழங்கால்படக் காரணமாக இருந்த படைப்பு. வாசிப்புச் சூழல் குறைந்து, ஆங்கில மோகப் பிடிக்குள்ளிருக்கும் மாணவர்கள் மத்தியில் வகுப்பறையில் பொன்னியின் செல்வனை வாசித்துக் காட்டும் யோசனையைக் கல்வித்துறை ஏற்றால், தமிழ்ப் பற்றும் இன அறிவும் தன்மானமும் வாசிப்பு ருசியும் பெருகுமல்லவா? கல்வித் துறை காதுகளுக்கு இச்செய்தியைக் கடத்த வேண்டும் பொன்னியின் செல்வன் பேரவை.


- விஷ்வக்

ஸ்வானுபவா 2009

அமர்க்களமாக நடந்தேறிய இந்த ஆண்டு 'ஸ்வானுபவா' இசை நிகழ்ச்சியில் மதம், மொழி



பாதங்களினால் நாட்டியமாடினார் என்று சொல்வதைவிட, பாதத்தில் மிருதங்கம் வாசித்தார் என்றே கூற வேண்டும். அவர் நடனமாடும் பாடல் வரிகள் புரியாவிட்டாலும், முகபாவமும் கைகளின் அசைவுகளும் கால் சலங்கையின் ஓசையும் அந்த வரிகளை அப்படியே காட்சியாக மொழிபெயர்த்துப் புரியவைத்தன.
(பிர்ஜுமஹாராஜின் நடனம் குறித்து)
- இரா.கதிர்காமன்,
தமிழ்நாடு இசைக் கல்லூரி.



பெலாரஸிலிருந்து வந்திருந்த மாணவி நதாலயா:
"எனக்கு இந்திய இசையின் மீதும் இந்தியக் கலைகளின் மீதும் எப்போதுமே ஆர்வம் அதிகம். இப்படி ஒரு வாய்ப்பை - அதாவது பல தலைசிறந்த இசைக் கலைஞர்களின் கச்சேரிகளைக் கேட்டு ரசிக்கக்கூடிய இந்த அரிய வாய்ப்பை, கடவுள் எனக்கு தயவுகூர்ந்து ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்"

என்ன தவம்



"எப்படி ஆலாபனை செய்யணும், எப்படி லயம் தப்பாமல் பாடணும், ஸ்வர ப்ரஸ்தாரம்னு நாங்க படிக்கிற ஒவ்வொரு விஷயத்தையும் ப்ராக்டிகலா பார்த்தது ரொம்பவே பயனுள்ளதாக இருந்தது. இந்த நிகழ்ச்சியைக் காண, 'என்ன தவம் செய்தனை?' என்று என்னைக் கேட்டுக் கொள்கிறேன். - அனிதா

அறியாமையைத் தூர்வா
நெஞ்சில் கலை ஊற்றை
பீறிடச் செய்தது. இசை
யிடையே வந்து இன்ப
அளித்து இதயத்தில் நின்றது
துக்கடா டைம் வித் கல்கி!
- குமா



"ஒரே வாக்கியத்தில் சொல்லணும்னா, எஸ்ட் அர் வெஸ்ட் ஸ்வானுபவா இஸ் தி பெஸ்ட்" - ஸ்ரீபிரியகலா, நடன மாணவி, கலாக்ஷேத்ரா

...ன எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு ஈர்ப்போடு வந்த வேடந்தாங்கல் இசைப் பறவைகளின் அபிப்ராயப் பதிவுகள்.




செய்தனை..!

திருப்புகழ் வகுப்பு வரப்பிரசாதமாய் அமைந்தது. 'கைத் தல நிறைகனி...' என்ற அருணகிரியார் பாடலில் இருக்கும் ஒற்றெழுத்துக்களை எல்லாம் நீக்கினால் 200 அக்ஷரம் வரும் என்றதும், மலஹரி என்றால் வியாதியைப் போக்கக்கூடிய ராகம் என்று விளக்கி வலியினை நீக்கக்கூடிய ஒரு பாடலையும் பாடி, அதிலுள்ள தாளம் 16 அக்ஷரம் கொண்டது எப்படி என்று நெய்வேலி சந்தானகோபாலன் விளக்கியது அருமை.

காஞ்சி மகாபெரியவர் திருப்புகழே மருந்து என்றதை நினைவுபடுத்தி, 'அதலசேடனராட அகிலமேரு மீதாட...' என்ற பாடலை ஆனந்த பைரவியில் பாடிக் காட்டி, பின்னர் எல்லோரும் கலபமாய்ப் பாட அம்சத்வனியில் கற்றுக் கொடுத்தது... ஆஹா! அருமை! திருப்புகழ் மகிமையை மாணவர்களின் மனத்தில் பதியனிட்டுப் பயிர்செய்த ஸ்வானுபவா பணி ஆண்டுதோறும் தொடரவேண்டும்.

– பெ.தேவி, பரதம் இரண்டாம் ஆண்டு, கலாக்ஷேத்ரா





தொகுப்பு: நளினி

ஸ்வானுபவாவின் அண்ணா!

முதுபெரும் இசைக் கலைஞர் ஆர்.கே. ஸ்ரீகண்டன். சங்கீத சங்கதிகளைக் குறித்து இவருடன் உரையாடப் போகிறார் சித்ரவீணை ரவிகிரண். இடம்: சென்னை, கஸ்தூரி ஸ்ரீநிவாஸன் அரங்கம் (மியூசிக் அகாடமி). நாள்: ஆகஸ்ட் 28, நேரம்: மாலை 6.30 மணி. பார்வையாளர்களும் பங்கேற்கக்கூடிய இந்த உரையாடலுக்கு ஏற்பாடு செய்திருக்கிறது 'சம்பிரதாயா' அமைப்பு. மேடைக் கச்சேரிகளில் ஒலிக்கும் இசைக்குப் பின்னால் உள்ள மனிதர்களையும் மனோபாவங்களையும் புரிந்து கொண்டு ஆவணப்படுத்தும் இம்முயற்சிக்கு 'சம்வாதா' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஸ்வானுபவாவின் அண்ணா மாதிரி இல்லை?! தொடரவிருக்கும் சம்வாதங்கள் பற்றி அடுத்த வாரம்...



கீதாஞ்சலி பிரியதர்சினி

கவிதைகள்

உன் இனமும் என் இருப்பும்

நான் உன் கவிதைகளை இன்னமும்
வெண்நிறத் தாள்களில் எழுதிக்கொண்டிருக்கிறேன்.
துருப்பிடித்த கேள்விகள் என் கண்முன்
பூமியை நாசம் பண்ணிக்கொண்டிருக்கின்றன.
அவற்றை நான் புதைப்பதுமில்லை
எரிப்பதுமில்லை தோழி - மாறாக
சாபத்தின் உப்பால் பதப்படுத்துகிறேன்.
நேற்றும் நீ துப்பின எச்சில்
என் முதுகில் பான்பராக் கோடென வழிகிறது.
இரவுப் பேருந்தின் பயணிபோல்
அது நின்று கொண்டு உறங்குகிறது.
கனவில் கசங்கி விடாத படுக்கை விரிப்பு
நீலமென கடலாய் விரிகிறது.

எனக்குப் பிடிக்கும்

விற்பனையாகிவிட்ட வீட்டுமனைகள் தோறும்
மேய்ந்து கொண்டிருக்கின்றன ஆடுகள் யாவும்.
நிறுத்தி வைத்த ஸ்கூட்டர் மீது நடக்கின்றன
கலா வீட்டுக் கோழிகள் இரண்டும்.
நாட்டுக்கோழி வளர்ப்பது, சீட்டுப்பணம் பிடிப்பது
பேசிக்கொள்ள ஆயிரம் இருக்கிறது பெண்களுக்கு.
ஆட்கள் வந்தால் குரைத்துத் தள்ளும்
இந்த நாய் வைத்திருக்கிற என்னிடம்
இப்படிப் பரிவுடன் பேச யார் வருவார்கள்
கதை இல்லாத வருங்காலத்தில்
சுயமாய் ஒரு காக்கையேனும் வளர்க்க இயலுமா?

SRUSHTI

The Handicrafts Emporium

Presents


'OVIA KALANJIEM 2009'


24th Aug to 14th Sep

Exhibition cum Sale of Exclusive Collection of Paintings from Various States.









Special Attraction

Unique Creation of Tanjore Paintings by Tanjore Royal Family

Discount 10%



Exclusive Collections of Paintings like Thanjavur Paintings, Ravi Varma Re-Painting, Patta Chitra, Palm Leaf Painting, Silk Painting, Glass Painting, Gem Stone Paintings & Many More. From Various states are on display & Sale.

All Major Cards Accepted... All are Welcome... **... Open on Sunday also ...**

Tamil Nadu Handicrafts Artisans Welfare Association

Srushti Handicrafts Emporium, Sudarsan Building Ground Floor,
Opp. To Adyar Gate / Park Sheraton Hotel.
86, Chamiers Road, Chennai 600 018. INDIA Ph: 91 44-4206 0730.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CS (S) DN / 144 / 09 - 11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka

